தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepam.lk
விலை 20 ரூபா • தீபம் 18 • 22.11.2015

RAJANI TRAVEL
இந்தியாவில் திருமண வைபவத்திற்கு ஏற்ற திருமண மண்டபம் மற்றும் தங்குமிடம் போன்றவற்றை பெற்றிடவும், இந்தியாவில் உள்ள பிரசித்திப் பெற்ற சுற்றுலா தலங்களையும் பார்வையிட சகல வசதிகளையும் செய்து தருகின்றார்கள்...
(0094) 774166369




# ‘மரண’ மன்னார்!
## கதிகலக்கும் வைத்தியசாலைகள்

மன்னார் வைத்தியசாலையைத்தான் இன்றைய திகதியில் பலரதும் கண்கள் மொய்த்தபடியிருக்கின்றன. ஒரு மரணமொன்று சர்ச்சையை கிளப்ப... உறவினர்கள் வைத்தியசாலையின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய... பிரச்சனை தீ பற்றிக் கொண்டது. ஏற்கனவே யாழ் போதனா வைத்தியசாலை மரணமொன்றின் சர்ச்சை அடங்குவதற்குள் மன்னார் சர்ச்சை கிளம்பியுள்ளது.

தொடர்ச்சி 10-ம் பக்கம்




சுமந்திரன் என்றாலே சர்ச்சையென்று ஆகிவிட்டது. அவரை சுற்றிலும் அத்தனை சர்ச்சைகள். வடக்கு முதல்வருக்கும் அவருக்குமான கருத்துப்போர்தான் இன்றைய திகதியில் கூடியிருந்து பேசுபவர்களிற்கெல்லாம் அவல். இந்த விவகாரங்களில் புதிய தகவல்களை அறிவதற்காக சுமந்திரனை தொடர்கொண்டோம். பல்வேறு விடயங்களையும் அவர் மனந்திறக்கும் பேட்டியிது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# ‘ஆசான் விக்னேஸ்வரனில் பெருமதிப்பு வைத்துள்ளேன்’

மனம் திறக்கிறார் சுமந்திரன்



வெளியில் திரியவே வெட்கமாக உள்ளது 4



யா/மெய்கண்டான் மகாவித்தியாலயம் 15



பட,,,பட பாரிஸ் 22

உள்ளே...

# மழை சொல்லும் பாடம்

கடந்த வார பேய்மழை வடக்கு, கிழக்கு முழுவதையும் ஒரு உலுப்பு உலுப்பிவிட்டது. இதற்கு மேலும் வறட்சி வறட்சியென்று கூறிக்கொண்டேயிருப்பீர்களா என்று கேட்கும் பாணியில் கொட்டித் தீர்த்துவிட்டது. வடக்கின் அனைத்து மாவட்டங்களுமே தண்ணீரில் தள்ளாடியது.

வீதிகள், குடியிருப்புகள், நிலங்கள் என பல்வேறு இடங்களில் வெள்ளம் நிறைந்திருந்தது. இன்றும் அது வடியாமல் உள்ளது.

உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றம் (எல்நினோ) செலுத்திய தாக்கம் அதிகரித்த இந்தமழைவீழ்ச்சியென வானிலை அவதான நிலையம் சொல்கிறது. நன்றாக கொட்டித் தீர்ப்பதும், பின்னர் வறட்டியெடுக்கும் வெப்பமும் இதன் இயல்புகள்.

இயற்கையின் இந்த சீற்றம் தானே நிகழ்ந்தல்ல. மனிதன் ஏற்படுத்தியது. இறந்தவர்கள், வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என உலகத்தின் அனைத்து மனிதர்களின் செயல்களின் விளைவுகளிற்கும் வாழும் இந்த தலைமுறை விலை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

காடுகளை அழித்து, நீர்நிலைகளை மாற்றியமைத்து, அதிகரித்த வெப்பத்தை வெளியேற்றியென மனிதர்களின் சூழல் பொறுப்புணர் வின்மையை பெரிய பட்டியலேபடுத்தலாம். ஒரு மரத்தை வெட்டு வதால் என்ன ஆகப்போகிறது, குளிர்சாதன பெட்டியை ஒரு மணித் தியாலம் அதிகமாக இயக்கினால் என்ன ஆகிவிடப் போகிறதென ஒவ்வொரு மனிதனும் சிந்திப்பது, இறுதியில் எல்லோரது தலையிலும் விடிகிறது.

உலகளாவிய ரீதியில் இயற்கை சமனிலையை குலைக்கும் காரியங்களிற்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல இலங்கையர்களின் செயற்பாடு. அண்மைநாட்களாக காடழிப்பு குறித்த செய்திகள் ஊடகங்களில் முக்கிய இடத்தை பிடிக்கிறது. குறிப்பாக வடக்கில் முல்லைத்தீவில் அமைச்சர் ஒருவரின் ஆதரவுடன் நடக்கும் காடழிப்பு. வில்பத்தில் அதனை அரங்கேற்ற முயன்றபோது, தென்னிலங்கையின் அடிப்படைவாத அணி தலையிட்டு இயற்கையை காப்பாற்றியது. அவர்கள் இனவாதிகள், அடிப்படைவாதிகள் அல்லது அதனை கையிலெடுத்தது அரசியல் நோக்கத்துடன் என்பதெல்லாம் வேறுவிடயம். விளைவு இயற்கைக்கு நல்லதாக இருந்தது.

வடக்கில் அப்படியான எந்த எதிர்ப்பு நடவடிக்கையும் எழவில்லை. வடக்கு முதல்வர் மட்டுமே அதில் தலையிட்டு மைத்திரியின் கவனத்திற்கு கொண்டு சென்றார். வேறெந்த எதிர்க்குரலும் எழவில்லை. தென்னிந்திய தமிழர்கள் உள்ளிட்ட இந்திய சமூகங்கள், சிங்களவர்கள் என நமது அயல்சமூகங்களில் உள்ள இயற்கை பற்றிய விழிப்புணர்வு, செயற்பாட்டாளர்கள், தன்னார்வ அமைப்புக்கள் நம்மத்தியில் இல்லாதது மிகப்பெரிய இழப்பே.

அப்படியான சில செயற்பாட்டு முறைமை இருந்திருந்தால் மக்கள் மத்தியில் இயற்கை பற்றிய குறிப்பிடத்தக்கதாக சிறிய விழிப்புணர் வாவது ஏற்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது.

இம்முறை மழைவீழ்ச்சி வடக்கில் நமக்கு முக்கியமாக உணர்த் தியுள்ள பாடம், இயற்கையை புறந்தள்ளிய கட்டுமானத்திட்டங்களினால் ஏற்படும் அனர்த்தம். மழைநீர் நீர்நிலைகளை சென்றடைய முறை யான வடிகாலமைப்பு செய்யாதது அல்லது இருப்பவற்றை பொருட் படுத்தாமல் கட்டுமானப்பணிகள் செய்தால் என்ன நடக்குமென்பதற்கு இம்முறை நல்ல உதாரணம்.

வழமையை விட இம்முறை மழைவீழ்ச்சி அதிகம் என்றபோதும், முதல்நாளிகளின் சாதாரண மழைவீழ்ச்சியே வடக்கின் பல இடங்களை திக்குமுக்காட செய்துவிட்டதென்பதை எல்லோரும் கண்களால் கண்டோம். கடந்த சில வருடங்களாக அபரிமிதமாக எழும் கட்டிடங்கள், நிலங்களை உயரப்படுத்தி, நீரோட்ட பாதைகளை வழிமறித்து கட்டப்பட்டதன் விளைவுகள் அவை. எல்லா வீதிகளும் நீரால் நிறைந்திருந்தது. தாழ்நிலங்கள் சுலபமாக வெள்ளத்தில் மூழ்கியது. ஏன் நிகழ்ந்தது? இதற்கு மனிதர்கள் பொறுப்பில்லையா?


முக்கியமாக அனைத்து வீதிகளுமே காப்பற்ற அல்லது சீமெந்துகளால் அமைக்கப்பட்டுவருகிறது. நீர்வடிகாலமைப்பும் சீமெந்தால் அமைக்கப்படுகிறது. அனேகவீட்டு தரைகள் சீமெந்து தரைகளாகிவிட்டன. இதன்விளைவு நீர் நிலத்திற்கு உறிஞ்சப்படும் அளவில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மிக உயரமாக, நீர்ப்பாதைகளை ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ளன. கிளைவீதிகள் கொன்கிறீட் வீதிகளாகிவிட்டன. விளைவுகள் இரண்டு. ஒன்று வெள்ளம் தேங்கி அந்தப்பகுதி நீரில் தத்தளிக்கிறது. அல்லது நீர் உறிஞ்சப்பட வழியற்று வெள்ளம் தேங்குகிறது.

இந்த இயற்கை அனர்த்தங்கள் எதுவும் தானாக நிகழ்ந்ததில்லை. இந்த பூமி எல்லோரும், எல்லா உயரினங்களும் வாழ வசதியானதாகவே படைக்கப்பட்டுள்ளது. எனினும், மனிதர்கள் ஏற்படுத்தும் சீர்குலைவுகள் ஒட்டுமொத்த உலகத்தையும், அதன் பருவங்களையும் சீரழிக்கிறது. இதன் ஆரம்ப விளைவுகளிற்கு ஏனைய உயிரினங்கள் விலை கொடுக்கலாம். எனினும், இறுதிவிலை கொடுக்க வேண்டியது மனிதர்களாகவே இருப்பார்கள்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com

Home



**Dr.Muttiah Kathiravetpillai Muruganandan**


பருத்தித்துறையில் இன்று ஒரு திரை அரங்கு கூடக் கிடையாது. பருத்தித்துறையில் மட்டுமல்ல வடமராட்சி பிரதேசம் எங்குமே தியேட்டர் எதுவும் கிடையாது. 80 களில் பருத்தித்துறையில் சென்றல் புலோலி பெட்ரோல் செற் அருகே மற்றொன்று இருந்தன. நெல்லியடியில் லஷ்மியும் மஹாத்மாவும் சக்கை போட்டன. இருந்தும் என்ன? தனியார் துறை மருத்துவனான எனக்கும் குடும்பத்தினருக்கும் போக நேரம் வாய்ப்பதில்லை. ஒரு முறை ஏதோ ஒரு ஆங்கில படம். குழந்தைகளுக்கானது. சென்றல் தியேட்டரில். தூங்கிய குழந்தைகளை படம் பார்க்க என்று சொல்லியபோது உற்சாகமாக வந்தார்கள். படம் தொடங்கி சில நிமிடங்களில் திடீரென நிறுத்தி ஸ்லைட் போட்டார்கள். அவசர நோயாளி காத்திருப்பதால் என்னை உடனடியாக வரும்படி. அழ அழ குழந்தைகளை தூக்கிக் கொண்டு டிஸ்பன்சரி திரும்ப வேண்டியதாயிற்று. அதன் பின்னர் நான் பருத்தித்துறையில் படம் பார்க்க போவதையே நிறுத்தி விட்டேன். இந்த மஹா லக்சிமி திரையரங்கம் இடிந்து பாழ்பட்ட நிலையில் இருப்பதை அண்மையில் கண்டேன். இதில் நான் முன்பு படம் பார்த்ததில்லை. எப்போ கட்டப்பட்டது என்பதும் ஞாபகத்தில் இல்லை பல வீடுகளில் இப்போ ஹோம் தியேட்டர்கள் வந்து விட்டன. யாருக்கும் திரைப்பட அரங்களுக்கு செல்ல நேரமும் இல்லை. அதனால்தான் இது இவ்வாறு பாழடைந்த கிடக்கிறது.



Like Comment Share

# க்ளிக் பக்கம்

அண்மையில் விடுவிக்கப்பட்ட வளலாய் கிராமத்தில் எடுக்கப்பட்ட படம். நீண்ட அகதிவாழ்வின் பின்னர் வாழ்வைத் தொடர காத்திருக்கும் மக்கள் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.
என்னைப்பற்றி: யாழ் பல்கலைகழகத்தின் ஊடகவியல் கற்கைநெறியை தொடர்கிறேன். புகைப்படங்கள் மீதான ஆர்வத்தை கற்கைநெறி தூண்டிவிட்டது.



படப்பிடிப்பாளர்:
**எஸ்.ரி.விஷ்ணு**
இடம்:
**வளலாய்**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com



கடந்தவார கலக்கல்

கடந்தவாரம் தீபத்தின் சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட படங்களில் கட்டுக்கடங்காமல் பகிரப்பட்டது இந்தப்படம்தான். சுதுமலை முருகமூர்த்தி ஆலயத்தின் சூரன்போர். ஆலயத்தை சூழ பெருவெள்ளம் நின்றபோதும், சூரன்போர் நடந்தது.

facebook

**Briyanthy Arumaithurai**
ஓ பக்த வெள்ளம் எண்டுறது இத தானா

**Selvam Sajanthan**
பாராட்டப்பட வேண்டிய பக்தர்கள்

**David Thurai**
பசியோட எவ்வளவு பேர் இருக்கிறார்கள் அவங்களுக்கு உதவி செய்யுங்க

**Theepan Sivanesan**
சூரன் ஒரு தமிழ் மன்னன் அவனை கொலை செய்வதை கொண்டாடுவதை விட்டு வந்தேறி நச்சு அரசியல் வாதிகளை பொம்மைகளா வைத்து வதம் செய்வது போல கொண்டாட வேண்டும்

**Mohana Dharshiny**
சூரனுக்கு உள்நீச்சல் ல தப்பிக்க சான்ஸ் இருந்தது.
மிஸ் பண்ணிட்டாரே

**Nila Loganathan**
உண்மைய சொல்லுங்க...மழைக்க நனைஞ்சு, வெள்ளத்துக்க அழைந்து பஃன் எடுக்கத்தானே சூரன் போர் செய்தனியல்?
கக்கருமம் புடிச்சவங்களே...
பக்தியாம்...
ஸ்டாண்ட் வெச்சு வீடியோ எடுக்கிற...



Ashroff Shihabdeen

## சமூகக் கடமை நமக்கும் உண்டு!

இலங்கையில் உள்ள பிரதேசங்களில் அன்மைக்காலமாக உடைந்த பாலங்கள் இருப்பின் அதனை படத்துடன் அத்துடன் பொதுமக்கள் அப் பாலத்தினால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் படும் கஸ்டங்களையும் எழுதி அனுப்பி வையுங்கள்.
நேற்று முன்தினம் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் உள்ள இலங்கை பொறியற் கூட்டுத்தாபணம் மற்றும் அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனங்கள் பாரிய இயந்திரங்கள் மற்றும் பொறியியலாளர்கள் அலுவலகத்தில் இருந்து கொண்டு கோடிக்கணக்கில் சம்பளம் பெறுகின்றனர்.
இவர்கள் கடந்த 6 மாதகால புதிய நிர்மாணத்திட்டங்கள் கிடைக்கவில்லை என அலுவலகத்தில் தங்கி பாரிய சம்பளத்தைப் பெறுகின்றனர்.
இந்த நிறுவனங்களின் வேலைத்திட்டங்களை ஆராய்நத் அமைச்சர் சஜித் பிரேமதாச அமைச்சின் ஊடக அலுவலர்களை அழைத்து உடனடியாக கடந்த 6 மாத காலத்திற்குள் வெளிவந்த சகல சிங்கள, ஆங்கில. தமிழ் பத்திரிகைகளில் பாலங்களைத் திருத்தித் தருமாறு படத்துடன் பிரதேச பத்திரிகையாளர்களினால் பிரசுரித்த பேப்பர் கட்டிங்களை தனக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டியுள்ளார்.
அதனையெல்லாம் சேகரிதது நாட்டில் உடைந்துள்ள பாலங்களை திருத்தியமைப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து வருகின்றார். அத்துடன் மேற்படி நிறுவனத்தின் உள்ள சகல இயந்திரங்கள் மற்றும் ஊழியர்களை பயண்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கின்றார்.
ஆகவே தங்களது பிரதேசத்தில் பாலங்கள் உடைத்திருந்தால் அதனை படம் எடுத்து அப்பிரதேச விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.
அஸ்ரப் ஏ சமத்
ஊடக அலுவலகர்
வீடமைப்பு அமைச்சு
பத்தரமுல்ல.



**Ahilan Nadarajah**
மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நம்மால் எதுவும் செய்ய முடியாவிட்டால் கொஞ்சம் கவலையாத்தான் இருக்கும். ஒரு ஆத்தலுக்கு குழந்தைகளைப் பாத்து ஒரு பாட்டு வேணுமெண்டா பாடலாம்.
'வெள்ளத்தில் கல்லெறிந்து விளையாட வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி விழுந்தெழும்ப வேண்டாம்'

facebook



**Bella Dalima**
வாழ்வதற்கான செலவு மிகக்குறைவே..
அடுத்தவரைப் போன்று வாழ்வதற்கான செலவுதான் மிக அதிகம்.



**Pirainila Krish**
வீட்டில ஒழுக்குப்பாத்து சட்டிபானை வைக்கிறதிலயே வாழ்க்கை போயிடும்போல.
ஒழுகிறது தான் ஒழுகுது ஒரு டிசைனுக்கெல்லே ஒழுகுது.



**S.P. Thas**
பிரான்ஸ் ல குண்டு வெடிச்சிச்சே மச்சி. நீ எப்படி பாதுகாப்பா இருக்கியா?
அடப் போடா. இலங்கை ஆர்மிக்காரன் அடிச்ச பல்குழல் குண்டுலையே ஓடி உயிரை காப்பாத்தினவன் இது எல்லாம் பெரிய மேட்டரே இல்லை எண்டுறான் பிரான்ஸ் நண்பன்.

facebook



**மன்னார் அமுதன்**
வதம் செய்ய எனக்கொரு வாய்ப்பு வேண்டும். சுற்றிலும் எத்தனை சூரன்கள்...



**ஜீ உமாஜி**
எதை நீ எடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது கொன்னேபுடுவன்..
மருவாதியா வச்சுட்டுக் கிளம்பு
என்றான் கிருஷ்ணன்

ஆதரவு வெள்ளம்... ஆதரவு வெள்ளம் என்கிறார்களே... அது இதுதானா?



படக்குறிப்பு: யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இணைய யன்னல்



நல்லூர் கந்தசுவாமி கோவில் சூரன்போரில் நல்லூர் கல்வியங்காட்டில் வாழும் செங்குந்தர் மரபைச் சேர்ந்தவர்கள் முருகனுடைய நவவீரராகக் கலந்து கொள்வது தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ளது. இம்முறை சூரன்போருக்கு முன்னரான கிளிக் ஒன்று.



# ‘வெளியில் திரியவே வெட்கமாக உள்ளது’

## பிணையில் வந்தவரின் ‘பகீர்’ பேட்டி

எஸ்.என்.நிக்ஷன்

அரசியல்கைதிகளாக சிறையில் உள்ளவர்களிற்கு கட்டளையிட்ட தளபதிகள் சுதந்திரமாக, பாதுகாப்புடன் திரிகிறார்கள். அவர்களின் கட்டளையை ஏற்றுச் செயற்பட்டவர்களை மட்டும் சிறைகளில் அடைத்து வைப்பது என்ன நியாயம்?

இப்படி கேள்வியெழுப்புகிறார் பொன்னுத்துரை கணேசன். இதுவரை அரசியல் கைதி. இப்பொழுது பிணையில் விடுதலையான அரசியல்கைதி.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பொன்னுத்துரை கணேசன், நீண்ட சிறைவாசத்தின் பின்னர் விடுதலையாகி குடும்பத்துடன் இணைந்துள்ளார். பலவருடங்களாக வெறிச்சோடிப் போயிருந்த வீடு மீண்டும் களைகட்டியுள்ளது. ‘ஆனந்தம் விளையாடும் வீடு’ என்பார்களே. அப்படி குதூகலகமாக உள்ளது கணேசனின் வீடு. நீண்ட சிறைவாசத்தின் பின் வீடு திரும்பியுள்ள அப்பாவிற்கு பார்த்து பார்த்து உபசாரம் செய்கிறார்கள் இரண்டு பிள்ளைகளும். பலவருடங்களின் பின்னர் கிட்டிய நெகிழ்ச்சி தருணங்களிற்கிடையிலும், கணேசன் தீபத்திற்கு வழங்கிய நேர்காணல் இது.

**கேள்வி: உங்கள் மீதான குற்றச்சாட்டு என்ன?**

**பதில்:** தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியாளர் என்ற காரணத்தை முன்வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் என்னுடைய வீட்டிற்கு வந்தும் ஏனைய இடங்களிற்குச் சென்றும் என்னைத் தேடித்திரிந்தார்கள். இதனையடுத்து நானே கொழும்பு சென்று அங்குள்ள ரி.ஐ.டி தலைமை அலுவலகத்தில் சரணடைந்திருந்தேன். இதன் பின்னர் வெலிக்கடை மகசீன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டேன். நீண்ட சிறை வாழ்வின் பின்னர் கடந்த சில தினங்களிற்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றேன். எனினும் தொடர்ந்தும் எனக்கு வழக்கு இருக்கின்றது. வெளிநாடு செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

**கேள்வி: நீண்டகாலம் சிறையில் கழித்துவிட்டீர்கள். இப்போது உங்கள் உடல், உள நிலைமை என்ன? சிறையிலிருந்த காலத்தில் ஏதாவது பாதிப்புக்களை சந்தித்திருந்தீர்களா?**

**பதில்:** ஆம். கைதிகளாக இருந்த போது எமக்கு ஏற்பட்ட வருத்தங்களும் துன்பங்களும் சொல்லில் அடங்காதவை. பலருக்கும் பல நோய்களும் வந்திருக்கின்றன. அதில் உடல், உளரீதியாக பாதிப்புக்கள் எம்மைப் போன்று சிறையில் இருக்கின்ற பலருக்கும் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில் யாரிடம் சொல்ல முடியும்? இதற்கு யார் தான் நடவடிக்கை எடுப்பார்கள்? நாங்களே எங்களை இயலுமான வரை பாதுகாத்துக் கொண்டால்த் தான் உண்டு.

**கேள்வி: உங்களைப் போன்று தற்போதும் சிறையில் இருக்கின்ற கைதிகளின் நிலை எப்படி இருக்கிறது?**

**பதில்:** சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு யாரும் உதவிகளைச் செய்வதில்லை. எமக்காக பலர் கதைப்பதாகக் கூறினாலும் அரசியல்வாதிகளோ அல்லது அரசாங்கமோ எமக்கு உதவிகளை வழங்கியதில்லை. அவர்களின் நிலை மோசமாகவே இருக்கின்றது. பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் பாதிப்புக்களையே எதிர்நோக்கி வருகின்றனர்.

அங்கு சிறையில் நீண்டகாலமாக இருந்ததால் அங்கு நடக்கும் விடயங்கள் பலவும் எனக்குத் தெரியும். அங்குள்ள உண்மையான நிலைமைகள் யாருக்குமே தெரியாது. அங்கே பல இன்னல்களின் மத்தியிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றோம். விடுதலைக்காக தொடர்ச்சியான போராட்டங்களை ஆரம்பித்திருக்கின்றனர். அனைவரும் இணைந்து அங்கே சாப்பாடு தண்ணீர் அருந்தாமல் தங்களது உயிரைத் தியாகம் பண்ணுவதற்கும் துணிந்துவிட்டார்கள். இப்பொழுது அரசாங்கம் ஒருதீர்வை முன்வைத்து, போராட்டத்தை கைவிட்டுள்ளனர். என்ன முடிவுவருகின்றதென்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி: உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது உங்களுடைய மனநிலை எப்படி இருந்தது?**

**பதில்:** சிறைவாழ்க்கை இனியும் வேண்டாம். எங்கள் குடும்பங்களுடன் இணைந்து நாங்களும் சந்தோசமாக வாழவேண்டுமென்றே விரும்பினோம். அதற்காகவே போராட்டங்களிலும் ஈடுபட்டோம். உயிரிலும் மேலாக விடுதலையை வலியுறுத்தியே போராடினோம். அதற்கமைய விடுதலை ஒன்றே எமது தீர்வாகவும் இருந்தது.



> நாங்கள் சிறைகளில் இருந்தபோது தனிப்பட்ட நபர்களோ, அரசியல் வாதிகளோ, அரசாங்கமோ யாருமே எமக்கு உதவி செய்யவில்லை. எங்கள் குடும்பத்தினருக்கும் எவரும் உதவிசெய்ய முன்வரவில்லை. இப்பொழுதும் அதேநிலைதான்.

**கேள்வி: உங்கள் குடும்பத்தை நீண்டகாலத்தின் பின்னர் சந்தித்திருக்கிறீர்கள். இந்நிலையில் உங்களின் மனஉணர்வு என்னவாக இருக்கிறது?**

**பதில்:** குடும்பத்தினருடன் இணைந்து கொண்டிருக்கின்றமை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. என்றாலும், பொருளாதார கஸ்ரம் தான் பெரிய பிரச்சனை. எப்படி சமாளிப்பதென்று தெரியவில்லை.

எனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்கள் ஐந்து பேரும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் காலத்தில் படிப்பிப்பதென்பது சாதாரண விடயமல்ல. அதற்கு பெரும் செலவாகிறது. பொருளாதார பிரச்சனைகளுக்கு மத்தியிலும் பிள்ளைகள் கல்வியைத் தொடர்ந்து வருவது சந்தோசமாக இருக்கிறது.

**கேள்வி: ஏனைய கைதிகளின் மனநிலை என்ன, என்ன சொல்கிறார்கள்?**

**பதில்:** சிறைகளில் இருப்பவர்கள் அனைவரும்;கண்டிப்பாகவிடுதலை செய்யப்படவேண்டும். அவர்களும் சமூகத்தோடு இணைந்து வாழவே விரும்புகின்றார்கள். அவர்களில் சிலர் ஒருகாலத்தில் போராளிகளாக அல்லது போராட்டத்திற்கு உதவியவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய தலைமைப் பீடங்கள் இன்றில்லை. இருக்கும் தலைமைப்பீடங்களும் சுதந்திரமாக இருக்கின்றனர்.

இந்தக் கைதிகளுக்குப் பின்னால் இன்று யாருமே இல்லை. அவர்கள் தங்களைத் தாங்களே நம்பியே போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். எந்தவொரு அரசியல்வாதிகளையும் நம்புவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. ஏனென்றால் அரசியல்வாதிகளை நம்பிநம்பி ஏமாந்து போயுள்ளோம் என்ற மனஉணர்வே கைதிகளிடம் இருக்கிறது.

அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில் வாக்குக் கேட்கவும் தங்கள் கதிரைகளைப் பிடிக்கவுமே இருக்கின்றார்களே தவிர மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கல்ல. நான் சிறையில் இருந்தமையினாலேயே அரசியல்வாதிகளின் வேடங்களைக் காணக் கூடியதாக இருந்தது.

அரசியல்கைதிகளுக்கு நிரந்தரமான விடுதலை வேண்டும். தற்போது நாட்டில் சமாதானம் ஏற்பட்டு நாட்டில் நல்லாட்சி நிலவி வருவதாக கூறப்படுகிறது. யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் முடிவடைந்தும் அரசியற் கைதிகளை வைத்துக்கொண்டு பழிவாங்குகிறதென்பது ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் மேலும் காலம் வேண்டும் என்று கேட்பது காலத்தை இழுத்தடிப்பதற்கான போக்குச்சாட்டாகும். உண்மையிலேயே தீர்வை ஏற்படுத்துவதற்கு 24 மணிநேரம் போதும்.

**கேள்வி: எல்லா அரசியல் கைதிகளும் போராட்டம் நடத்தினார்கள். சிலர் மட்டும் விடுதலையாகியுள்ளீர்கள். இது உங்களிற்குள் எப்படியான உணர்வை கொடுத்துள்ளது?**

**பதில்:** .சிறையில் பலவருடங்களாக அவர்கள் இருக்கின்றனர். அங்கு இருக்கின்ற அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். இதற்காகவே அனைவருமாக இணைந்து போராடினோம்;. இப்போது எமக்கு பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றோம். அதேபோன்று அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களுடன் இருந்து தற்போது வெளியே வந்திருக்கின்ற நாங்களும் அவர்களின் விடுதலைக்காக உழைப்போம்.

சிறைக்குள்ளிருந்து வெளியில் சென்று எங்களுக்கு என்ன நடக்கின்றதென்பதை உலகிற்கு அறியச் செய்யும்படி அவர்கள் எங்களிடம் மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்கள். நீங்கள் விடுதலையாகி சென்று உங்கள் வேலையை மட்டும் பார்க்காமல் எங்களையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளும் வகையில் எங்களது விடுதலைக்கும் உழையுங்கள் என்றே எம்மை அனுப்பி வைத்தார்கள்.

> கணேசனை பிணையில் எடுப்பதற்கு வீட்டிலிருந்த நகைகளை விற்றதுடன், மகளின் பரீட்சை கட்டணத்தையும் பாவித்து விட்டதாகவும், பரீட்சைக்கட்டணம் கட்டாதமையினால் பாடசாலையில் நெருக்கடியை சந்திக்கும் நிலைமையே உள்ளதாகவும் கண்ணீருடன் கூறினார் மனைவி.

**கேள்வி: நீங்கள் பிடிக்கப்பட்டு சிறையில் வாடுகின்றபோது அதாவது பிணையில் விடுவிக்கப்பட முன்னர் உங்களுக்கு உதவி செய்தவர்கள் யார்?**

**பதில்:** நாங்கள் சிறைகளில் இருந்தபோது தனிப்பட்ட நபர்களோ, அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ ஏன் உறவினர்களோ யாருமே எமக்கு உதவி செய்யவில்லை. எங்கள் குடும்பத்தினருக்கும் எவரும் உதவிசெய்ய முன்வரவில்லை. இப்பொழுதும் அதே நிலைதான்.

சிறைக்குள்ளிலிருக்கும் போது வெளியில் வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. வெளியில் வந்ததன் பின்னர் எப்படி எமது வாழ்க்கைநடத்துவதென்பது குறித்து சிந்திக்கவேண்டி இருக்கின்றது. பொருளாதார நெருக்கடியால் பெரும் கௌரவக் குறைச்சலாக இருக்கின்றது. அதாவது வெளியே சென்று முகங்கொடுப்பதற்குத் தயக்கமாக இருக்கின்றது.

அரசியல் வாதிகளோ அல்லது செல்வந்தர்களோ அல்லது நிறுவனங்களோ யாருமே எமக்கு உதவிக்கரம் நீட்டுவதாகத் தெரியவில்லை. நாட்டுக்காக போராடியவர்கள் அல்லது நாட்டுக்காகஏதோ ஒருவழியில் பங்களிப்புச் செய்தவர்கள் தற்போது கஸ்ரப்படுகின்றார்கள் என்று கைகொடுக்க நினைப்பவர்கள் ஒருவரையும் காணவில்லை.



# சீர் செய்யப்படுமா கல்நாட்டியகுளம் வீதி?

வவுனியா நகர் பகுதியில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கல்நாட்டியகுளம் கிராமத்தின் வீதி மிக மோசமாக உருக்குலைந்துள்ளது.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத இந்த வீதியினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

வீதியை புனரமைத்து தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் கிராமமக்கள் முறையிட்டும் இதுவரை அதற்கு பலன்கிட்டவில்லை. தற்போது பெய்து வரும் மழையினால் மக்களின் சிரமங்கள் மேலும் அதிகரித்துள்ளது.

அண்மையில் நெல் முட்டையுடன் மில்லுக்கு சென்று கொண்டிருந்த வயோதிபரின் சைக்கிள் வீதியை விட்டு இறக்கி அவர் விபத்துக்குளாகிய சம்பவம் குறிப்பிடத்தக்கது. இதுதவிர, வீதி பள்ளம் திட்டியாக உள்ளதால் வாகனங்கள் செல்லும்போது, பள்ளத்திலுள்ள நீர் பாதசாரிகளை தெப்பமாக நனைப்பது சர்வசாதாரண காட்சிகள். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இதனால் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இந்தவீதியை திருத்தித் தருவதாக தேர்தல் காலத்தில் பல்வேறு அரசியல்வாதிகள் வாக்குறுதியளித்திருந்ததை மக்கள் குறிப்பிடுகிறார்கள். இதுதவிர, இந்த விடயத்தில் நேரடி பொறுப்பு கூற வேண்டிய வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் அசமந்தம் மக்களை விசனமடைய செய்துள்ளது.

அதிகாரிகளே, அரசியல்வாதிகளே... இது உங்கள் கவனத்திற்கு!






## 1-ம் பக்க தொடர்ச்சி

ஈழத்தமிழர்களின் அரசியலில் அண்மைக்காலமாக அதிகம் பேசப்படுபவராக ஆகியுள்ளார் சுமந்திரன். அதிகம் சர்ச்சைக்குள்ளானவரும் அவர்தான். அவரது அரசியல் பாதை,பேச்சுக்கள் அதிகம்சர்ச்சைக்குள்ளாகின்றன. கடந்த பாராளுமன்ற தேர்தல் சமயத்திலும் இப்படியான போக்கொன்று இருந்தது. எனினும், அவரது தேர்தல் வெற்றி விமர்சனங்களை செயலிழக்கச் செய்தன.

அந்த அமைதிக்காலம் சிறிது காலம்தான். பின்னர் ஜெனீவா அமர்வுகளை தொடர்ந்து விமர்சனங்கள் சூடு பிடிக்க ஆரம்பித்தன. முஸ்லீம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியது தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்து அதிகம் சர்ச்சைக்குள்ளானது. வடக்கு ஊடகங்களில், சமூகவலைத்தளங்களில் அவர் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களே அதிகம் வெளியாகின. இவை பற்றிய சுமந்திரனின் கருத்துக்கள் என்னவென்பதையும் அறியச்செய்வது ஊடகங்களின் கடமை. எனவே, சுமந்திரனை தொடர்பு கொண்டோம்.

பல்வேறு விடயங்கள் குறித்து சுமந்திரனுடன் உரையாடினோம். குறிப்பாக வடக்கு முதல்வருக்கும் அவருக்குமிடையில் ஏற்பட்டுள்ள 'ஊடக லடாய்', கைதிகள் விவகாரம் என்பன பற்றியெல்லாம் அவருடன் பேசினோம். அவருடனான செவ்வி கீழே.

**சுமந்திரனை மையப்படுத்தி அண்மைக்காலமாக நிறைய சர்ச்சைகள் எழுகின்றன. சுமந்திரன் என்றாலே சர்ச்சை என்பதைப் போன்ற ஊடக பிம்பமொன்று கட்டியெழுப்பப்படுகிறதே...**

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு நான் பலதடவைகள் பதிலளித்து விட்டேன். தேர்தல் நேரத்திலும், அதற்கு முன்னரும் நிறைய கேள்விகள், விளக்கங்கள் கேட்டு பரவலாக சர்ச்சைகள் கிளப்பப்பட்டு இருந்தது. அதற்கு அப்பொழுதே சரியான விளக்கங்களை கொடுத்தேன். அதுமட்டுமன்றி சமூக வலைத்தளங்கள் மூலமாக சுமந்திரனை கேள்வி கேட்கலாம் எனவும், நேரடியான சந்திப்புக்கள் மூலமாகவும், மக்களின் கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்துதான் தேர்தலை சந்தித்தேன்.

சுமந்திரனுக்கு வாக்களிக்க கூடாது என ஒரு பிரச்சார கூட்டமே நடந்தது. அப்படியான சூழ்நிலைகளையெல்லாம் சந்தித்தே தேர்தலில் வெற்றிபெற்றேன். மக்களின் ஆதரவுடன்தான் தேர்தலில் நின்றேன். வெற்றியும் பெற்றேன்.

என்மீதான அவதூறுகளைபரப்பியவர்கள் ஒரு நூறு வாக்குகளைகூட பெறமுடியாமல் ஒதுக்கப்பட்டார்கள். தேர்தலில் மக்களின் தீர்ப்பு சரியாக சொல்லப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் தோல்வியடைந்தவர்கள், அதாவது என்னுடன் தர்க்கித்து வெல்ல முடியாதவர்கள் வன்முறையை உபயோகித்து என்னை இல்லாமல் செய்ய வேண்டும் என எண்ணியுள்ளது தீர்க்கமாக தெரிகிறது. அது தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் புதுவடிவம் பெற்றுள்ளது. அதன் ஒரு வடிவத்தினைதான் நாம் அவுஸ்ரேலியாவில் கண்டோம். இது இங்கேயும் உருவெடுக்க தலைப்படலாம். தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் தான் வன்முறையை உபயோகிப்பதாக நான் எண்ணுகிறேன்.

**வடக்கு முதலமைச்சருக்கும் உங்களிற்குமிடையில் அப்படியென்ன முரண்பாடு...**






தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக முதலமைச்சர் செயற்படவில்லை. அதுதான் அனைத்திற்கும் அடிப்படை. அவர் முதலமைச்சராக வருவதற்கு நாம் கடுமையாக உழைத்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியமான பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும்போது மக்கள் குழம்பும் விதமாக செயற்பட்டார். பலவித அறிக்கைகள் வெளியிட்டார். இது குழப்பகரமான நிலையை ஏற்படுத்தியது. கட்சியிலிருப்பவர்கள் பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதனை நான் கட்சிக்கூட்டத்தில் தெரியப்படுத்தினேன். அவ்வளவுதான். அது திரிபுபடுத்தப்பட்ட செய்தியாக ஒருதரப்பிடம் சென்றதும், முதலமைச்சர் நீண்ட விளக்கத்தை கொடுத்ததும் நடந்தது. ஆனால் அதற்கு தொடர்பில்லாத விடயங்களையும் அவர் சொல்லியிருந்தார்.

ஆனால் இன்றைய நிலையில் நானும் முதலமைச்சரும் எமக்கு இடையிலான கருத்துமோதல்களை ஏற்படுத்திக் கொள்வதைவிட, மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்வது சிறந்தது என்று நினைக்கிறேன். வட மாகணசபை செயற்திறன் உள்ளதாக இருக்கவேண்டுமென்பதற்காகவும் அதிகாரத்தை பயன்படுத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகவுமே நாங்கள் தேர்தலில் போட்டியிட்டோம். இன்றும் வடக்குமாகாண சபை நிர்வாகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கையிலே உள்ளது. அதனை மக்கள்நலன் சார்ந்த விதத்தில் உபயோகிக்கவேண்டும். இரண்டு வருடங்களாகிறது வட மாகாண சபை கிடைத்து. எதிர்காலத்தில் நாம் திறம்பட செயற்பட்டு மக்களுக்கு சேவையை வழங்கவேண்டும். வேறு சிறுசிறு விடயங்களிற்கு முன்னுரிமையளித்து பத்திரிகையின் பக்கங்களை நிரப்புவதை விடுத்து மக்களுக்கு நாம் என்ன செய்யலாம், எவ்வாறான சட்டநடமுறைகளை கொண்டுவரலாம் என்பதை பார்க்கவேண்டும். மக்களின் வாழ்வாதார வேலைத்திட்டங்கள் அபிவிருத்தி விடயங்கள் இவற்றை மட்டுமே நாம் கவனம் செலுத்தவேண்டும்.

**வடமாகாணசபைசெயல்திறன் இல்லாமல் இருப்பதாக வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தவராசா அண்மையில் காட்டமாக குற்றச்சாட்டொன்றை வைத்துள்ளார். இப்படியொரு அபிப்பிராயம் அண்மைக்காலமாக பரவலாக எழுவதைப்போலுள்ளது. வடக்கு மாகாணசபை தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகத்தில் இருப்பதாக சொல்கிறீர்கள். மாகாணசபையின் செயல் திறனை மேம்படுத்தும் செயல்த் திட்டமொன்றும் உங்களிடமில்லையா?**

இதுபற்றி சிந்தித்து செயற்பட வேண்டும். அண்மைநாட்களில் பலரும்பலவித உதவிகளை,ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளனர். அவற்றை ஏற்று செயற்படுவொமாக இருந்தால் பெரும் முன்னேற்றமொன்றை காணலாமென்றுதான் நினைக்கிறேன்.

**அடுத்தது இந்த இன அழிப்பு, சுத்திகரிப்பு விவகாரம். முஸ்லீம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியது இனச்சுத்திகரிப்புத்தான் என நீங்கள் சொன்னது, பரவலான ஊடக கவனத்தை பெற்றிருந்தது. இதையொட்டி சர்ச்சையும் கிளம்பியது. அதேபோல, தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டது இன அழிப்பு என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் இல்லையென ஜெனீவாவில் நீங்கள் சொன்னதாக ஒரு விமர்சனம் வைக்கப்படுகிறதே...**

தமிழ்மக்களுக்கு நடைபெற்றது இனஅழிப்பு என பாராளுமன்றத்தில் பலதடவைகள் நான் குரல் கொடுத்துள்ளேன். வடமாகாணசபை உருவாவதற்கு முன்னரே நான் இது தொடர்பில் குரல் கொடுத்தே வருகிறேன். நான் அவ்வாறான நிலைப்பாட்டினை கொண்டுள்ளபோதும், அவ்வாறு இல்லை என்று என்மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள் சொல்பவர்களின் நிலை மிகவும் கீழ்த்தரமான நிலை என்றே கருதுகிறேன். இவ்வாறான கருத்துக்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன். முஸ்லீம் மக்களுக்கு நடைபெற்றது இனஅழிப்பு என்று நான் கூறவில்லை. இனச்சுத்திகரிப்பு. இரண்டு வீட்டில் களவு போனால் ஒருவீட்டில் நடைபெற்றதுதான் களவு, மற்றைய வீட்டில் நடைபெற்றது களவு இல்லை என யாரும் தர்க்கிக்க கூடாது. நிகழ்ந்ததை நிகழ்ந்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதேவிதமான பாணியை கையாண்டு, தமிழர்கள் மீது இனஅழிப்பு நடக்கவில்லையென்றும் பிறர் சொல்ல வழியேற்படுத்தக்கூடாது.

**அரசியல்கைதிகள் விவகாரத்தில் நீங்களும் கணிசமான பங்களிப்பை வழங்கிவருகிறீர்கள். அந்த விவகாரத்தின் தற்போதைய நிலை என்ன?**

அரசியல்கைதிகள் விடயத்தில் இன்று நேற்றல்ல, நான் பாராளுமன்ற உறுப்பினராக வந்த காலம் முதல் தொடர்ந்தும் பேசிவருகிறேன். சிறைச்சாலைகளுக்கு அடிக்கடி நேரடியாக சென்றுவருகிறேன். கடந்த ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியை சந்தித்து கைதிகள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளேன். இது கைதிகளுக்கும் நன்றாக தெரியும். ஆனால் கடந்த ஆட்சிக்காலத்தில் இதில் எந்தவித முன்னேற்றங்களும் இல்லை. ஆட்சிமாறியபின்னர் கைதிகள் விடயத்தில் அரசாங்கம் மென்போக்கை காட்டியுள்ளது. ஆனால் நடைமுறையில் காலதாமதம் ஏற்பட்ட போது அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்தோம். கைதிகளும் பொறுத்திருந்து பொறுத்திருந்து உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அதன் பின்னர் நாம் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்தி இணக்கப்பாட்டிற்கு





மன்னார் வெள்ளப்பாதிப்பின் சில காட்சிகள் இவை. வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர். மன்னார் ஜீவபுரத்திர் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். அனைவரும் வெளியேறிய பின்னர், வீட்டுகூரையில் ஏறி நின்று வளர்ப்பு நாய் உயிர்தப்பியுள்ளது.

வந்தோம். எனினும் அரசாங்கம் குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றகாலம் தாழ்த்தியதால் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். ஆனால் இம்மாதம் எமக்கு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியின் படி 31 கைதிகளுக்கு பிணை வழங்கப்பட்டது. பின்னர் 8 பேருக்கு பிணையும் வழங்கப்பட்டது. இதனையும் தாண்டி கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவதை நாம் விரும்பவில்லை. புனர்வாழ்வு முறைமைக்கு எதிராக வழக்குகள் கூட தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால் கைதிகளின் எண்ணிக்கை சடுதியாக குறைவதற்கு புனர்வாழ்வும் ஒரு முக்கியமான வழியாக இருந்தது. அந்த வழியிலாவது எஞ்சியவர்களை வெளியில் எடுப்பதே எமது நோக்கம். ஒரு தமிழ்மகனும் சிறையில் இருக்கக்கூடாதென்பதில் உறுதியாக இருக்கிறோம். அனைத்து கைதிகளும் விடுவிக்கப்படும்வரை அனைத்து வழிகளிலும் முயற்சிகள் எடுப்போம்.

**தேர்தலில் நீங்கள் கணிசமான வாக்குகளை பெற்று வெற்றியீட்டியுள்ளீர்கள். என்றாலும், புலம்பெயர்ந்த தமிழ்மக்களில் ஒருபகுதியினர் மத்தியில் உங்கள் மீதுஒருவிதஎதிர்ப்புணர்வுஇருப்பதாக கருதலாமா? அண்மையில் அவுஸ்திரேலியப் பயணத்தின் போதும் சில கசப்பான சம்பவங்கள் நடந்ததே?**

என்மீதான பொய்ப்பிரசாரம் தான் இதற்கெல்லாம் காரணம். வேண்டுமென்று மக்களை திசை திருப்பி என்மீது பொய்யான கருத்துக்களை பரப்பும் செயற்பாடொன்று நடக்கிறது. இதனால் வன்முறைகள்தான் எழுகின்றன.




அண்மையில் சிட்னி,மெல்போர்னில் நடைபெற்றதெல்லாம் வன்செயல்கள்தான். வன்முறையில் இளைஞர்களை கொண்டு செல்வதை முற்றாக தடுக்கவேண்டுமென்பதில் நான் திடகாத்திரமான நிலைப்பாட்டில் இருக்கிறேன். எமக்கு எதிராக தேர்தலில் நின்ற கட்சியொன்று பகிரங்கமாக இப்பொழுது என்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது. அதனை மக்கள் முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும். மக்கள் வன்முறையை முற்றாக நிறுத்தவேண்டும். வன்முறைகளால் பாதிக்கப்பட போகிறவர்கள் மக்களே. வன்முறைகளை தூண்டும்செயல்களை மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களாக இருக்கட்டும் எமது பிரதேசமக்களாக இருக்கட்டும். நான் சொல்வது என்னுடன் கருத்துக்கள் இருந்தால் கேளுங்கள். நாங்கள் பதிலளிப்போம்.

**என் மீதான அவதூறுகளை பரப்பியவர்கள் ஒரு நூறு வாக்குகளைகூட பெறமுடியாமல் ஒதுக்கப்பட்டார்கள். தேர்தலில் மக்களின் தீர்ப்பு சரியாக சொல்லப்பட்டுள்ளது. தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் தான் வன்முறையை உபயோகிப்பதாக நான் எண்ணுகிறேன்.**

மக்களின் கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

**உள்ளக விசாரணைக்கு சம்மதித்து விட்டீர்கள், சர்வதேச விசாரணை இல்லாமல் போய் விட்டது என ஒரு குற்றச்சாட்டு ஜெனீவா அமர்வின்பின்னர்எழுப்பப்பட்டு வருகிறது. நீங்களும் அதுபற்றி அவ்வளவாக ஊடகங்களில் பேசவில்லை. ஏன் இந்த குழப்பம்?**

பலருக்கு உள்ள குழப்பம் இது. ஒன்றில் உள்ளக விசாரணை, அல்லது சர்வதேச விசாரணை என நிற்கிறார்கள். இந்த இரண்டு தெரிவிற்கும் அப்பால் வேறொரு தெரிவில்லையென நினைக்கிறார்கள். ஆனால் அப்படியல்ல. பல வித்தியாசமான முறைகள் உருவாக்கப்படலாம். அப்படியான தொன்றுதான் கலப்பு நீதிமன்றம். அந்த சொல்லை பாவிக்காவிட்டால்கூட, ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தில் பொது நலவாய விசாரணையாளர்கள் பங்குபெறுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக நடப்பது ஒரு உள்ளூர் பொறிமுறையாக இருக்க வேண்டும். உள்ளூரில் அந்த பொறிமுறை அமைய வேண்டும். அப்படியென்றால்த்தான் அந்த நீதிமன்ற தீர்ப்புக்கள் அமுல்படுத்தப்படலாம். முன்னோக்கி நடப்பதற்கான ஏதுநிலைகள் உருவாகும். குற்றங்கள் நடந்த இடத்தில் விசாணைகள் நடக்கலாம்.

இரண்டு அந்தங்களை வைத்துக் கொண்டு உள்ளூர் பொறிமுறை, சர்வதேச பொறிமுறையென வாதிட்டுக்கொண்டிருக்கமுடியாது. அந்த விசாரணைக்குள் சர்வதேச ஈடுபாடு இருக்கும். எனினும், நாட்டு சட்டதிட்டங்களிற்கு உட்பட்டதாக அந்த விசாரணைமுறை இருந்தால்த்தான் அதை நடைமுறைப்படுத்தலாம்.

**ஒரு முக்கியமான கேள்வியொன்று. வடக்கு முதல்வரை சந்தித்தேயிருக்கவில்லை, அவர் பொய்யரென ரணில் விக்கிரமசிங்க இந்திய தொலைக்காட்சியில் அடித்துசொன்னார். அதற்கு அண்மையில் பதிலளித்த முதலமைச்சர், ரணிலை சந்தித்தபோது நீங்கள், சம்பந்தன் போன்றவர்கள் உடனிருந்ததாக கூறியுள்ளார். உண்மையில் என்ன நடந்தது? ரணிலும் விக்னேஸ்வரனும் சந்தித்து கொண்டார்களா?**

ரணில் விக்கிரமசிங்க அப்படி சொன்னபோது அதை மறுத்து விக்னேஸ்வரன் ஒரு அறிக்கையும் வெளியிடவில்லை. அதை அவர் அப்பொழுது செய்திருக்க வேண்டும். பலர் இருந்த இடத்தில் ரணிலை கண்டதாக இப்பொழுது சொல்கிறார். அப்படியும் இருக்கலாம். அப்படியான சந்தர்ப்பமொன்றில் நான் இருந்ததாக ஞாபகம் உள்ளது.

அப்பொழுது ரணில் தன்னை பார்த்து புன்சிரிப்பு செய்ததாகவும், அந்த சிரிப்பிற்கு பல வியாக்கியானங்களையும் அவர் வடமாகாணசபையில் சொல்லியிருக்கிறார். அப்படியெல்லாம் விமர்சிப்பது பற்றி நாங்களும் கருத்துக்கூற வேண்டுமென அவர் எதிர்பார்க்க முடியாது. இது அவருக்கும் பிரதமருக்குமான சர்ச்சை. அவர் தான் நிவர்த்தி செய்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் நாங்கள் கூட வந்து, கையை பிடித்துக் கொண்டு, வக்காளத்து வாங்கிக்கொண்டு இருக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்க முடியாது. அதை செய்ய வேண்டிய வேளையில் செய்வோம்.

பிரதமருக்கும் அவருக்குமான சர்ச்சையில் என்னையோ, சம்பந்தனையோ அவர் இழுக்க வேண்டியதில்லை. அவர்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

**வடக்கு முதல்வரின் அண்மைய அறிக்கையின் நிறைவு பகுதி, தன்னுடைய மாணவனான உங்களின் எதிர்காலத்திற்கு பிரார்த்திப்பதுடன் நிறைவடைந்திருந்தது. இப்பொழுது தீபம் பத்திரிகையின் நேர்காணவீஜின் இறுதியில், உங்கள் ஆசானுக்கு எதையாவது கூறவிரும்புகிறீர்களா?**

என்னுடைய ஆசானாக அவர் மீது பெருமதிப்பு வைத்திருந்தேன். அந்த மதிப்பு தொடரும் விதத்தில் எதிர்காலமும் அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.







வவுனியா வைரவப்புளியங்குளம் பாரதி முன்பள்ளி மழலைகளின் கலைவிழா அதிபர் திருமதி ஜெயராசா சந்திரா தலைமையில் 14.11.2015 அன்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.







வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687



# வைத்தியரிடம் கேளுங்கள்

**மனோகரன், ( 29)**
**யாழ்ப்பாணம்**

**கேள்வி:** தேனீர் கோப்பி அருந்துதல் உடல் நலத்திற்கு நல்லதல்ல, என சொல்கிறார்கள் நான் காலையில் தேனீருக்குப்ப திலாக தேசிக்காய் தண்ணீர் அருந்து கிறேன் இது நல்லதா, தங்கள் ஆலோசனை என்ன?

**பதில்:** எலுமிச்சை ரசம் அருந்துவது மிகவும் நல்லது எலுமிச்சை பல வகைகளில் உடலுக்கு நன்மையை தருகிறது. இது எமது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது...

எலுமிச்சையில் நிறைய விட்டமின் சீ அடங்கியுள்ளதால், தடிமன் ஏற்படாமல் தடுக்கிறது இதிலுள்ள பொட்டாசியம் மூளை, நரம்பு கடத்துகையை சீராக்குகிறது.... தோலிற்க்கு சிறந்ததாகசொல்லப்படு கிறது.

அத்தோடு உடலின் ph ஐ இது சீராக்குகிறது.

சீனி சேர்க்காது இளம் சூடாக அருந்தப்படும் எலுமிச்சை ரசம் உடல் எடையைக் குறைக்கிறது.

இனி என்ன நீங்கள் தினமும் எலுமிச்சை ரசம் பருகலாம்.

**ச.மரியநாயகம் (50),**
**கொய்யாத்தோட்டம்.**

**கேள்வி:** அண்மையில் நான் கொலஸ்ரோலுக்கான இரத்தப்பரி சோதனை செய்தபோது கொலஸ்ரோல் அளவு சற்று அதிகமாக இருப்பதாகவும், உணவுக்கட்டுப் பாட்டை மேற்கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டேன். கொலஸ்



ரோலை குறைக்கவேண்டுமாயின் நான் என்னென்ன மரக்கறி பழ வகைகளை உண்ணவேண்டும்?

**பதில்:** கரட், பீட்ரூட், சுரக்காய் போன்ற மரக்கறிகள் மிகவும் சிறந்தவை. இவற்றுடன் இஞ்சி, வெங்காயம், உள்ளி போன்றனவும் உடலில் கொலஸ்ரோலின் அளவை கட்டுபடுத்துவதில் துணை செய்கின்றன.

தினமும்கரட்டைஅதிகஅளவில் சேர்த்துக் கொண்டால் (பச்சையாக) இரத்தத்தில்கொலஸ்ரோல் அ ளவு குறைகிறது. அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

பீட்ரூட்ஃபோலிக் ஆசிட், இரும்புச் சத்து பீட்ரூட்டில் உள்ளதால் தொடர்ந்து உண்போர்க்கு இரத்தசோகை நோய் வருவதில்லை. இரத்தக் குழாய்களில் படியும் கொலஸ்ரோலைக் குறைக்கிறது.

**சுரக்காய்:** இரத்தக் குழாய்களில் படிந்துள்ள அடைப்பை நீக்குவதாக அறியப்படுகிறது.

**இஞ்சி:** இரத்தக் குழாய்களில் ஏற்படும் இரத்த உறைவைத் தடுத்து மாரடைப்பு வராமல் பாதுகாக்கிறது. இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. வாய்வுத் தொல்லையைப் போக்கு கிறது. மூட்டு வலியைக் குறைக்கிறது.

**வெங்காயம்:** வெங்காயத்தைத் தொடர்ந்து உண்டு வந்தால் இரத்தத்தின் கொலஸ்ரோல் அளவு குறைவதோடு இரத்தத்தின் உறைவுத்தன்மையும், ஒட்டும் தன்மையும் குறைவதால் மாரடைப்பு நோய் தடுக்கப் படுகிறது .

இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு வந்தவர்களும் கூட தினமும் 100 கிராம் வெங்காயத்தைத் தொடர்ந்து உண்டு வந்தால் படிப்படியாக இருதய ரத்த நாளங்களில் உள்ள அடைப்புக்கள் கரைந்து மறைந்துவிடுவதாக நிரூபிக் கப்பட்டுள்ளது.

**உள்ளி:** இதில் ஹசாலிசிலிக்' என்றஇரசாயனப்பொருள் உள்ளது. நாம் சாப்பிடும் உணவின் மூலம் இரத்தக் குழாய்களில் அதிக அளவு கொழுப்பு சேர்ந்து அடைப்பை உண்டாக்கும் போது,பூண்டிலுள்ள ஹசாலிசிலிக்' என்ற சத்து அந்த அடைப்பை உடைத்துவிடுகிறது.

(உள்ளியை உணவில் ரசமாக சேர்த்துக் கொள்ளுதல் நன்மை பயக்கும்)

பழ வகைகளில் ஆப்பிள், அன்னாசி போன்ற பழங்கள் நல்ல பயனளிப்பவை.

அப்பிளில் உள்ள ஹபெக்டின்' என்ற நார்ச்சத்து இரத்தத்தின் கொலஸ்ரோல் அளவைக் குறைப்பது ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்கள் தினம் இரண்டு அப்பிள் பழங்களைத் தொடர்ந்து மூன்று மாதங்கள் சாப்பிட்டு வந்தால், கொலஸ்ரோல் அளவு 10லிருந்து 15 சதவிகிதம் வரை குறைந்துவிடுகிறது. இதில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமுள்ளது.

**பெயர் குறிப்பிட விரும்பவில்லை, ஆண் (45)**
**கொழும்புத்துறை**

**கேள்வி:** எனக்கு இரண்டு பிள்ளைகள். திருமணமாகி 18 வருடங்கள். தற்போது இல்வாழ்க்கையில் செயற்பட முடியாதுள்ளது. போதிய எழுச்சி இருப்பதில்லை. இரத்தஅழுத்தம், நீரிழிவு சோதனைகள் செய்தேன். பிரச்சனை இல்லை என்றார்கள். சித்தாயுர்வேத மருத்துவத்தில் இதை குணமாக்க வழியிருக்கிறதா?

**பதில்:** நிறைய மருந்துகள் சித்தாயுர்வேத மருத்துவத்தில் பாவிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு வைத்தியரின் நேரடிக்கவனிப்பின் கீழ் இதற்கான சிகிச்சை அளிக்கப்படவேண்டும். உங்கள் தேக நிலைக்கேற்ப சரியான மருந்தை அவர் தெரிவு செய்வார். சில பொதுவான மருந்துகளை இங்கே குறிப்பிடுகிறேன்.

நிலப்பனைக்கிழங்கு சூரணத்தை ஒரு தேக்கரண்டி எடுத்து பால், சர்க்கரை கலந்து உண்டு வரலாம்.

பூனைக்காலி விதை, நெல்லி வற்றல் இவற்றைச் சம அளவு எடுத்துப் சரணமாக்கி சீனி சேர்த்து உண்ணலாம்.

அமுக்கராகிழங்குப்பொடியுடன் சம அளவு கற்கண்டு சேர்த்து ஒரு தேக் கரண்டி வீதம் பாலுடன் அருந்தலாம்.

நிலப்பூசணிக் கிழங்கின் சாறுடன் பால், சர்க்கரை சேர்த்து உண்ணலாம்.

சமையலில் துவளைப்பூ, முருங்கைப்பூ, முருங்கைகாய் சேர்த்துக் கொள்ளுங்கள்.

அஸ்வகந்தி லேகியம், மேக சஞ்சீவி குழம்பு, தாது புஸ்டி லேகியம் என்பவற்றை வைத்தியர் ஆலோசனையுடன் எடுப்பதால் உங்கள் பிரச்சனை தீர வழியுண்டு.

**ப.ஜீவிதன் (22)**
**பாசையூர்**

**கேள்வி:** நான் ஒரு பாடகன். தற்போது இசைநிகழ்ச்சிகளில் பாடும் போது குரல் கம்மல் ஏற்படுகிறது. சிலநேரங்களில் தொண்டை கரகரப்பு சிரமம் தருகிறது. என்னசெய்யலாம் ?


**பதில்:** அதிமதுரத் துண்டு ஒன்றை வாயில் போட்டு மென்று கொண்டிருந்தால் வாயில் உமிழ் நீர் சுரக்கும். இந்த உமிழ்நீரை உள்ளுக்கு விழுங்கிக் கொண்டிருந்தால் தொண்டைக் கரகரப்பு நீங்கும். குரல் கம்மல் நீங்கி விடும். தொண்டையில் உள்ள சளிக்கட்டு கரைந்து விடும்.

இது பாணியாகவும் கிடைகிறது.

ஆடா தோடைக்கு பாடாத நாவும் பாடும் என ஓர் மருத்துவப் பாடல் சொல்கிறது ஆடாதோடை தொண்டைகரகரப்பு எற்படுத்தும் சளிக்கட்டை நீக்குகிறது .

ஆடாதோடைப்பாணி மருந்துக் கடைகளில் கிடைக்கிறது பயன் படுத்திப்பாருங்கள்.

**குறிப்பு:** உங்களிற்கு ஏதாவது மருத்துவ சந்தேகங்களா? சித்த வைத்தியத்தால் தீர்க்க வேண்டுமென விரும்பினால் தயக்கமின்றி எழுதி தீபத்திற்கு அனுப்புங்கள். அங்கீகரிக்கப்பட்ட சித்தவைத்தியர்கள் பதில் தர காத்திருக்கிறார்கள்.






மன்னார் அமுதனின் “அன்ன யாவினும்” கவிதை நூல் வெளியீடும், குறும்பட காட்சிப்படுத்தலும் 14.11.2015 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.









# நம்மை நாமே மீட்டல்

அம்ரிதா

இலங்கையின் நம்பர் 1 வானொலி எது?

இப்படியொரு கேள்வியை கேட்டால் இந்த உலகத்தில் யாரால் சரியான பதில் சொல்ல முடியும்? பேஸ்புக்கில் கடலைபோடும் பெண் கூட கேட்காத இணைய வானொலி நடத்துபவன் தொடக்கம், பண்பலையில் வானொலி நடத்தும் மெகா நிறுவனங்கள் வரை அனைத்துமே தாங்கள்தான் நம்பர் 1 வானொலியென சொல்லிக்கொள்ளும் நிலையில், வானொலியை மட்டும் நம்பியிருக்கும் அப்பாவிகள் எதனை நம்புவார்கள்?

குறிப்பாக வானொலியில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைப்பவர்கள் ஒன்றில் வேலையில்லாமல் இருப்பவர்கள் அல்லது ஹோட்டல்களில் வேலை பார்ப்பவர்கள். வானொலிகளிடம் நம்பவர் 1 கனவை வளர்த்து விட்ட பாவம் பெருமளவில் இவர்களையும்சேரும். இந்தவகையானவர்களை அறைக்குள் அடைத்து வைத்து நாள் முழுவதும் கல்பனா அக்காவின் பாடல்களை ஒளிபரப்பி வதைக்க வேண்டும்.

இலங்கையில் இயங்கும் வானொலிகள் ஏராளம். குறிப்பாக பண்பலை வானொலிகள் அனேகம்.

இலங்கைக்கென்று நீண்டதொரு வானொலி பரம்பாரியம் உள்ளது. ஆசியாவிலேயே முதலாவது வானொலி சேவையை தொடங்கியதும் நம்நாடுதான். மிகநீண்டகாலமாக தமிழ் வானொலி உலகத்தின் முடிசூடா ராஜாக்கள் நாம்தான். உலகையே கட்டிவைத்திருந்தது நமது வானொலித்தமிழ்.

எண்பதுகளின் தொடக்கங்கள் வரை பிறந்தவர்களின் காதுகளில் இன்னும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் பொங்கும் பூம்புனல், பாட்டுக்குப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள். கே.எஸ்.ராஜா, அப்துல் ஹமீத், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் என எத்தனையெத்தனை திகட்டாத குரல்கள்?

அதெல்லாம் கனாக்காலமாகவே முடிந்துவிட்டது. 1990களின் பிற்பகுதியில் தொடங்கி 2000களின் முற்பகுதி வரையிலான மிககுறுகிய காலத்தில் இலங்கையின் வானொலி பாரம்பரியம் இழக்கப்பட்டு, மேசமான கலாசார மொன்று நிறுவப்பட்டுள்ளது. எந்தவித சுயஅடையாளங்களுமற்ற அடையாளமது.

இலங்கையில் இருந்து ஒளிபரப்பாகும் தனியார் பண்பலை வானொலிகள் அத்தனையையும் கேட்டால், அது இலங்கை வானொலிகளா அல்லது இந்திய வானொலிகளா என்பதில் குழப்பம் ஏற்படும். இந்தியப்பாணி உச்சரிப்பு நாகரிகமானதென்ற மோசமான சிந்தனை அறிவிப்பாளர்கள் மற்றும் ஊடக முதலாளிகளிடம் உள்ளது. இதனால்த்தான் அவர்கள் இரவல் அடையாளங்களை தேடிச் செல்கிறார்கள்.

குறிப்பாக, தொலைக்காட்சியும் வைத்துள்ள நிறுவனத்தின் எம்.எம் பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். இலங்கை பண்பலைகள் தமது சுயஅடையாளங்களை இழக்கவைத்ததில் இந்த நிறுவனத்திற்கும் கணிசமான பங்குள்ளது. சாதாரணமாக இலங்கைத் தமிழ் உச்சரிப்பில் பேசும் ஒருவர் கூட அந்த நிறுவனத்தில் இல்லை. அதிலும் குறிப்பாக இந்தநாட்களில் இரவில் நிகழ்ச்சி செய்யும் ஒரு அறிவிப்பாளன் செய்யும் வதையை எப்படி சகிப்பதென்றே தெரியவில்லை. சிவகார்த்திகேயன் பாணியில் கதைப்பதாக சொல்லிக் கொண்டு, செய்யும் வதை உண்மையான 'மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்' என வகைப்படுத்தப்பட வேண்டியது.

> **வாழ்க்கைமுறை, கலை, சினிமா, ஊடகம் என அனைத்து துறைகளிலும் இந்தியமோகம் நம்மவர்களை பித்தாக பிடித்தாட்டுகிறது. இதன்விளைவு தனித்துவமான எந்த நிகழ்ச்சிகளும் உருவாகாமல் உள்ளது.**

இந்த நிறுவனத்தில் சில சிரேஸ்ட பொறுப்புக்களிற்கு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள்தான் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஏன்? தனித்துவமாக வளர்ந்துவந்த இலங்கையில் ஊடக கலாசாரம் மோசமானது, இந்திய ஊடக கலாசாரம் மேலானதென நிறுவனம் முடிவு செய்துள்ளதா?

எதற்காக இந்திய மோகம்? வாழ்க்கைமுறை, கலை, சினிமா, ஊடகம் என அனைத்து துறைகளிலும் இந்தியமோகம் நம்மவர்களை பித்தாக பிடித்தாட்டுகிறது. இதன்விளைவு தனித்துவமான எந்த நிகழ்ச்சிகளும் உருவாகாமல் உள்ளது. தனித்துவமான நிகழ்ச்சிகளை படைக்க முடியாத வானொலிகள் பணம் கொடுத்து, பரிசுப் பொருள் கொடுத்து நேயர்களை தக்க வைத்திருக்க வேண்டிய துயரத்திற்கு உள்ளாகின்றன.

இதனால்த்தான் வெகுஜன அறிவிப்பாளர் ஒருவர் அல்லது வெகுஜன நிகழ்ச்சியென ஒன்று கிடைக்காமல் உள்ளது. கே.எஸ். ராஜா போல, அப்துல் ஹமீத் போல ஒருவரை சொல்லுங்கள் என்றால் யாரை இப்பொழுது சொல்வது?

அவர்கள் விதிவிலக்கானவர்கள், நம்மத்தியில் பிறந்த அரிதான ஆளுமைகள் என சமாதானம் சொல்லி தப்பிக்க முடியாது. ஏனெனில், ஒரு சீராக உருவாகிவந்த வானொலிப் பரம்பரையினர் அவர்கள். அதன் பின்னர் எழில்வேந்தன், ரேலங்கி செல்வராஜா என முன்னையலோசன்வரை அது நீண்டு வந்தது. அதன் பின்னர் அந்த மரபுத்தொடர்ச்சி ஏன் அறுந்தது என்பது சிந்தனைக்குரியது. முன்னர் சொன்ன, புதிய பண்பலைக்கலாசாரமே அந்த கொலைவாளை முதலில் உருவியது.

உங்களையெல்லாம் கேட்க சகிக்கவில்லையென்பதை நமது வானொலிக்காரர்களிடம் ஒவ்வொருவரும் சொல்வதுதான் நமது வானொலி கலாசாரத்தை மீட்க வழியென்றால், அதனையும் செய்து விடுங்கள்.



1-ம் பக்க தொடர்ச்சி

‘வைத்தியசாலையா...கொலைக் களமா? ஜெயராஜைவைத்து அப்படி யொரு பட்டிமன்றமே நடத்தலாம்’ என்று சமூகவலைத்தளத்தில் ஒருவர் குசும்பு ஸ்ரேற்றஸ் இடுகிறார். இது ‘வைரல் ஹிட்’ ஆகிறது. கன்னாபின்னாவென எல்லோரும் சமூகஊடகங்களில் பகிர்கிறார்கள்.

உடனே பற்றிக் கொள்கிறது. தலை, கால், கண் வைத்து செய்திகள் பரவுகிறது. வைத்தியசாலைக்குள் நுழையும்போதே ஒரு கண்களில் ஒருவித மரணபீதி தெரிகிறதென ஒவ்வொரு நோயாளியும் உணர்வது மாதிரியான கருத்துக்களும் பரவுகிறது.

இதுதான் இன்றைய திகதியில் வடக்கு நிலைமை. அடுத்தடுத்து சர்சைஞ் கொந்தளிப்பாகி ஊடகங்களில் செய்தியாவதும், அதற்கு வைத்தியசாலைகள் மறுப்பு வெளியிடுவதும் சாதாரணமாகி விடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. வைத்தியசாலைகளில் சர்ச்சைக்குரிய மரணங்கள் தொடர்வதும், மகத்துவமான வைத்தியத் துறை பற்றிய பகிரங்க விமர்சனங்கள் கிளம்புவதும் இந்த நாட்களில் அடிக்கடி நிகழ்வது ‘இதெல்லாம் சகஜமப்பா’ என சொல்ல வைக்கிறது.



இந்த சர்ச்சை வரிசையில் இறுதியாக விவகாரமாகி நிற்பது மன்னார் வைத்தியசாலை.

ஜோன்போல்சோசை(ஜெனிபர்) என்ற இருபது வயதேயான இளைஞனின் மரணம் மன்னார் வைத்தியசாலை மீதும், யாழ்ப்பாண வைத்தியசாலை மீதும் சர்ச்சைப்புள்ளியை குவிய வைத்துள்ளது. அதிலும் குறிப்பாக மன்னார் வைத்தியசாலையின் நிர்வாகம் மற்றும் வைத்தியர்கள் பற்றி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் குற்றசசாட்டுக்களை சுமத்துகிறார்கள். விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும், வைத்தியசாலையில் முறையான சிகிச்சையளிக்கப் படாததால்இளைஞன் உயிரிழந்தார் என்பது அவர்களது குற்றச்சாட்டு.

வைத்தியசாலையின் அசமந்த போக்கை கண்டித்து கடந்த திங்கட்கிழமை இளைஞனின் உறவினர்கள், இளைஞன் அங்கம் வகிக்கும் பொதுமைப்பொன்று இணைந்த கண்டப்போராட்டமொன்றை நடத்தினார்கள். மன்னார் பொதுவைத்திய சாலையின் எதிரில் நடந்த இந்த கண்டனப்போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

## நடந்தது என்ன?

இந்த விவகாரத்தின் முதல் வில்லங்கம் பேரூந்தில் நடந்துள்ளது. கடந்த மாதத்தின் இறுதிநாள் அந்த சம்பவம் நடந்துள்ளது.

வங்காலை அக்கினேஸ்புரத்தை சேர்ந்த பத்திநாதனின் புதல்வன் ஜோன் போல் சோசை. இவரை ஜெனிபர் என்றும் அழைப்பார்கள்.

31.10.2015 அன்று சனிக்கிழமை. ஏதோ அலுவலாக மன்னாரிற்கு வந்துவிட்டு, மீண்டும் ஊர் திரும்புகிறார். நானாட்டன் சென்ற தனியார் பேரூந்தில் ஏறுகிறார்.

வீதியில் சென்றதா, பறந்து சென்றதா என்பதை அனுமானிக்க முடியாத வேகத்தில் சென்றது பேரூந்து. தள்ளாடி இராணுவமுகாம் சிற்றுண்டிச்சாலைக்கு முன்பாக அந்த அனர்த்தம் நிகழ்ந்தது. ஜெனிபரின் வாழ்வுடன் விளையாடிய அனர்த்தம். பேரூந்தில் இருந்து தவறி வீதியில் விழுகிறார்.

இந்த அனர்த்தம் நிகழ்ந்தபோது பேரூந்தில் பயணித்தவர்கள், பேரூந்தின் அதிக வேகம் மற்றும் நடத்துனரின் அலட்சியம் என்பனவே விபத்திற்கு காரணம் என குற்றம்சாட்டுகின்றனர்.

பேரூந்திலிருந்து தவறி விழுந்த ஜெனிபர் பலத்த காயமடைகிறார். தலை, இடதுகை உள்ளிட்ட பல இடங்களில் வெளித்தெரியும் பலமான காயங்கள் அவதானிக்கப்பட்டன. அவர் ஆபத்தான நிலையில் இருந்தார்.

அங்கிருந்தவர்கள் விரைந்து செயற்பட்ட, முச்சக்கரவண்டியொன்றை பிடித்து அவரை ஏற்றினார்கள். சற்று தொலைவிலிருந்த மன்னார் பொதுவைத்திய சாலைக்கு முச்சக்கரவண்டி விரைந்தது. மாலை 4.30 மணியளவில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஜெனிபர் அனுமதிக்கப்பட்டார்.

**வ**வுனியாவிலிருந்து ஜெனிபரை கொழும்பு கொண்டுசெல்லுமாறு தாம் வலியுறுத்தியதாகவும், எனினும் தம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்பதும் ஜெனிபரின் உறவினர்களின் குற்றச்சாட்டு. யாழ்ப்பாண வைத்தியசாலையின் சி.ரி ஸ்கான் வசதி செயலிழந்திருந்த நிலையிலும், உரிய சத்திரசிகிச்சை நிபுணர் விடுமுறையில் நின்றபோதும், நரம்பியல் சத்திரசிக்சை நிபுணர் கடமையில் நிற்கிறார் என தமக்கு தவறான தகவல் வழங்கினார்கள் என்பதும் அவர்களின் குற்றச்சாட்டு.

## இது வேறு மாதிரி

உயிராபத்தான ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றால், வைத்தியசாலையே பரபரக்கும். வைத்தியர்களும், தாதியர்களும் காலில் சில்லுப் பூட்டிக் கொண்டு பறப்பார்கள். அப்படித்தானே நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் ஜெனிபரின் உறவுகள் சுமத்தும் குற்றம் நேர்மாறானது.

ஜெனிபருடன் சென்றவர்களிடம் வைத்தியசாலையில் சொல்லப்பட்டுள்ளது, ‘சேவிங் ரேசர் வாங்கி வாருங்கள்’ என. ஜெனிபரின் தலையில் உள்ள காயங்களிற்கு சிகிச்சையளிப்பதற்காக, தலைமுடியை அகற்றுவதற்காக இருக்கலாம். எனினும், ஜெனிபருடன் சென்றவரிற்கு பதற்றத்தாலோ என்னவோ, அது சரியாக புரியவில்லை. அருகிலுள்ள கடைக்கு ஓடிச் சென்று சேவியற் பேப்பர் வாங்கிக் கொண்டு போயிருக்கிறார். பின்னர் ‘இது அல்ல அது’ என சரியான பொருள் வாங்கிக் கொண்டு போக சுமார் பதினைந்து, இருபது நிமிடங்கள் ஆகியிருக்கிறது.

**அ**ண்மையில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப்பெண்மணி யொருவரது மரணமும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தது. அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்து சாதாரண விடுயொன்றிற்கு மாற்றப்பட்ட அந்த பெண்மணி பன்னிரண்டு மணித்தியாலமாக கதிரையிலேயே உட்கார வைக்கப்பட்டார் என்றும், படுப்பதற்கு பாயோ, கட்டிலோ வழங்கப்படவில்லையென்றும் உறவினர்கள் குற்றம்சுமத்தினார்கள். விடுதியில் கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் சிகிச்சையில் அசமந்தம் காட்டியதால், அவர் மரணமானதாக உறவினர்கள் குற்றம்சுமத்தினார்கள். இந்த விடயம் சமூகவலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்ட விடயம். இந்த தகவலை தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளை பலரும் கண்டித்து கருத்துக்கள் எழுதியதை அவதானிக்க முடிந்தது.

பின்னர் ஜெனிபருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, தலையில் தையலிடப்பட்டு 4ம்விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பொழுது நேரம் இரவு 7 மணி.

தலையில் பலத்த காயம்பட்டு துடிதுடித்துக் கொண்டிருந்த நோயாளிக்கு உள்ளக இரத்தக்கசிவு ஏதும் உள்ளதா என்பதை பரிசோதித்து பார்க்காமல் வெறும் எக்ஸ்ரே பரிசோதனை மட்டுமே செய்யப்பட்டதாக உறவினர்கள் குற்றம்சுமத்துகின்றனர்.

4ம்விடுதியில் அனுமதிக்கப்பட்ட

**கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்,**
**வங்காலை.**
***13.11.2015***

**பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,**
**மன்னார்.**

ஐயா/அம்மணி

எமது கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் உறுப்பினராகிய செல்வன்.பத்தினாதன் யோன் போள் சோசை(ஜெனிபர்) என்பவர் (வயது 20) 31.10.2015 சனிக்கிழமை அன்று பிற்பகல் 4.15 மணியளவில் மன்னாரிலிருந்து தனது நண்பனான செல்வன்.அன்ரன் பிரதீப் லெம்பேட் என்பவருடன் நானாட்டான் நோக்கிச்சென்ற தனியார் பேரூந்தில் தனது ஊராகிய வங்காலைக்கு பயணம் செய்துள்ளார். சாரதியின் அதிவேகம் காரணமாகவும், நடத்துனரின் அலட்சியம் காரணமாகவும் தள்ளாடி இராணுவ சிற்றூண்டிச்சாலைக்கு முன்பாக ஓடும் பஸ்ஸிலிருந்து தவறிவீழ்ந்துள்ளார். தலை, இடது கை, முதுகு, இடது பிட்டம் போன்றவற்றில் காயமடைந்த அவரை கூடச் சென்றவர்கள் ஆட்டோ ஒன்றில் மன்னார் பொது வைத்தியசாலையில் பிற்பகல் 4.30 மணிக்கு வெளி நோயாளர் பிரிவில் அனுமதித்துள்ளனர் தீவிரசிகிச்சைப் பிரிவில் இருந்த ஊழியர்கள் இவரை அனுமதித்தவரிடம் கடையில் SAVING RAZAR வாங்கிவரும்படி கூறியுள்ளனர். SAVING RAZAR என்பது தெளிவாக விளங்காததால் அவர் SAVIET PAPER வாங்கி வந்துள்ளார். மீண்டும் அவர் கடைக்கு அனுப்பப்பட்டு SAVING RAZAR விலைக்கு வாங்கி தீவிரசிகிச்சைப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏறக்குறைய 15-20 நிமிடங்கள் சிகிச்சை தாமதிக்கப்பட்டுள்ளது. தலையில் பலத்த அடிபட்டு துடித்துக் கொண்டிருந்த நோயாளிக்கு உள்ளக இரத்தக்கசிவு இருக்கிறதா என்பது பற்றி உரிய அவதானிப்பு (CT SCAN) செய்யப்படாமல் வெறுமனே ஓகதிர் பரிசோதனை செய்யப்பட்டு தலையில் தையலிடப்பட்டு பிற்பகல்
7.00 மணியனவில் 4ம் வாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளார். இந்நிலையில் நோயாளி சுயகட்டுப்பாடு, சுயநினைவற்று இருந்துள்ளார். ஆயினும் வைத்தியசாலை ஊழியர்களினால் அவர் சாதாரண நிலையில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. தலையினுள் ஏற்பட்ட வேதனையால் நோயாளி துடிதுடித்தபோதும் 4ம் வாட்டில் வைத்தியர் எவரும் இருக்கவில்லை. அங்குள்ள ஊழியர்கள் நோயாளி மதுபோதையில் குழப்படி செய்வதாக கூறியுள்ளனர். ஆனால் வாந்தி எடுத்து வேதனைப்பட்ட நோயாளியின் வேதனை கண்டு துடிதுடித்த உடனிருந்தவர் செய்த வற்புறுத்தலின் பெயரில் டொக்டர் பூர்ணிமா என்பவர் வாட்டுக்கு வருகைதந்து நோயாளியைப் பார்வையிட்டுவிட்டு அலட்சியமாக வாட்டைவிட்டு சென்றிருக்கிறார்.

நோயாளி தனது கைகளையும், கால்களையும் அடித்து மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த போது சத்திரசிகிச்சை நிபுணர் பிற்பகல் 8.00 மணிக்கு நோயாளியைப் பார்வையிட வருவார் என கூறப்பட்ட போதிலும் பிற்பகல் 9.00 மணிவரை அவர் வரவில்லை. நோயாளியின் துன்ப நிலை காரணமாக உடனிருந்தவரின் வற்புறுத்தலின் பேரில் 9.00 மணிக்கு மீண்டும் தீவிரசிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார். பி.ப.9.15 மணியளவில் சத்திரசிகிச்சை நிபுணர் வந்து பார்வையிட்டு நோயாளியை வேறு வைத்தியசாலைக்கு மாற்றுவதற்காக தயார் படுத்தியுள்ளார்.

நோயாளியை கொழும்புக்கு இடமாற்றப் போவதாக உடனிருந்தவர்களுக்குத் தொரிவிக்கப்பட்ட போதிலும் இரவு 10.30 மணியவரை அம்புலன்ஸ் இல்லை என்ற காரணம் கூறப்பட்டுள்ளது. இரவு 10.30 மணியளவில் நோயாளியை வவுனியா வைத்தியசாலைக்கு இடமாற்றியுள்ளனர். இரவு 12.00 மணியவில் வவுனியாவில் நோயாளிக்கு CT SCAN செய்யப்பட்டடுள்ளது. உடன் சென்றவர் நோயாளியை கொழும்புக்கு இடமாற்ற கோரிய போதிலும் யாழ்ப்பாண வைத்தியசாலையில் CT SCAN இயங்காத நிலையிலும், சத்திர சிகிச்சை நிபுணர் விடுமுறையில் நின்ற நிலையிலும் அங்கு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் இருப்பதாக உடன் சென்றவருக்கு பொய் சொல்லப்பட்டு நோயாளி யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அடுத்தநாள் அதிகாலை 2.30 மணியளவில் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எந்தவித சிகிச்சையினாலும் உயிர்பிழைக்க முடியாத இந்த நோயாளியை ஏன் இங்கு கொண்டு வந்தீர்கள் என வைத்தியசாலை ஊழியர்களினால் உடன் சென்றவருக்கு சொல்லப்பட்டுள்ளது. CT SCAN இயங்காத யாழ்ப்பாணத்து வைத்தியசாலையில் நோயாளிக்கு உரிய நிபுணர் இல்லாத நிலையில் மீண்டும் சத்திர சிகிச்சையளிக்கப்பட்டு காலை 6.30 மணியளவில் மீண்டும் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார். தீவிர சிகிச்சை பிரிவில் ஐந்து நாட்கள் சுயநினைவற்ற நிலையிலிருந்து இறந்து போன நோயாளிக்கு பிரேத பரிசோதனையின் போதே அவரது இடது கை முறிவடைந்திருந்ததும், முதுகிலும், பின்புட்டத்திலும் பெரிய காயம் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டதே ஒழிய மன்னார், யாழ் வைத்தியசாலைகளில் நோயாளி ஆறு தினங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அவரது காயங்கள் கண்டுபிடிக்கபடவோ அதற்குரிய சிகிச்சை வழங்கப்படவோ இல்லை. எனவே கத்தோலிக்க இளைஞர் சங்கத்தினர் பின்வரும் வினாக்களுக்கு தங்களிடம் விடைகோருகின்றோம்.

1. மன்னார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவு மரணத்தறுவாயில் வரும் நோயாளியிடமும், அவருடன் கூட வருபவர்களிடமும் SAVING RAZAR வாங்கிக் கேட்குமளவிற்கு வசதிகளற்று காணப்படுகிறதா?
2. தீவிரசிகிச்சை அளிக்கப்படவேண்டிய நோயாளியை உடனடியாக இடமாற்றம் செய்யாமல் பல மணித்தியாலங்கள் தாமதிக்க வைக்கும் நிலையில் மன்னார் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி சேவை காணப்படுகிறதா?
3. தீவிர சிகிச்சையளிக்கப்பட வேண்டிய தலையில் உள்ளக இரத்தக்கசிவுள்ள நோயாளிக்கு தலையில் தையல்களிட்டு சாதாரண வாட்டிற்கு மாற்றி பல மணித்தியாலங்கள் அவரை பார்வையிடாமல் வைத்தியர்களும், சத்திரசிகிச்சை நிபுணரும் தங்களது கடமையை உதாசீனம் செய்வதற்காகவா அவர்ளுக்கு அரசாங்கம் உயர்ந்த சம்பளத்தையும், உல்லாசமான தங்குமிட வசதிகளையும் வழங்கியுள்ளது?
4. அநுராதபுரத்திற்கோ , கொழும்பிற்கோ இடமாற்றம் செய்து உயிரைக் காப்பாற்றியிருக்க கூடிய நோயாளியை CTSCAN பழுதடைந்த நிலையில் உள்ள, நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் விடுமுறையில் நின்ற யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு ஏறக்குறைய 10.12 மணித்தியால தாமதத்தின் பின்னர் இடமாற்றம் செய்ததன் உள்நோக்கம் என்ன?

...ற்படி வி... ...ரிய விசாரணை... ...ல் வேண்டு...
...சாகடி...

பின்னர் ஜெனிபர் சுயநினை விழந்துள்ளார் என்றும், கை கால்கள் தன்னிச்சையாக அடித்துக் கொள்ளும் நிலைக்கு சென்றுவிட்டதென்றும் ஜெனிபரின் உறவினர்கள் குற்றம்சுமத்துகின்றனர். எனினும், வைத்தியசாலை தரப்பினர் இதனை மறுத்துள்ளனர். விடுதியில் கடமையிலிருந்த வைத்தியசாலை பணியாளர்கள் அவர் சாதாரண நிலையிலேயே இருந்தார் என்கிறார்கள்.




### அடுக்கடுக்காக குற்றச்சாட்டு

உறவினர்களின் தகவல்ப்படி, ஜெனிபர் சுயநினைவிழந்ததுடன் மூளையின் கட்டுப்பாட்டை இழந்த கை,கால்கள் தன்னிச்சையாக அடித்துக் கொள்ள ஆரம்பித்துள்ளது. ஜெனிபர் படும் அவஸ்தையை பொறுத்துக்கொள்ள முடியாமல், அவரை பரிசோதித்து பார்க்கும்படி வைத்தியர்களை பலதடவைகள் வற்புறுத்திய பின்னரே வைத்தியர் வந்தாராம்.

இரவு 8 மணிக்கு சத்திரசிகிச்சை நிபுணர் வருவதாக தம்மிடம் கூறப்பட்டதாகவும், எனினும் அவர் வரத் தாமதமாகியதையடுத்து தமது அதிகவற்புறுத்தல் காரணமாக இரவு 9 மணிக்கு தீவிர சிகிச்சைப்பிரிவிற்கு ஜெனிபர் மாற்றப்பட்டார் என்கிறார்கள் உறவினர்கள். இதன் பின்னர் 9.15 மணியளவில் சத்திர சிகிச்சை நிபுணர் வந்ததாக கூறப்படுகிறது. ஜெனிபரை பிரிசோதித்த சத்திரசிகிச்சை நிபுணர், அவர் ஆபத்தான கட்டத்தில் உள்ளதாக கூற, வேறு வைத்தியசாலைக்கு மாற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விடயமும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. ஜெனிபர் கொழும்பிற்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பபடவுள்ளதாக ஆரம்பத்தில் கூறியதாகவும், பின்னர் அவர் வவுனியா வைத்தியசாலைக்கே அனுப்பபட்டதாகவும் உறவினர்கள் கூறுகின்றனர்.

மன்னார் பொதுவைத்தியசாலையிலிருந்து கொழும்பிற்கு ஜெனிபரை மேலதிக சிகிச்சைக்காக அனுப்பவுள்ளதாக தம்மிடம் கூறப்பட்டதாகவும், எனினும் அம்பியூலன்ஸ் வண்டி இல்லாமல் இரவு 10.30 மணிவரை காத்திருந்ததாகவும், 10.30 மணிக்கு வவுனியாவிற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் உறவினர்கள் கூறுகிறார்கள்.

நள்ளிரவு 12 மணியளவில் வவுனியா பொதுவைத்திய சாலையில் ஜெனிபருக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### உறவுகளின் கொதிப்பு

எனினும், அங்கிருந்தும் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட வேண்டியிருந்தது. ஜெனிபருடன் சென்றவர், அவரை கொழும்பிற்கு இடமாற்றும்படி கேட்டுள்ளார். எனினும், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் உரிய சிகிச்சைகள் வழங்கலாமென கூறி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டதாக ஜெனிபருடன் சென்றவர் கூறுகிறார்.

மறுநாள் 01.11.2015. அதிகாலை 2.30 மணிக்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு ஜெனிபர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஜெனிபர் யாழ்ப்பாண வைத்திய சாலைக்குள் சிகிச்சைக்காக உள்ளெடுக்கப்பட்ட சமயத்தில், ‘எந்த சிகிச்சையாலும் உயிர் பிழைக்க வைக்க முடியாத இந்த நோயாளியை எதற்காக இங்கு கொண்டு வந்தீர்கள்?’ என வைத்திய சாலை பணியாளர்கள் தன்னை கேட்டதாக உடன் சென்றவர் கூறியதாக ஜெனிபரின் உறவினர்கள் சர்ச்சையை கிளப்பியுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையில் தமக்கு கூறப்பட்டதை போல, உரிய வைத்திய நிபுணர்கள் யாரும் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லையென்பது அவர்களின் அடுத்த குற்றச்சாட்டு. ஜெனிபருக்கு யாழ்ப்பாணத்திலும் சந்திரசிகிச்சையளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பின்னர் காலை 6.30 மணியளவில் அவசர சிகிச்சைப்பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

பின்னர் சிலநாட்களில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார். அதுதான் இப்பொழுது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

ஜெனிபரின் மரணத்திற்கு வைத்தியசாலை நிர்வாகத்தின் செயற்பாடுகள்தான் காரணம், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், நட்டஈடு பெற்றுத்தர வேண்டுமென கூறி கடந்த 16ம் திகதி மன்னார் பொதுவைத்தியசாலையின் முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் அங்கு சென்று, அவர்களின் பிரச்சனைகளை கேட்டறிந்தார். இந் விடயத்திற்கு நீதி கோரி, ஜெனிபரின் உறவினர்கள் அனுப்பிய மகஜரின் பிரதிகள் கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வடக்கு முதல்வர், சுகாதார அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஜெனிபரின் உறவுகளின் குற்றச்சாட்டு போல அவ்வப்போது குற்றச்சாட்டுக்கள் கிளம்புவது மருத்துவ உலகில் சகஜம். வைத்தியர்களும் மனிதர்களே. ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலில் இயந்திரங்கள் போல அவர்களும் செயற்பட முடியாதென்கிறார்கள் வைத்தியத் துறை சார்ந்தவர்கள். மனிதஉடலும் இயந்திரமல்ல. வைத்தியர்கள் கடவுமல்ல. இதுவரையான சிகிச்சைகளின் மூலம் பெற்ற அனுபவ பிரயோகமே வெற்றிகரமான வைத்தியரை உருவாக்குகிறது. வைத்தியரின் சிறுதவறு அல்லது சிகிச்சை பெறுபவரின் உடலின் ஒத்துழையாமை போன்ற காரணங்களினால் விபத்துக்கள் நடக்கின்றன. எனினும், எல்லா பழியும் வைத்தியர்களின் மீதே விழுகிறது என்பது அவர்களின் வாதம்.

எனினும், ஜெனிபர் விடயத்தில் மருத்துவத்துறையினரும் கவனத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்களும் உள்ளது போலத்தான் தெரிகிறது. குறிப்பாக, நோயாளியை கொண்டு சென்றவர்களிடம் சேவிங் ரேசர் வாங்கிவரச் சொன்னதாக பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் சுமத்தும் குற்றச்சாட்டு பற்றிய தெளிவுபடுத்தல்கள் அவசியம்.

வைத்தியத்துறை மீது குற்றம் சுமத்துவது நமது நோக்கமல்ல. நோய் என்றால் எந்த தயக்கமுமின்றி வைத்தியசாலைக்கு செல்லும் ஒவ்வொரு பொதுமகனினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமல்லவா!

- தீபம் குழு

**ஜெ**னிபர் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் வைத்தியசாலைகளில் ஆறுநாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். அவர் இறந்தபின்னர் நடத்தப்பட்ட பிரேதப்பரிசோதனையிலேயே இடது கை முறிந்திருந்ததும், முதுகு மற்றும் பிட்டத்தில் பெரிய காயம் கண்டுபிடிக்கப்பட்டது. வைத்தியசாலைகளில் அதற்கு சிகிச்சையும் வழங்கப்படவில்லை. இது உறவினர்களின் குற்றச்சாட்டு.



**இ**துபற்றிய மேலதிக தகவல்களை அறிய மன்னார் பொதுவைத்தியசாலை அத்தியட்சகர் ஈற்றன் பீரிஸை தொடர்பு கொண்டோம். வைத்தியசாலை தொடர்பான சர்ச்சைகளினால் அவர் மனமுடைந்திருந்தார். மன்னாரிற்கு இடமாற்றலாகி ஆறுமாதங்களே ஆகின்றன. ஆர்ப்பாட்டக்காரர்களின் பதாகைகளில் வைத்தியசாலை நிர்வாகத்தை சீர்குலைக்க வேண்டாமென குறிப்பிடப்பட்டிருந்தது அவரை அதிகம் காயப்படுத்தியதாக கூறினார்.









**ம**ன்னார் பொதுவைத்தியசாலை சத்திரசிகிச்சைக்கூடத்திற்கு பயன்படுத்தப்படும் உடைகள் உள்ளிட்ட பல்வேறு உடைகள் வெள்ளநீரில் சுத்தம் செய்யப்படும் அதிர்ச்சி படங்கள் தீபத்திற்கு கிடைத்துள்ளன. ஜீவபுரத்தில் அமைந்துள்ள தனியார் சுத்திகரிப்பு நிலையத்தில் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. பின்னர் அவற்றை உலரவைத்தபோதும், முறையான சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாக தெரியவில்லை.

# டூரிங் டாக்கீஸ்



## ஐ ஆம் வெயிட்டிங்: நித்யா மேனன்

காதல் கிசுகிசுக்களிற்கு பதில் சொல்லியிருக்கிறார் நித்யா மேனன். பதினெட்டு வயதில் காதலித்து பிரிந்ததற்கு பின்னர் இதுவரை யாரையும் காதலிக்கவில்லையாம். மலையாள நடிகர் சுதீப்பை காதலிக்கிறார் என வெளியான செய்திகளால் சூடான நித்யா, அது பற்றி விளக்கம் கொடுத்துள்ளார். பதினெட்டு வயதில் காதலித்தவரை பிரிந்துவிட்டேன். அவருடன் சேர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை பாதுகாப்பானதாக இருக்குமென தோன்றவில்லை. பிரிந்துவிட்டேன். அதன் பின்னர் மனம் கவர்ந்த யாரையும் சந்திக்கவில்லை என கூறியுள்ளார்.





## குடும்ப வாழ்க்கையில் ஸ்வாதி

சுப்பிரமணியபுரம் ஸ்வாதி தமிழில் ஒரேயொரு படத்தில் நடித்து வருகிறார். அவரை காப்பாற்றி வந்த மலையாளமும் கைகழுவிவிட்டது. தெலுங்கில் மருந்துக்கு ஒரு பேய் படம். மார்க்கெட் டல்லடித்த நடிகைகள் என்ன செய்வார்கள்? கரெக்ட், ஸ்வாதியும் வீட்டில் தனக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லியிருக்கிறார். முன்னணி நடிகைகள் திருமணம் செய்தாலே திரையுலகம் திரும்பிப் பார்க்காது. ஸ்வாதி திருமணம் செய்து கொண்டால் மட்டும் வாய்ப்பு தரவாப் போகிறது. அதனால், திருமணத்துக்குப் பிறகு நடிப்பேன் என்றெல்லாம் ஜல்லியடிக்காமல், திருமணத்துக்குப் பிறகு முழுமையாக அர்ப்பணிப்புடன் இல்லறம் நடத்தப் போகிறேன் என்று கூறியுள்ளார்.

## சிம்ரனை அடிக்க தயங்கினேன்: இனியா

சிம்ரன், இனியா, நிகிஷா ஆகியோர் நடிப்பில் உருவாகியிருக்கும் படம் 'கரையோரம்'. இதில் இனியா, நிகிஷா, படத்தின் இயக்குனர் ஜே.கே. எஸ் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். இப்படம் குறித்து இனியா கூறும்போது, 'இந்த படத்தில் வித்தியாசமான தோற்றத்தில் நடித்திருக்கிறேன். கிளைமாக்ஸில் என்னுடைய கதாபாத்திரத்தில் திருப்பம் அமைத்திருக்கிறார்கள். சீனியர் நடிகர் சிம்ரனுடன் நடித்தது சிறந்த அனுபவமாக இருந்தது. கிளைமாக்ஸில் எனக்கும் சிம்ரனுக்கும் சண்டைக் காட்சி இருக்கிறது. இந்த சண்டைக் காட்சியில் சிம்ரனை அடிக்க மிகவும் தயங்கினேன். ஆனால், சிம்ரன் என் தயக்கத்தை போக்கி நடிக்க வைத்தார். கேமராவிற்குப் பின் சிம்ரன் வேறுமாதிரியாகவும், கேமராவிற்கு முன் அனுபவம் வாய்ந்த நடிகையாகவும் ஆச்சரியப்படுத்தியுள்ளார். 'கரையோரம்' படம் மூன்று மொழிகளில் வெளியாகவுள்ளது. மூன்று மாநிலத்திலும் எனக்கு நல்ல பெயர் சொல்லும் படமாக இப்படம் அமையும். இப்படத்தை தவிர மலையாளப் படத்திலும் நடித்து வருகிறேன்' என்றார்.

## அடிக்க ஆசைப்படும் த்ரிஷா

இப்பொழுதெல்லாம் விதவிதமான வேடங்களில் நடிக்க த்ரிஷா ஆர்வம் காட்டுகிறாராம். தூங்காவனம் படத்தில் கமலுடன் சண்டைக்காட்சிகளில் மோதினார். அதன்பின்னர் சண்டைக்காட்சிகளில் நடிக்க ஆர்வப்படுகிறாராம். சண்டைக்காட்சிகளில் நடிக்க ஆரம்பத்தில் பயமாக இருந்ததாகவும், கமல் அதனை போக்கி நடிக்க வைத்ததாகவும் கூறினார். இனிவரும் படங்கள் சண்டைக்காட்சிகளுடன் இருந்தால் மகிழ்ச்சியடைவேன் என்றும் கூறியுள்ளார். த்ரிஷா அடிக்க ரெடி. யார் வாங்கப் போகிறீர்கள்?





## லிப்லாக் ராகுல் ப்ரீத் சிங் ஓகே

தமிழில் படவாய்ப்புகள் இல்லை. ராசியில்லாத நடிகை என்று ஓரங்கட்டினர். அதனால் ஏற்கனவே சில தெலுங்கு படங்களில் நடித்திருந்த ராகுல் ப்ரீத்சிங், ஆந்திராவில் முகாமிட்டு தெலுங்கு படங்களுக்காக தீவிர வேட்டை நடத்தினார். விளைவு, அங்கு அரை டஜன் படங்களில் வரிசையாக கமிட்டானார். அப்படி பல படங்கள் கிடைக்க காரணமாக இருந்தது அவர் ஒரு படத்தில் லிப் லாக் முத்தக்காட்சியில் நடித்து ஆந்திராவிலுள்ள இளவட்ட ரசிகர்களை சூடேத்தி விட்டதுதானாம். அதனால் அதையடுத்தும் பல படங்களில் உதட்டு முத்தக்காட்சியில் நடித்த ராகுல் ப்ரீத்சிங், தான் நடித்துள்ள இரண்டு இந்தி படங்களிலும் முத்தக்காட்சியில் நடித்திருக்கிறாராம். இந்நிலையில், தமிழைப் பொறுத்தவரை, ஆரம்பத்தில் அடக்கி வாசித்த ராகுல்ப்ரீத்சிங், சமீபத்தில் சென்னை வந்து சில கமர்சியல் டைரக்டர்களுடன் மீட்டிங் நடத்தியுள்ளார். அப்போது, தெலுங்கு படங்களுக்கு துளியும் குறையாமல் கிளாமராக நடிக்க தயாராக இருக்கிறேன் என்று சொன்னவர், கதைக்கு அவசியப்பட்டால் உதட்டு முத்தக்காட்சியில் நடிக்கவும் நான் தயார். அந்த விசயத்தில் எந்த கண்டிசனும் என்னிடம் இல்லை என பேசியுள்ளாராம். அதனால் விரைவில் சில முன்னணி ஹீரோக்களின் படங்களில் ராகுல் ப்ரீத் சிங் நடிப்பார் என்று தெரிகிறது.

## கவர்ச்சி இல்லாத ஸ்ருதியா?

ஸ்ருதிஹாசனிற்கு இன்னொரு பெயர் கவர்ச்சி. காட்டு காட்டென காட்டிக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் அஜித்தின் வேதாளம் படத்திலும் திகட்ட திகட்ட கவர்ச்சி காட்டியிருந்தார். தமிழிலேயே இப்படியென்றால் தெலுங்கை பற்றி சொல்லத் தேவையில்லை. தானாக தீபற்றாத குறை. அப்படியிருந்த ஸ்ருதியை பிடித்து சேலைகட்டி நடிக்க வைக்கவுள்ளனர். அதுவும் தெலுங்கில். மலையாள ஹிட் 'பிரேமம்' தெலுங்கில் தயாராகிறது. சாய்பல்லவி நடித்த டீச்சர் வேடம் ஸ்ருதிக்கு. கவர்ச்சியில்லாமலும் தாக்குப்பிடிப்பேன் என்பதை ஸ்ருதி நிரூபிப்பாரா பார்க்கலாம்.

## விஜய் சேதுபதியின் ஜோடி

விஜய் சேதுபதியின் தர்மதுரை படம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆர்.கே. சுரேஸ் படத்தை தயாரிக்கிறார். ஏற்கனவே இவர் விஜய் சேதுபதியை வைத்து ஒருபடம் தயாரிக்க முயன்றதும், பின்னர் இருவருக்கும் லடாய் ஆகி கைவிடப்பட்டதும் பழையகதை. இருவருக்கும் பஞ்சாயத்தானது. திடீர் ஆச்சரியமாக தர்மதுரை படத்தில் இவர்கள் இணைகிறார்கள். சீனு ராமசாமி படத்தை இயக்கவுள்ளார். படத்தில் விஜய் சேதுபதியின் ஜோடி யார் என்பதுதான் இன்னமும் தீர்மானமாகவில்லை. பார்வதி அல்லது லட்சுமி மேனன் பக்கம் காற்றுவீசும் என தெரிகிறது.





மன்னார் அமுதன்
amujo1984@gmail.com

# "ஏழைகளின் குதிரை" வரவும் வரலாறும்

**அறிமுகம்:**

மன்னார் மக்களின் அன்றாட வாழ்விலிருந்து பிரிக்கமுடியாத ஒரு விலங்கினமாக கழுதைகள் காணப்படுகின்றன. இன்று அளெ சகரியத்தை ஏற்படுத்தும் ஒரு உயிரினமாக கழுதைகள் எதிர்ப் புணர்வோடு மலினமாகப் பார்க் கப்பட்டாலும், அவை மனித வரலாறு முழுவதும் உதவும் கால் களுடனும், சுமைதாங்குவதற் கென்றே படைக்கப்பட்ட மிருகங் களாகவும் தம்மை அடையாளப் படுத்திக்கொண்டு எம்மோடு நடந்து வருகின்றன.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் 375 கழுதைகளும், மன்னார் நகரம் முழுவதுமாக ஆயிரத் திற்கும் மேற்பட்டதாகவும் இலங் கைத்தீவு முழுவதுமாக 3000ற்கு மேற்பட்ட கழுதைகள் காணப் படுவதாகவும் அண்மையில் (2012) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கூறுகின்றன. உலகம் முழுவதும் இதன் எண்ணிக்கை 41 மில்லியனாக (2006) இருக்கின்ற போதிலும் 1995 ஆண்டுடன் ஒப்பிடும் போது (43.7 மில்லியன்) இதன் தொகை குறைந்துள்ளது கவனத்திற்குரியது.

> **கொலம்பஸ் அமெரிக்கா சென்ற போது அவருடன் 4 ஆண்கழுதை களையும், 2 பெண் கழுதைகளையும் கொண்டு சென்றார் என்ற அரிய தகவலானது மிகவும் ஆச்சரிமூட்டக்கூடியதாக உள்ளது.**

இலங்கையில் புத்தளம், கற்பிட்டி, ஆகிய பகுதிகளில் கழுதைகள் வாழ்ந்தாலும் மன்னாரில் தான் அதிக அளவில் வாழ்கின்றன. இதனால் மன்னார் கடந்த காலங் களில் "கழுதை நகரம்" என்று செல்ல மாக அழைக்கப்பட்டதுடன் அதிக எண்ணிக்கையிலான கழுதை களைக் கொண்டவர்கள் பெரும் தனவந்தர்களாக அறியப்பட்ட காலப்பகுதிகளும் வரலாற்றில் உண்டு.

உடலுழைப்பிற்கு பெயர்பெற்ற கழுதைகளை உரிமைகோருவதற்கு எவருமற்ற சூழலை நவீன காலமும், அதன் நிமித்தமான தொழில் நுட்பமும் ஏற்படுத்தியுள்ள இன்றைய நாட்களில் கட்டாக் காலிகளாக சுற்றித்திரியும் கழுதை களால் ஏற்படும் விபத்துகளின் அதிகரித்த எண்ணிக்கை காரண மாக அவற்றை மன்னார் பிரதேசத் தில் இருந்து வெளியேற்றுவதற்கான செயற்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்றன. எனினும் அவை பலனளிக்கவில்லை. இத்த கைய சூழலில் கழுதைகளைப் பழக்கி பிரதேச சுற்றுலாத்துறை வளர்ச்சியில் பயன்படுதுவதன் மூலம் கழுதைகளைக் காக்கவும், மக்கள் மத்தியில் அவற்றிற்கான புகழை மீண்டும் ஏற்படுத்தவும் பிரிஜ்ஜிங் லங்கா போன்ற நிறுவனங்கள் முயன்றுவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**கழுதைகளின் வாழ்க்கையும், இயல்பும்:**


ஈகியூஸ் அசினஸ் (Equus asinus) எனும் அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் காட்டுக்கழுதை இனமானது, குதிரை மற்றும் வரிக்குதிரை குடும்பத்தைச் சார்ந்த தாவர உண்ணியாகும். பொதி சுமக்கும் கழுதைகளின் வாழ்க்கைக் காலமானது ஏழைநாடுகளில் 12 15 வருடங்களாகவும் பணக்கார நாடுகளில் 3050 வருடங்களாகவும் கணக்கிடப்படுகிறது. உரிய பராமரிப்பின் கீழ் சராசரியாக 40 வருடங்கள் வரை கழுதைகள் வாழும். எனினும் கழுதைகலின் வயதை 1 வருடத்திற்கு ஒரு முறை கணிப்பதில்லை. ஏனெனின் ஒரு பெண் கழுதையின் கற்பகாலமானது (gestation) ஒரு வருடமும் இரண்டு வாரங்களும் ஆகும்.

கழுதைகளின் அளவானது (size) அவற்றின் இனத்திற்கு ஏற்ப மாறுபடும். பொதிக்கழுதைகளின் தோள் உயரமானது 80150 செ.மீட்டராகவும், வாலின் நீளம் 42 செ.மீ, தலைமுதல் பின்பகுதி வரையான நீளம் 200செ.மீட்டராகவும் உள்ளது. மார்புச்சுற்றளவையும் (Heart Girth squared) நீளஉயரத்தையும் பெருக்கி வரும் நிறையை 11,877 ஆல் வகுத்து இவைகளின் எடையைக் கணக்கிட (monograph) முடியும் (Source: Carroll& Huntington, 1988). கழுதைகள் தமக்குள் தொடர்புகளை ஏர்படுத்திக்கொள்ள மிகை யொலி களைப் பயன்படுத்துகின்றன. கழுதை கத்துவதன் மூலம் (bray) 12 கி.மீ அப்பால் உள்ள தனது இனத்தை தொடர்புகொள்ளக்கூடியது.



இதற்கு அதன் நீண்ட காதுகளும், பலமான தொண்டையமைப்பும், சக்திமிக்க நுரையீரலும் உதவு கின்றன.

கருப்பு, சாம்பல், பழுப்பு / கபில




நிறங்களைக் கொண்ட கழுதைகள் 80 275கிலோகிராம்நிறையுடையதா கஉள்ளதோடுஅதன்கால்கள்கற்பா றைகளிலும், உயரமானமேட்டிலும், உயர்ந்த கட்டிடப்படிகளிலும் ஏறக் கூடியவாறு நன்குபலம் உள்ள தாக அமைந்துள்ளது. தனக்கோ, தன் குட்டிக்கோ அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும் போதோ அல்லது கழுதைகள் குழப்பமடையும் போதோ எதிரில் இருப்பவர்களை கடித்தோ, முன்னங்கால்களால் அடித்தோ, பின்னங்கால்களால் உதைத்தோ தனது எதிர்ப்பை வெளிக்காட்டும்.

சுமார் 40மில்லியன் ஆண்டு களுக்கு முற்பட்ட காட்டு விலங்குகளாக மனிதநாகரிகத்திற்கு அறிமுகமாகும் காட்டுக்கழுதைகள் (wild ass) கி.மு4000 முதல் கி.மு 3000 வரையிலான காலப்பகுதியில் வீட்டுவிலங்குகளாக பழக்கப்படுத் தப்பட்டு எகிப்து அல்லது மெச படோமியாவிலிருந்து உலகின் பிறபகுதிகளுக்கு பரவலாக் கப்பட்டுள்ளது. இவை சுமார் 5000 ஆண்டுகளாக தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுவருவதாக வரலாற்று ஆவணங்கள் கூறு கின்றன. கொலம்பஸ் அமெரிக்கா நோக்கிச் சென்ற போது அவருடன் 4 ஆண்கழுதைகளையும், 2 பெண் கழுதைகளையும் கொண்டு சென்றார் என்ற அரிய தகவலானது மிகவும் ஆச்சரிமூட்டக்கூடியதாக உள்ளது.

இன்று இலங்கையில் காணப் படும் கழுதைகளானது எகிப்து நாட்டைச் சேர்ந்த அட்லஸ், ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த சோமாலிய கழுதைகள் மற்றும் சிரியா நாட்டைச்சார்ந்தகழுதைகள் இனங்களாக அறியப்படுகிறது. இவற்றுள் மன்னார் பிரதேசத்தில் காணப்படும்கழுதைகள் சோமாலிய கழுதைகள் (EquusAfricanusAsinus) வகையைச் சார்ந்தவையாகவும், வணிக நோக்கிற்காக கி.பி.8ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்த அரேபிய வணிகர்களால் இவை இங்கு கொண்டு வரப் பட்டு வர்த்தக நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பள்ளிக்கூடங்களில் மெள்ளக் கற்கும் சிறுவர்களையும், தொழிற் கூடங்களில் பணியாற்றாமல் சோம் பிக்கிடக்கும் தொழிலாளர்களையும் "முட்டாள் கழுதை" , "சோம் பேறிக் கழுதை" எனும் வசைமொழிகளைப் பயன்படுத்தி கீழ்மைப்படுத்துவதுண்டு. எனினும் இந்த வசைமொழிகள் கழுதைக்கு சற்றும் பொருத்தமற்றவை.

மனிதர்களைச் சார்ந்து வாழும் (symbiotic) தன்மைகொண்ட கழுதைகள், நாய்களை ஒத்த அறிவுக்கூர்மையையும், விசுவாசத் தையும் தன் எஜமானர்களிடம் வெளிக்காட்டக் கூடியவை என்பன அறிவியல் ஆய்வுகளின் மூலம் நிரூபனமாகியுள்ளன.

[P] 011 kord_pdf_0001_0001_Black.TIF | 2015\11\20 16:16:21 | UV014P807197Z |

பெரும்பாரங்களைச் சுமக்கவும், பாரங்களுடன் மலைகளில் ஏறவும், மந்தைகளையும் பண்ணைகளையும் பாதுகாக்கவும் கழுதைகள் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கற்பாறைகளுடன் கூடிய மேட்டு நிலப்பரப்பிலோ அல்லது உலர்ந்த தாழ்நிலப்பாலைகளிலோ வாழுவதையே கழுதைகள் விரும்புகின்றன. அத்தகைய உலர்ந்த தாழ் மற்றும் வரண்ட நிலஅமைப்பைக் கொண்ட மன்னார் பிரதேசத்தில் கழுதைகள் அதிகரித்துக் காணப்படுவதற்கு இங்குள்ள பருவகாலமும், நிலஅமைப்பும் முக்கியப் பங்காற்றுகின்றன. கழுதைகள் கூட்டமாக வாழுவதையும், தாம் பிறரால் அரவணக்கப்படுவதையும் விரும்பும் தன்மை கொண்டவை. இவைகள் கூட்டமாகவோ, குதிரைகளுடனோ, மட்டக்குதிரைகளுடனோ (pony) சேர்ந்து திரிவதை மன்னார் பிரதேசத்தில் காணக்கூடியதாக உள்ளது.

சமூக அந்தஸ்து மற்றும் பொருளாதார வளர்ச்சியில் கழுதைகளின் தாக்கம்:

கழுதைகளினால் பல பயன்பாடுகள் இருந்தாலும் குறிப்பாக உப்பளங்களிலும், வயல்வேலைகளிலும் (புறநானூறு 15 நெட்டிமையார், ஹத்திகும்பாகல்வெட்டு, புறநானூறு 392 ஔவையார்), சலவைத் தொழிலிலும், மீனவர்கள் மீன்களையும் வலைகளையும் சுமந்து செல்லவும், விறகுகளை வெட்டிச் சுமக்கவும், மனிதர்களைச் சுமந்து செல்லவுமென பொதிக் கழுதைகளின் பயன்பாடு அதிகரித்துக் காணப்பட்டதுடன் இச்சமூகங்களில் கழுதைகள் மிகப்பெரிய சொத்தாக கணிக்கப்பட்டு வந்தன. சீதனம் வழங்கலில் கழுதைகளின் எண்ணிக்கை பிரதானமானதாகவும், அதிக கழுதைகளை வைத்திருப்பவர்கள் தனவந்தர்களாகவும் மதிக்கப்பட்டனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஏளனத்துடன் நோக்கப்படும் இக்கழுதைகள் தான் போர்த்து கேயர்கள் மன்னார் பிரதேசத்தில் சென். ஜோர்ஜ் கோட்டையைக் கட்டும் போது பெரும் பாறைகளை அனாயசமாக சுமந்து உதவிசெய்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.



மேலும் எழில்நிறைந்த மன்னாரின் பெருநிலப்பரப்பு எவ்வாறு நன்னீருக்கும், நெல்லுக்கும் பெயர் பெற்றதோ அதே போன்று மன்னார் தீவும், பிரதேச நிலப் பரப்பும் பெருமளவிலான தென்னந் தோட்டங்களின் அமைவிடமாக உள்ளது.

குருத்துகளை அழித்து தெங்கு சாகுபடியை பெருமளவில் வீழச்செய்த தென்னம் வண்டுகளையும் (Coconutrhinoceros beetles), ஓலைகளை அழிக்கும் பூச்சியினத்தையும் (coconut caterpillar) எதிர்த்து எத்தகைய கிருமிநாசினிகளும், மனிதர்களின் எதிர்நடவடிக்கைகளும் பயனளிக்காத அக்காலப்பகுதியில் தோட்டங்களில் வளர்த்த கழுதைகள் எழுப்பும் மிகையொலிக் (>80dB) கத்தலானது காண்டாமிருக வண்டுகளை மரங்களின் அருகில் அண்ட விடாமல் துரத்தியுள்ளதாக அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படாவிட்டாலும் இன்றும் நம்பப்படுகிறது. அத்துடன் கழுதையின் விட்டை (dung), சிறுநீர் காரமணமானது இளங்குருத்துகளையும், ஓலைகளையும் தின்னும் வண்டுகள், பூச்சிகளை ஈர்க்கிறது.

பூச்சிகள் விட்டையில் முட்டைகளை இடுகின்றன. குஞ்சுகள் பொரிப்பதற்கு முன்னமே கழுதை விட்டை விரைவாகக் காய்ந்து விடுவதால் மேற்கொண்டு இனவிருத்தி அடையாமல் அவ்வினம் அழிவடைகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இவைகள் பூச்சிக்கொல்லியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வளர்முக நாடுகளில் செல்லப்பிராணியாக கழுதைகள் வீடுகளில் வளர்க்கப்பட்டு வருகின்ற போதிலும் 96% கழுதைகள் ஏழை நாடுகளில் பொதிசுமக்கும் கழுதைகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மனித உழைப்பிற்கு வழங்கப்படும் கூலியோடு ஒப்பிடுகையில் கழுதைகள் தம் எஜமானர்களின் பொருளாதாரத்தைப் பெருக்குவதில் பெரும்பங்காற்றுவதை அறியமுடிகிறது. எனினும் மன்னார் பிரதேசத்தில் கழுதைகள் இன்று கைவிடப்பட்ட நிலையில், காட்டு விலங்குகளைப் போல் சுற்றித் திரிகின்றன.

எகிப்தின் குடும்ப ஆட்சி முறைகளில் (dynasty 4) கிமு 2675 க்கும்கி.மு 2565 இடைப்பட்ட காலப்பகுதியில் 1000ற்கும் மேற்பட்ட கழுதைகளை உடையவர்களே சமூகத்தில் கனவான்களாக போற்றப்பட்டனர். எகிப்தின் ஆட்சியாளர்களான அரசர் நேமர் , அரசர் ஹோர் அஹா (King Narmer or King Hor-Aha) அவர்களின் எலும்புக்கூடுகள் 2003 ஆம் ஆண்டில் தோண்டியெடுக்கப்பட்டன. அப்புதைகுளியில் 10 கழுதைகளும், மனிதர்களுக்கு வழங்கப்படும் அதியுச்சகௌரவம் வழங்கப்பட்டு அரசனோடு சேர்த்து புதைக்கப்பட்டிருந்தமையானது கழுதைகளுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

தொடரும்...

---

# யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்




யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் சுழிபுரம் கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி திரு. முருகேசு கந்தையா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது அதிபராக திரு.வே.முருகேசு அவர்கள் பதவியெற்றுக் கொண்டார். அப்பொழுது ஒன்பது பிள்ளைக்கு நாள்ப்பாடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆரம்பப்பாடசாலையாகவே காணப்பட்டது.

திரு. கந்தையா அவர்களும் பல இளைஞர்களும், பெரியோர்களும் வீடு வீடாக சென்று மாணவர்களை சேர்த்தும், சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் படித்த மாணவர்களை இணைத்தும் 65 பிள்ளைகள் வரை சேர்த்துக் கொண்டனர். தொடர்ந்து பாடசாலையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மலாயா சென்றார். செல்கின்ற போது பாடசாலை பொறுப்பினை திரு. இ.மாதவன் அவர்களிடம் ஒப்படைத்தார். மலாய் சென்ற பின் பாடசாலைக்கு தேவையான தளபாடங்களை செய்ய ஒரு தொகை பணத்தை உடனே அனுப்பினார்.

மனேச்சர் மாதவன் அவர்களினால் பாடசாலை நிர்வாகம் கண்காணிக்கப்பட்டது. இப் பிரதேசத்து பாடசாலைகளை “சைவ வித்தியா விருத்திச் சங்கம்” பெறுப்பேற்ற வேளை அப்போது பாடசாலை நிர்வாகத்தை கண்காணித்த மனேச்சர் மாதவன் அவர்களே சைவ வித்தியா விருத்திச் சங்க சு.ராசரத்தினம் போன்ற பெரியோர்களுக்கு கையொப்பமிட்டு மெய்கண்டான் பாடசாலையை ஒப்படைத்தார்.

யாழ். மெய்கண்டான்.பாடசாலையின் அதிபராக தற்போது திருமதி க.சுலபாமதி அவர்கள் பதவி வகிக்கின்றார். இப் பாடசாலையில் 36 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். 586 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆரம்பப் பிரிவு தெடக்கம் உயர் தரம் வரை மாணவர்கள் கல்வி கற்க கூடிய வாய்ப்பு உள்ளது. உயர் தரத்தில் கலைப் பிரிவும், வர்த்தகப்பிரிவும் இப்பாடசாலையில் உள்ளது.

இப்பாடசாலைமாணவர்கள்பல சாதவீனைகளை படைத்துள்ளனர் அதற்கு எடுத்துக் காட்டாக 2014 ஆம் ஆண்டு புரிந்த சாதனைகளை கூறலாம்.

தமிழ்மொழித்தினப்போட்டியில் மாகாண மட்ட நாட்டுக்கூத்து இரண்டாம் இடத்தையும், மாகாண மட்ட கணித நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர். அதே ஆண்டில் இப் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தேசிய மட்டத்திலான அரச சிறுவர் நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளனர். மாகாண மட்ட ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் மாகாண மட்ட ஆங்கில எழுத்தாக்கப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர். அத்துடன் அதே ஆண்டில் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசிற் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரிட்சையில் கலைப்பிரிவில் சோ. ஜனனி “3ஏ” சித்தி பெற்றுப் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவ் ஆண்டு அதாவது 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் நான்கு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இப் பாடசாலை பண்ணாகம், தொல்புரம், சுழிபுரம், மூளாய், சித்தங்கேணி ஆகிய அயற் கிரம மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்கின்ற ஓர் பாடசாலையாக இருக்கிறது.

எனினும், இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் தொகைக்கேற்ப வகுப்பறை வசதியில்லாமை ஓர் கவலைக்குரிய விடயமாவே காணப் படுகின்றது.

## அதிபர்
## திருமதி. க. சுலபாமதி



எமது பாடசாலை வலிகாமம் வலயத்தில் சங்கானைக் கல்விக் கோட்டத்தில் சிறந்து விளங்கும் 1ஊ பாடசாலை ஆகும் பண்ணாகம், தொல்புரம், சுழிபுரம், மூளாய், சித்தங்கேணி ஆகிய அயற் கிராமங்களில் வாழும் மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் சிறந்த வித்தியாலயங்களில் ஒன்றாக இப் பாடசாலை திகழ்கிறது. கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் திறமைமிக்க மாணவர்களை உருவாக்கிப் பல சாதனைகளை படைத்த பெருமையுடன் விளங்குகின்றது. மாணவர்களின் தொகைக்கேற்ப வகுப்பறை வசதிகள் இல்லாத போதும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னேடுக்கத்தக்க ஆளணி வளம் உள்ளமை சிறப்பம்சமாகும்.

பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு, பெற்றோர், நலன்விரும்பிகள், கல்வித்திவீணைக்களம் போன்ற பல்வேறு தரப்பினரின் பூரண ஒத்துழைப்புடன் வளர்ச்சிப் பாதையில் பாடசாலை சென்று கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் பாடசாலையில் அழகிய தூபி, வாயில் என்பன புதிதாக அமைக்கப்பட்டு மாணவர்கள் விருப்புடன் வருகை தரும் கல்விக்கூடமாக இன்று எமது பாடசாலை காட்சி தருகின்றது. எதிர்காலத்தில் எமது வளத்தேவைகள் யாவும் நிறைவு பெற்று மேலும் வளர்ச்சி பெறும் என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.



# தலைமுடி இரகசியங்கள்

இன்றைய பெண்களுக்கு தலைமுடி எந்தளவு அவசியமாகின்றதோ அந்தளவு பிரச்சனையாகவுமுள்ளது. அடர்த்தியாக அழகான தலைமுடியை வளர்க்க ஆசைப்படும் நாம், ஸ்ரைல் என்ற போக்கில் தாறுமாறாக வெட்டித் தள்ளுகின்றோம். நேரமின்மை மற்றும் அவசரம் என்ற காரணங்களை காட்டிக் கொண்டு கைக்கெட்டும் பல சம்பூக்களை தடவுகின்றோம். இவையே நமது தலைமுடிக்கு எதிரி என்பதை நாம் எத்தனை பேர் அறிவோம்.

### முடி ஏன் உதிர்கின்றது

உடலில் உள்ள நோய்களே முடி உதிர அடிப்படைக் காரணம். அப்படி இல்லையேல் எண்ணெய் பசை இல்லாமல் முடி வரளுதல் அதிகளவு ரென்சன் இறுக்கமாக தொப்பி அணிதல் சம்பூக்களை மாற்றி மாற்றி வைத்தல் நாளுக்கு அதிக நேரம் தலைக்கவசம் அணிதல் எண்ணைகளை மாற்ஜீ மாற்றி வைத்தல் வீடுகளிலோ அழகுக்கலை நிலையங்களிலோ ஸ்ரேற் பண்ணும் பொழுது வெப்பத்தை தலையில் பட விடுதல் போன் எமது சீரற்ற பராமரிப்புக்களே முடி உதிர காரணம்.

இதை விட பொடுகு தொல்லை. இது இன்னொருவருடைய தலையில் இருந்து கூட தொற்றி விடும். எனவே மற்றவர்களுடைய சீப்பு, ரவல் என்பவற்றை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தலையில் ஏற்படும் வரட்சி காரணமாகவும் எண்ணை சுரப்பிகள் குறைந்து இறந்த செதில்படலம் உருவாகுவதாலும் பொடுகு உண்டாகின்றது.

எனவே உணவு முறைகளில் மாற்றம் செய்ய வேண்டும். பொடுகில் இருந்து முடியை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு முடி உதிர்வதை கவனிக்காதவிடத்து வழுக்கைக்கு காரணமாகி விடுகின்றது. பெண்களின் முடி நுனி வெடிப்பதற்கு காரணம் உடல் நிலை பாதிக்கப்பட்வீமையே ஆகும். எண்ணை இனிப்பு பண்டங்களை தவிர்த்தல் வேண்டும். உணவுகளை சீராக கவனித்தல் வேண்டும்.

பொடுகு முடி உதிர்வைக் கண்டால் அலட்சியமாக இருக்காமல் வைத்தியரை நாட வேண்டும். முடிந்தவரை அரைப்பை பயன்படுத்தி தலை குளிஜீக்க வேண்டும்.

சிறுவயதில் இருந்து நமக்கு பழக்கப்பட்ட எண்ணை பாவிக்க வேண்டும்.

தொப்பி தலைக்கவசம் முடிந்த வரை தவிர்த்தல் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் முடி உதிர்வை குறைத்து எமது அழகை மெருகூட்ட முடியும்.

---

தேனீர் குடித்த கப் மற்றும் தம்ளர்களில் தேனீர் கறை போகவில்லையா? சலவை சோடா மா கலந்த தண்ணீரில் அவற்றை 3 மணி நேரம் ஊறவைத்து பின் தண்ணீர் ஊற்றிக் கழுவுங்கள். கறை நீங்கி தம்ளர்கள் சுத்தமாக பளிச்சிடும்!

சமையலறையில் கை தவறி முட்டையைக் கீழே போட்டு உடைத்து விட்டீர்களா? கவலை வேண்டாம். உடைந்து சிதறிக்கிடக்கும் முட்டைக்கருவின் மீது உப்புத்தூளைபோட்டு மூடுங்கள். இரண்டு நிமிடம் கழித்து ஒரு துண்டு பேப்பரால் அள்ளுங்கள். சமையலறை சுலபமாகச் சுத்தமாகும்!

அலுமினிய கடாய் மற்றும் பிரசர் குக்கர் பாத்திரங்களின் அடியில் படிந்துள்ள கறை நீங்க அவற்றின் உள்ளே சில அப்பிள் தோல்களை போட்டு சிறிது தண்ணீர் விட்டுக் கொதிக்க வையுங்கள். கொதித்த தண்ணீரில் கழுவி சுத்தம் செய்யுங்கள் கறை நீங்கி பாத்திரங்கள் பளிச்சிடும்!

உங்கள் சமையல் மேடை மற்றும் சமையலறையின் தரையில் அழுக்கு அதிகமாக படிந்து விட்டதா? கவலை வேண்டாம். ஒரு பாத்திரத்தில் கால்பங்கு தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் 4 மேசக்கரண்டி புளிக்கரைசல் வினீகர் அல்லது எலுமிச்சைச்சாறு கலந்த கலவையை 10 நிமிடம் கொதிக்கவைத்து இறக்குங்கள். அக்கலவையினை அழுக்குபடிந்த சமையல் மேடை மற்றும் சமையலறையின் தரையின் மூலை முடுக்குகளில் ஊற்றி ஸ்ரீம் பூல் சோப் இனால் துடைக்கவும். பின்பு தண்ணீர் ஊற்றிக் கழுவினால் சமையலறை பளிச்சிடும்ஜீ.

போத்தலில் வீசும் துர்நாற்றம் நீங்க வேண்டுமா? அப்பாட்டிலில் பாதியளவு தண்ணீர் ஊற்றி அதில் ஒரு மேஜை கரடி கடுகு அல்லது அப்பச்சோடா போட்டு நன்றாக குலுக்குங்கள். ஒரு மணி நேரம் ஊறவைத்து பின் கழுவுங்கள். போத்தல்டி துர்நாற்றம் நீங்கி நீங்கிவிடும்.



# முட்டை



**மெழுகுதிரி கொழுத்தி அதில் முட்டையை பிடித்து பார்க்கும் போது வாயு வெளி சிறிதாகவும் வெண்கரு வெளிவாகவும் மஞ்சட் கரு இளஞ்சிவப்பாகவும் காணப்பட்டால் நல்ல முட்டை.**

இதை தெரியாது குழந்தைகள் கூட இருக்க முடியாது. கோழி முட்டை ஒன்று பொதுவாக 60g வரை நிறை கொண்டது. வீட்டில் பல அம்மாக்கள் 'முட்டையில் அதிக போசாக்குள்ளது இதை சாப்பிட்டால் தான் குண்டாக ஆரோக்கியமாக இருப்பதுடன் அறிவு வளரும்' என்று குழந்தைகளுக்கு நாளுக்கு 2, 3 முட்டைகளை ஊட்டுவதை கண்டிருப்போமல்லவா. அவ்வாறு முட்டையில் சத்துள்ளது என்பதை அறிந்த அம்மாக்கள் முட்டை பற்றி முழுமையாக அறிந்திருப்பது அவசியமாகின்றது.

### வெண்கரு

இந்த வெண்கரு அல்புமின் எனும் புரதத்தை கொண்டது. இது கூழ் பதமாக காணப்படும். அதற்கு காரணம் மியூசின் எனப்படும் நார்ப்பொருள். அத்துடன் இதில் அபிடின் எனும் புரதமும் காணப் படுகின்றது.

**குறிப்பு:** அபிடின் புரதம் பயோட்டின் எனும் உயிர் சத்துடன் சேர்ந்து சிக்கலை உருவாக்குவதால் பச்சை முட்டை உண்ணுபவர்களுக்கு பயோட்டின் குறைபாடு ஏற்படுகின்றது. இதனால் தான் பச்சை முட்டை தவிர்க்க வேண்டும் என்கிறார்கள்.

முட்டை அவிக்கும் போது அபிடின் அழிவடைவதால் பயோடின் சிக்கலை உருவாக்காது.

### மஞ்சட் கரு

இதில் ஓபோவிட்டலின், இலிப்போவிட்டலின், இலைசின் போன்ற புரதங்கள் உள்ளன. புரதச் சத்து நிறைந்த உணவு முட்டை மஞ்சட்கரு.

இது அமிலோ அமிலங்களை அதிகம் கொண்டிருப்பதால் நிறையுணவாகும். அத்துடன் கொழுப்பு சத்துக்களையும் கொண்டுள்ளது.

இதன் மஞ்சள் நிறத்திற்கு காரணம் கந்தோவில் எனப்படும் நிறப் பொருள்.

**குறிப்பு:** முட்டையில் இரும்பு அதிகம் காணப்பட்டாலும் இலகுவில் அகத்துறிஞ்சப்பட மாட்டாது. இதற்கு காரணம் வெள்ளைக் கருவில் உள்ள கொல்அல்புமின் என்னும் புரதத்துடன் இனைந்து சிக்கலை உருவாக்குவதாகும். இதனால் தான் முட்டை இரவில் உட்கொள்ள கூடாது என்பர்.

### சமைக்கையில்

வெண்கரு 134fல் திரட்சியடைகின்றது. அதனால் தான் அதிக வெப்பத்தில் வைரமாகின்றது.

மஞ்சட்கரு 158fல் கட்டியாகி விடும். வெண்கரு நீரில் கரையும் தன்மை கொண்டது.

நீண்ட நேரம் சமைப்பதால் தாதுப் பொருட்களில் மாற்றம் ஏற்பட்டு மஞ்சள் கரு பச்சை கருவாக மாறிவிடும்.

### சிறந்த முட்டையா என பரிசோதிக்க

**பரிசோதனை 1:** 10வீதம் கறியுப்பை நீரில் கரைத்து அக்கரைசலில் முட்டையை இட்டுப்பார்த்தால் முட்டை அடியில் பதியுமாயின் நல்ல முட்டை. மிதக்குமானால் பழுதடைந்த முட்டை.

**பரிசோதனை 2:** மெழுகுதிரி கொழுத்தி அதில் முட்டையை பிடித்து பார்க்கும் போது வாயு வெளி சிறிதாகவும் வெண்கரு வெளிவாகவும் மஞ்சட் கரு இளஞ் சிவப்பாகவும் காணப்பட்டால் நல்ல முட்டை. இல்லையேல் வெண்கரு மஞ்சட்கருவாகவும் மஞ்சட் கரு கடும் சிவப்பாகவும் வாயு வெளி ஒளி புகாத நிலையிலும் காணப்பட்டால் அது பழுதடைந்த முட்டை.

### பாதுகாக்க

குளிரூட்டல்

சோடியம் குளோரைட் கரைசலில் வைத்தல்

உமி அல்லது மரத்தூசில் வைத்தல்

எண்ணை பூசி வைத்தல்


பிசின் பூசி வைத்தல்

**குறிப்பு:** மரத்தூளில் வைக்கும் போது முட்டையின் அகன்ற பகுதி மேலேயும் மற்றய பகுதி கீழேயும் வைக்க வேண்டும். அப்போது தான் மஞ்சட் கரு சமநிலையில் இருக்கும்.

பி.சியா
siyapj27@gmail.com



# பெண்ணின் அழகில் கோலம்...



கோலம்... இன்றய தலைமுறையினரை பொறுத்த வரை இது திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பாடசாலை மற்றும் அலுவலக மங்கள விழாக்கள், தைப்பொங்கள் பண்டிகை போன்றவற்றில் அழகுக்காகவும் சம்ரதாயத்திற்காகவும் போடப்படும் அழகுப் புள்ளி.

ஆனால் ஆடை அணிகள் புகைதல் என்ற பொருள் கொண்ட இந்த கோலம் என்ற சொல்லின் பின்னால் எத்தனை சிறப்பம்சங்கள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்களா?

மூன்று வருடங்களின் முன்னர் ஒருநாள் அம்மம்மாவோடு இருந்து திரைப்படம் ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கையில் கதாநாயகி கோலம் போடும் காட்சி ஒன்று இடம்பெற்றது. அம்மம்மாவிடம் கேட்டேன் 'இந்தியாவில் இப்படி தினமும் காலையில் கோலம் போடுவார்களா' என்று. அதற்கு அவர் ஆம் என்று கூறி விட்டு நிறுத்தவில்லை. கோலம் பற்றி ஆரம்பித்து அந்தக் காலத்தில் தனக்கும் தாத்தாவிற்கும் நடந்த ரொமான்ஸ் வரையும் நினைவுகளை மீட்டார். அப்போது கேட்கும் போது சிரிப்பாக இருந்தது. ஆனால் இன்று மீட்டு பார்க்கையில் அம்மம்மா கூறிய கோலத்தின் பாரதத்தில் இத்தனை உண்மைகள் உள்ளன என உணர முடிகின்றது.

'முந்தி மார்கழி திருவம்பாவை வந்து விட்டால் எல்லா வீட்டு வாசலிலும் கோலம் தான். இதை விட செவ்வாய் வெள்ளி என்றால் கட்டாயம் ஆச்சி கோலம் போடும். ஏனென்று கேட்டால் அது வீட்டுக்குள்ள பிள்ளி பேய் வராமல் இருப்பதற்கும் காலையில வெளிக்கிட்டு போகும் போது கோலத்தில முழிச்சால் அபசகுனங்களில்இருந்து சுபசகுனம் கிடைக்கும் என்பார். அதோட முந்தி ஒரு வீட்டில் காலையில்போட்ட கோலத்தினை அழித்து மறு கோலம் போட்டால் அந்த வீட்டில் குழந்தை பிறந்துள்ளதாக அர்த்தம். அது மட்டும் இல்லாமல் இறந்த வீட்டில் எட்டு செலவிற்கு ஒற்றை இதழில் கோலம் போடுவதும் வழக்கம். ஆனால் அது இப்ப இல்லை'.

ஆச்சி சொன்னது அவவோட நம்பிக்கை. ஆனால் பெண்கள் கோலம் போடுறது சிறந்த உடல் பயிற்சி. படங்களில் கதாநாயகி போடுவது போல ஒற்றை காலில் அந்தரத்தில் இருந்து கொண்டு ஒற்றை கையினால் போடுவது அல்ல கோலம். உட்காராமல் குனிந்து நின்று போட வேண்டும். அப்போதுதான் இடுப்பு நன்றாக வளையும். முழங்கால், கழுத்து, முழங்கை, தசைகள் எல்லாம் சுருங்கி விரியும். சகல விரல்களுக்கும் நல்ல பயிற்சி. அத்துடன் குனிந்து நிற்கும் போது வயிறு அழுத்தப்படும். அப்படி அழுத்தப்படுவதால் தொப்பை விழாது. 'இதை உங்கட தாத்தா எனக்கு கழியாணம் செய்த புதுசுல அடிக்கடி நினைவு படுத்துவார்' என்று கூறும்போது அம்மம்மாவின் கண்களில் காதல் கோலம் போட்டதும் அழகு தான்.

கோலம் என்றாலே மாக் கோலம், தானியக் கோலம்,பூக்கோலம்,புள்ளி கோலம் என்று பல வகையான கோலங்களை பாடசாலைகளில் இடம்பெறும் கோலம் போட்டிகளில் கற்றிருப்போம் அல்லவா? இந்த எல்லா கோலத்தையும் விட புள்ளி கோலம் சிறப்பு பெற்றது. ஏன் தெரியுமா? அதற்கு பின்னால ஒரு வாழ்க்கை தத்துவமே இருக்கென்றால் பாருங்கள்.

புள்ளிகள் எப்பவுமே நிலையான இடத்தில் நிற்குமாம். ஆனால் கோடுகள் வளைந்து நெளிந்து புள்ளிகளை தனக்குள் ஆக்கி அழகு படுத்தும். இதுதான் புள்ளி கோலம். அப்படி உட்படுத்தாமல் புள்ளி வெளியில் வந்தால் கோலம் அசிங்கமாகிவிடும். இப்படிதான் ஒரு குடும்பத்திலும் ஆண் புள்ளி. பெண் கோடு.

அன்பால் வளைந்து ஆணை தன் கைப்படுத்தி வைத்திருந்தால் குடும்பம் சிறக்குமாம். இதனால் தான் ஒரு வீட்டில் கோலம் போட்டிருந்தால் அந்த குடும்ப தலைவி சிறப்பானவளாக அந்தக் காலத்தில் கருதப்பட்டாளாம்.

இதனை விட இன்னொருமுக்கிய காரணமும் உள்ளது. கோலம் பொடும் ஒவ்வொரு பெண்ணும் சமதர்ம பெண்ணாகிறாள். அதாவது, அரிசி மாவினால் இடும் புள்ளிகோலத்தினை அன்றைய நாள் முழுதும் எறும்பு, புளினி, அணில் போன்ற உயிரினங்கள் எல்லாம் உண்டு பசிதீர்த்து கொள்கின்றன. அத்தோடு கோலமிடும் வீட்டில் மகாலட்சுமி குடியிருப்பாள் என்பதும் ஒரு நம்பிக்கையும் கூட.

இன்றைக்கும் பிராமணர்கள் மற்றும் சில நாதஸ்வரக் கலைஞர்களின் வீட்டு முற்றத்தில் கோலம் அழகாக காட்சியளிப்பதை காண முடிகின்றது.

மனிதர்கள் கச்சிதமாக வாழ பண்டைய வாழ்க்கைமுறை கற்றுத்தந்த இப்படியான மரபுகளை நாங்கள் இழந்து வருவது, ஏதோ விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. நேரத்தை மிச்சப்படுத்தவும், உடல்சிரமத்தை தவிர்க்கவும் மாத்திரமே புதியபுதிய தயாரிப்புக்கள் உதவுகிறது. உடலையும், வாழ்வையும் ஆரோக்கியமாக பேணும் மரபுகளை விட்டுச் செல்வது பெருந்துயரமே!



# சீஸ் புடிங்

குழந்தைகளை காலையில் அல்லது சிற்றுணவாக விரும்பி உண்ண வைக்க கூடிய உணவு புடிங். அத்துடன் நிறை போசாக்குடையது. சாதாரணமாக நாம் கொடுக்கும் முட்டைஇ ரொட்டி, பாண் போன்றவற்றை தினமும் குழந்தைகள் உட்கொள்ள மாட்டார்கள். எனவே அவற்றை மாற்றி சத்து நிறைந்த உணவாக புடிங்கை கொடுக்கலாம்.

**தேவையான பொருட்கள்:**

உரொட்டித் தூள் : 2கப், சீஸ் துருவல் : 200g, வெண்ணெய் : 200g, பால் : 1 லீற்றர், உப்புத்தூள் : தேவையான அளவு, மிளகுதூள் : தேவையான அளவு, முந்திரி பருப்புத்தூள் : அரைக்கப்

**செய்முறை:**

1. பாத்திரம் ஒன்றில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்துக் கொதிக்க விடவும். நன்கு கொதிக்க தொடங்கியதும் பாதியளவு வெண்ணெய் போடவும் வெண்ணெய் நன்கு கரைந்ததும் அதில் ரொட்டித்தூளையும் முந்திரி பருப்பையும் கொட்டி நன்றாக கிளறி விடவும்.
2. வேறொரு பாத்திரத்தில் மீதமுள்ள வெண்ணெயை உருக்கி ஊற்றி அதில் சீஸ் துருவல் மிளகு தூள் உப்புத் தூள் ஆகியவற்றைப் போட்டு கலக்கவும் அதன் பின் பால் உரொட்டித்தூள் கலவையையும் அதில் சேர்த்து நன்றாக கிளறி கொள்ளவும்.
3. மற்றுமொரு பாத்திரத்தில் வெண்ணெய் தடவி அதில் அந்த கலவையை கொட்டி 350 பாகை வெப்பத்தில் 45 நிமிடம் பேக் செய்து கொள்ளவும்.

இன்றே செய்து கொடுங்கள் சுவையான புடிங்கை உங்கள் குழைந்தைகளுக்கு.




மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் தீபம் வாரஇதழ் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. உடுவை எஸ். தில்லை நடராசாவினால் தீபம் வாராந்த பத்திரிகையின் பிரதிகள் மாநகரஆணையாளர் எம். உதயகுமார் உள்ளிட்ட பிரமுகர்களிற்கு வழங்கப்பட்டது.



# என் சோதிடம்

# அதிஷ்ட விஞ்ஞானம் தரும் வாழ்வு முன்னேற்றங்கள்



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392

**எண் 2 (சந்திரன்)**

இயல்பாக சலனமடைந்த கிரகம் என சந்திரனை சோதிடநூல்கள் விபரிக்கின்றன. ஜல தத்துவ அடிப்படையானது (அப்பு). இதிலிருந்து உண்டானது மனம். இது சந்திரனால் ஆளப்படுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் வரும் 2, 11, 20, 29 திகதிகளில் பிறக்கும் ஒவ்வொருவரும் இந்த எண்ணால் ஆளப்படுவார்கள். சந்திரன் பிரகாசம் தந்து விடுபடும் சுபாவம் போன்று பொதுமக்கள் மத்தியில் நல்லவர்கள் வல்லவர்கள் கெட்டவர்கள் என்றும் மதிக்கப்படுபவர்களாகவும் காணப்படுவர்.

பொதுவாக இவர்களிடம் பாவனை செய்தல், கற்பனை செய்தல், சந்தேகமான நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல், ஆராய்ச்சிசெய்தல்போன்றகுணாம்சங்கள் காணப்படும். இதில் கற்பனா சக்தியே கூடுதல் பெலம் தரும். எப்பொழுதும் யோசனை மிகுந்தும் மனதை அலைபாயவிட்டும் காணப்படுவர். ஒரு விடயத்தைப் பற்றி புதிய புதிய உபாயங்களையும் வித்தியாசமான அபூர்வமான யோசனைகளையும் தந்த வண்ணம் இருப்பர். தெய்வபக்தி குருபக்தி தன்னம்பிக்கை இவர்களை உயர்த்திவிடும். இவை இல்லையாயின் புத்திப்பிரகாசமும் மேன்னையும் இவர்களுக்கு கிடைக்காது. பொதுவாக தன்னையும் நம்பார். பிறரையும் நம்பார். ஒரு கருமத்தைப் பிறரிடம் நம்பி ஒப்படைக்க எளிதில் மனம் வராது. தூன் செய்தால் திருப்திப்படுவர். ஒரு தரம் பூட்டிய கதவை பல தடவைகள் இழுத்துப் பார்ப்பவர்களாக காணப்படுபவர்கள் இவர்கள்தான். இயல்பாக பயங்கொள்ளி. ஆயினும் ஒரு சிலர் மேன்மையாய் சாந்தகுணசீலராய் வாழ்வர். இன்னும் சிலர் சண்டைப் பிரசண்டகாரர்களாகவும் மிகைப்படுத்திப் பேசுபவர்களாகவும் காணப்படுவர்.

இவர்களில் சிலர் சந்தர்ப்பவாதிகளாகவும் காணப்படுவர். கெஞ்சினால் மிஞ்சுவர். மிஞ்சினால் கெஞ்சுவர். உண்மை சத்தியம் பேசுபவர்களும் உண்டு. பொய்யுரைப்பவர்களும் உண்டு. இவர்களது புத்தி ஒரே மாதிரி இருக்காது. சூழ்நிலைகளை அனுசரித்து மாறிய வண்ணம் இருக்கும். தன்னுடன் பழகுபவர்களுடைய குணங்களை எளிதில் பின்பற்றிவிடுவர். நல்லதும் கெட்டதும் செய்பவர்களாக இருப்பதால் இந்த எண்ணில் பிறக்கும் குழந்தைகளை பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே எச்சரிக்கையாக வளர்ப்பது நல்லது. இந்த எண் கொண்டவர்கள் பிறருக்கு பிரமாதமான யோசனைகள் சொல்வார்கள். ஒரு கருமத்தைச் செய்து முடிப்பதற்கு திரும்பத் திரும்ப யோசித்து மனதைக் குழப்புபவர்களாகவும் காணப்படுவர். ஒரு சிலர் நல்ல நகைச்சுவையாகவும் மற்றவர்களைக் கிண்டல் செய்பவர்களாகவும் இருப்பர்.



சாதாரணமாக இவர்களிடம் சோம்பல் காணப்படும். உழைப்பில் ஈடுபட மனநாட்டம் இருக்காது. பலரும்பலமாதிரிச்சொல்கிறார்கள் என மனதைக் குழப்பியவராய்க் காணப்படுவர். விதண்டாவாதம் குதர்க்கம் தர்க்கம் இவற்றைச் செய்வதில் இவர்கள் நன்கு விருப்பப்படுவர். கஷ்டம் நஷ்டம் பெரிதுபடுத்திவருத்தப்படுவர். வீணான பயங்களையும் யோசனைகளையும் இவர்கள் கட்டுப்படுத்த வேண்டும். நல்ல சிறந்த கற்பனையை தன் வசமாக்கிக் கொள்பவர் சிறந்த கதாசிரியன் சிறந்த கலைஞன் ஆகிவிடுவான். கற்பனையில் மூழ்கிறவன் பைத்தியக்காரன் என வர்ணிக்கப்படுவான். தோல்வியோ கஷ்டமோ நஷ்டமோ இழப்போ வந்தால் தற்கொலைக்கான எண்ணங்களும் இந்த எண் கொண்டோருக்குஏற்படும். சிலர் நீரில்மூழ்கி வாழ்க்கையை முடிப்பர். எனவே தெய்வநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் இவர்களுக்கு மிகவும் அவசியமாகும். வாழ்க்கையை மேலான குறிக்கோள் உடையதாகச் செய்து கொள்ள வேண்டும். திடநம்பிக்கை வளரவேண்டும். வீண் பயம் நீக்கப்பட வேண்டும்.

**தொழில்:** நேர்மை நாணயம் கடைப்பிடிக்க வேண்டும். இதனால் இவர்களுக்கு பலரும் உதவ முன் வருவர். ஏழ்மையிலிருந்து பிரபுத்துவம் பெறுவர். தெய்வ நம்பிக்கை தன்னம்பிக்கை இரண்டும் இருப்பின் குறைவற்ற செல்வம் பெற்று வாழ்வர். சாதாரண தொழிலாளிகூட பிரபுவாக வாழும் நிலை காணப்படும். நல்ல சமத்தனான பேச்சாளரயிருப்பர். வக்கீல் சட்டத்தரணி தொழிலில் பிரகாசிப்பர். காவியம் ஓவியம் சங்கீதம் சிற்பம் என்பவற்றிலும் பிரகாசிப்பர். இதைவிட விவசாயம், புடவை வியாபாரம், பாற்பண்ணை, ஹோட்டல், நகைமாடம், அழகுசாதனம், தைலங்கள், திரவமருந்துகள், சாயப்பவுடர்கள், போட்டோ ஸ்ருடியோ என்பவையும் இவர்களுக்குப் பொருந்தும். நல்ல பொருளீட்டி சம்பாதித்துக் கொள்ளலாம். இவர்கள் சொல்லும் சொற்கள் தெய்வ வாக்காகக் கொள்ளக்கூடியதாயும் அமையும். ஆலயங்களில் கலையாட்டம் கொண்டு வாக்குச் சொல்லும் அநேகம் பேர் இந்த ஆதிக்கம் கொண்டரேயாவார்.

**மணவாழ்க்கை:** இந்த எண் ஆதிக்கம் கொண்டோரில் நம்பிக்கை வளர்ந்த ஒருசிலர் மாத்திரமே சுகமாக மனைவியோடு வாழ்பவர்கள். மற்றவர்கள் எல்லாம் மனைவிமாருடன் நித்தம் நித்தம் சண்டை போடுபவர்களாகவே இருப்பர். ஆண் பெண் இருவருக்கும் இது மாறி மாறி பொருந்தும். நீதிமன்றங்களில் காணப்படும் விவாகரத்து வழக்குகளில் அநேகமானவை இந்த ஆதிக்கம் கொண்டோருடையதாகும். விவாகமாகி மிக சொற்ப காலத்திற்குள்ளேயே இந்நிலை தரும். பெண்களால் கணவன்மாருக்கு அதிக நன்மை ஏற்படுவதில்லை. பெரும் பெரும் வாழ்வுச் சிக்கல்களில் சில கணவர் அகப்படுவார். குணப்பொருத்தமுடைய பெண் ஆணுக்கும் ஆண் பெண்ணுக்கு கிடைப்பது மிகவும் குறைவாகும். இவர்களுடைய காதல் வாழ்வும் இடையில் முறிந்துவிடும். கூடுதலாக மாமியார் மருமகள் சண்டைகள் இந்த எண் கொண்ட பெண்களுக்கு அமையலாம். ஆந்த எண்காரர்கள் 1ம் 7ம் எண்களில் பிறந்தவர்களை பரஸ்பரம் கணவன் மனைவியாகக் கொண்டால் வாழ்வில் சிக்கல்கள் ஏதுமின்றி குடும்ப வாழ்வு அமையும். 2க்கு 7உம் 7க்கு 2உம் காதல் வசீகரம் கொண்டவையாகும்.

**உடலமைப்பு:** பூரண ஆதிக்கம் கொண்டால் நல்ல உயரமுடையவர்களாகக் காணப்படுவார்கள். இல்லாவிடில் குட்டையானவர்களாய் காணப்படுவார்கள். சிலர் மொத்தமானவர்களாக இருப்பர்.

> **தெய்வ நம்பிக்கை தன்னம்பிக்கை இரண்டும் இருப்பின் குறைவற்ற செல்வம் பெற்று வாழ்வர். சாதாரண தொழிலாளிகூட பிரபுவாக வாழும் நிலை காணப்படும். நல்ல சமத்தனான பேச்சாளரயிருப்பர்.**

உருண்டையான தலை, குட்டையான கேசம், கனத்த கண் இமைகள், பெரிய கண் உடையவராய் காணப்படுவர். பற்கள் அகன்று நீண்டிருக்கும். மூக்கு சிறிது பருத்து மேல் நோக்கி அமைந்திருக்கும். சதைப்பிடிப்பற்ற கழுத்தும், வலிமை குறைந்த கால்களும் அமையும். சிலருக்கு நல்ல தொந்தி வயிறு காணப்படும்.

**நோய் - உணவு:** இவர்களுக்கு உணவு ஜீரணிக்கும் உறுப்புகள், மூத்திரக்காய்கள் சம்பந்தமான நோய்கள் விரைவில் ஏற்படும். நீரிழிவு வியாதிகள் Diabetes இவர்களில் பெரும்பாலானோர்க்கு உண்டாகும். ஊடலமைப்பு மிக அவசியம் என்பதையும் சோம்பலின்றி இருக்க வேண்டியதையும் இந்நோய் உணர்த்தும். திரவ உணவு

வகைகளை அதிகம் விரும்புவர். குடிப்பழக்கம் வந்துவிட்டால் பின்னர் அது தணியாத தாக நிலைக்கு கொண்டு செல்லும். இவர்கள் தண்ணீர் கூடுதலாகக் குடிப்பது மிகவும் நல்லதாகும். மரக்கறிவகைகளில் பூசணி, பரங்கி, வெள்ளரி, முட்டைக்கோவா, முளைக்கீரை என்பவை நோய்களை அணுகாது பாதுகாக்கும். பழவகைகளில் முலாம்பழம், தர்பூஸ்பழம், வாழைப்பழம், மாதுளம்பழம், மங்குஸ்தான் நல்லனவாகும். முருங்கைக்கீரை சமைத்து உட்கொண்டால் சிறுநீரிலுள்ள சர்க்கரையை நன்றாகக் குறைக்கும்.

**2ம் திகதியில் பிறந்தவர்கள்:** மிதமிஞ்சிய கற்பனாசக்தி, உயர்ந்த இலட்சியங்கள், பயந்தசுபாவங்கள், சாந்தம், மனோசக்தி, தீவிர கற்பனை, ஆராய்ச்சி செய்தல், சமூகத்திற்கு உதவுதல் போன்ற விசேட குணாம்சங்கள் அமைந்து காணப்படும். புரட்சிகரமாக சிந்திப்பார்கள். பேனா பிடித்தால் எழுத்து மூலம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவர். வாய்ச்சண்டையும் போடுவர்.

**11ம் திகதி பிறந்தவர்கள்:** தெய்வ நம்பிக்கையும் தெய்வ அனுக்கிரகமும் அமையப்பெறுவர். நம்பிக்கை மூலம் தமது கருமங்களைச் சாதிப்பர். படிப்பு தொழில் செல்வம் சேமிப்பு என்பவற்றை தெய்வ நம்பிக்கை மூலம் பெற்றிடுவர். மிக உயர்ந்த அந்தஸ்தான நிலைகளையும் பெற்றிடுவர்.

**20ம் திகதி பிறந்தவர்கள்:** சிறந்த வழிகாட்டிகளாக அமைவார்கள், சுயநலம் இருக்கும், சுயநலமின்றி வாழ்ந்தால் "மனிதரில் தெய்வம்" என மதிக்கப்படுவர். நல்ல கற்பனாவளம் கொண்டிருப்பர். தனது சுயலாபம் கருதி தெய்வ நம்பிக்கையை சில சமயம் சிதறடித்துவிடுவார். பேராசையின்றி இருந்தால் கண்ணியமானவராய் மதிக்கப்படுவார்.

**29ம் திகதி பிறந்தவர்கள்:** சாந்தியையும் சமாதானத்தையும் விரும்புவார். ஆனால் சண்டைப்பட்டே அதை அடைய வேண்டும் என எண்ணுவார். இதனால் சதா சண்டையிட்டுக் கொண்டே காணப்படுவார். நண்பர்களை எழிதில் நம்பிக்கை கொள்ள மாட்டார். சில நண்பர்கள் தன்னை ஏமாற்றுவதாகக் கூறுவர் தருணம் பார்த்து பிறருக்கு உதவுவர். "சுயகாரியப்புலி" என வர்ணிக்கப்படுவா. மிகவும் நல்லவர் போல தன்னைக் காட்டிக் கொள்வர். வீராப்பாய்ப் பேசுவார். ஆனால் உள்ளூர கோழைத்தனமும் பயமும் காணப்படும். எதிரி மிஞ்சினார் உடனே நயந்துவிடுவார்கள். துஷ்ட சிநேகிதம் இல்லாது இருந்தால் நல்லது. எதற்கும் சண்டையை விரும்பும் இவர்கள் திருந்தி நடந்தால் புகழ்கிட்டும்.

**பெயரில் 2 எண் கொண்ட பலன்கள் வருமாறு:**

**பெயர் எண் 11:** தெய்வ நம்பிக்கையால் வாழ்வில் முன்னேறுவர். புலவிதமான இலாபங்களையும் சுலாமாகப் பெறுவர். செய்தொழில் கருமங்களில் திடீர் திடீரென சிக்கல்கள், ஆபத்துக்கள், பிணக்குகளில் சிக்கிக்கொள்வர். நண்பர் உறவினர்களால் சிலசமயம் ஏமாற்றப்படுவர். நம்ப நடந்தால் உயர்வுகள் கிடைக்கும்.

**எண் 56 அற்புதமான எண் எனலாம். நல்ல புகழையும் லக்ஷ்மி கடாட்சத்தையும் கொடுக்கும். மந்திரவாதிகள் போன்று செயற்படுவதற்கு இவ்வெண் சிறந்ததாகும். பூட்டுக்கள்திறக்கும்.**

**பெயர் எண் 20:** விடுதலை முரசொலியை இவ்வெண் குறிக்கும். மற்றவர் துன்பம் துயரம் துடைக்க முன்நிற்பர். விஷம் ஏதாவது தீண்டி துன்பம் துயரம் கொடுக்கும். தன் நலத்திலும் மிகுந்த அக்களை கொள்வார். இவ்வெண் துக்கநிலையில் உள்ள மனிதர்களைக்கூட பெரிய பெரியகருமங்களுக்கு தூண்டக்கூடியதாகும்.

**பெயர் எண் 29:** இந்த எண்ணிக்கை உடையவர் அடிக்கடி நீதிமன்றுக்கு சென்று நீதிபதிக்கு முன் நிற்க நேரிடும். குடும்ப வாழ்வில் சில சிக்கல்களை சந்திக்க நேரிடும். நண்பர்கள் உறவினர்கள் பலர் விசுவாசமில்லாதவர்களாகி விடுவர். இவர்களைப் போற்றியவர் தூற்றுவார். கணவன் மனைவியாலும் மனைவி கணவனாலும் தீராத கஷ்டத்துக்கு ஆளாவார்கள். சம்சாரம் அது மின்சாரம் ஆகலாம்.

**பெயர் எண் 38:** நேர்மையாக நடப்பதையும் சாந்தமாக இருப்பதையும் விரும்புவர். வியாபார முயற்சிகளில் விசாலமான நிலையைக் கொடுக்கும். சாதாரண அளவில் தொடங்கும் வாழ்வு படிப்படியாக புகழையும் செல்வத்தையும் கொடுக்கும். ஆனால் எதிர்பாராத கஷ்டமும் வந்து நீங்கும். வஞ்சகமுள்ளவர்களை பங்காளிகளாக சேர்க்கக்கூடாது.

**பெயர் எண் 47:** மிகவேகமாக வாழ்க்கையில் முன்னேறுவர். தனது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருப்பார். பணப்புழக்கம் நன்றாய் அமைந்து காணப்படும். கண்கள் பாதிப்படைய சந்தர்ப்பம் உண்டு. பார்வை இல்லாமலும் போகலாம். ஐசவ ஆசாரம் பேணுபவராயின் நலமான வாழ்வு பெறுவார்.

**பெயர் எண் 56:** இது அற்புதமான எண் எனலாம். நல்ல புகழையும் லக்ஷ்மி கடாட்சத்தையும் கொடுக்கும். மந்திரவாதிகள் போன்று செயற்படுவதற்கு இவ்வெண் சிறந்ததாகும். பூட்டுக்கள் திறக்கும். விலங்குகள் உடைக்கப்படும். மாயாஜாலம் கொண்டது. வாழ்வின் இறுதியில் செல்வம் சிறப்பு மறைந்து போகும் நிலையையும் கொடுக்கும்.

**பெயர் எண் 65:** இதுதெய்வாம்சம் ஆன்மீகம் என்பவற்றைக் குறிக்கும். செல்வாக்குள்ளவர்களின் ஒத்தாசையும்பூரண ஆதரவும் உண்டாகும். சுந்தோஷகரமான திருமணமும் கிடைக்கும். சில ஆபத்துக்கள் உடற்காயங்களையும் சந்திக்கவும் நேரிடலாம்.

**பெயர் எண் 74:** தீவிரமான மதப்பற்று இவர்களுக்கு இருக்கும். சீர்திருத்தவாதிகள் பிரசங்கிகள் என பலராலும் அழைக்கப்படுவர். பணம் வரும் போகும். நிலையான செல்வம் கஷ்டமாகும். சந்நியாச வாழ்வு போன்று ஆத்மார்த்த சிந்தனையுடன் கூடிய வாழ்வுக்கு ஏற்ற எண்ணாகும்.

**பெயர் எண் 83:** இந்த எண் மேன்மையான பதவியைத் தரும். எல்லோரும் வணங்கும்படியான அந்தஸ்து தரும். ராஜபோக வாழ்வு அமையும். பலரையும் வெற்றி கொள்ளும் நிலை தரும். இந்த எண்ணை பெயரில் உடையோர் வெற்றிவீரராய் விளங்குவர்.

**பெயர் எண் 92:** பொன் பொருள் செல்வம் காணி பூமி மனை கட்டிடம் என்பவை கிடைக்க



வழி ஏற்படும். காற்றுடன் கலந்த எண்ணாகும். இதனால் விமான பயணங்கள் கூடுதலாய் அமையவும் செய்யும்.

**பெயர் எண் 101:** சொந்த தொழில் முயற்சிகளை விடவும் அரச ஆதரவு தொழில் முயற்சிகளினால் அதிக நன்மை கிடைக்கும். எவ்வாறாயினும் தொழிலில் மந்த நிலை தோற்றுவிக்கும்.

**அதிஷ்ட நாள்கள்:** 7,16,25 திகதிகள் அதிஷ்டம் தரும். அதிக நன்மை, அதிக லாபம், சந்தோஷம் என்பவற்றை எதிர்பார்க்கலாம். கூட்டெண் பிறந்த ஆண்டு மாதம் திகதி 7 வருவதும் நல்லதாகும். இந்த மூன்று திகதிகளிலும் 25 எண் வலிமை கொண்டதாகும். இதுதவிர 1,10,19,28 திகதிகளும் சாதகமானவை ஆகும். புதிய முயற்சிகளை 1,7 வரும் திகதிகளில் ஆரம்பிப்பது வெற்றி தரும்.

**துர் அதிஷ்ட நாட்கள்:** 8,9,18,26 திகதிகள் நன்மை தராதவையாகும். ஏந்த முயற்சியும் பயனளிக்காது. கூட்டெண் 8, 9 எண் வரும் திகதி கொண்ட நாட்களும் தீய பலன்களையே தரும்.

**வர்ணம்:** இலேசான பச்சை வர்ணம் மிக அதிர்ஷ்டமானது. இவர்கள் வதியும் இடங்களில் இவ்வர்ணம் இருந்தால் நல்லது. இதைவிட பச்சை சேர்ந்த வர்ணம், வெளிர் மஞ்சள், வெள்ளை என்பவையும் நன்மை அளிக்கும். கறுப்பு சிவப்பு நீலம் வர்ணங்கள் மிகப் பாதிப்பானவையாகும்.

**உலோகம்:** பொன்னும், வெள்ளியும் உகந்தவை ஆகும். இரண்டையும் கலந்து உபயோகிக்கலாம்.

**இரத்தினம்:** முத்து நன்மை. வைடூரியம் நன்மை. JADE என்ற கல் MOONSTONE என்றகல் நல்லதாகும். ஆங்கில எழுத்துக்களில் B,K,R என்பன எண் 2 ஐக் குறிப்பவையாகும். இவை ஆரம்ப எழுத்துக்களாய் அமைந்தால் வலிமை கூடுதலாய் இருக்கும்.

---





# கல்லாப்பெட்டியை நிரப்பும் காதல்

'ஏரோம் போட்டு யோசிப்பார்களோ' என தலையை பிய்க்கும் விதமாக ஏமாற்றுக்காரர்கள் தற்போது தலையெடுத்துள்ளனர். சற்று அசந்தால் போதும், காற்சட்டையையே உருவிக் கொண்டு சென்றுவிடும் பலே கில்லாடிகள் பலர் தற்போது வடக்கில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியானவர்களிடம் சிக்கி, சின்னாபின்னாமாகிவரும் அப்பாவிகளின் எண்ணிக்கை ஏராளம்.

அப்பாவகளின் தலையில் மிளகாய் அரைப்பவர்களிற்கு எச்சரிக்கை மணியடிக்கும் விதமான சம்பவமொன்று கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

பெண்களை ஏமாற்றியதாக கூறப்படும் ஒருவரை பொதுமக்கள் சூட்சுமமாக பிடித்து, மின்கம்பத்தில் கட்டிவைத்து அடித்துள்ளனர்.

திருமணம் செய்வதாக ஆசை வலை விரித்து, பெண்களை அதில் வீழ்த்தி பின்னர் அவர்களிடமிருந்து நகைகளை வாங்கி ஏமாற்றி தலைமறைவாகுவதை வாடிக்கையாக கொண்டிருந்தார் என கூறப்படுகிறது. திருகோணமலையின் தோப்பூர் பகுதியை சேர்ந்த அப்துல் ஹலீம் (36) என்பவரே நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண்ணொருவரை காதலிப்பதாக ஆசைகாட்டி, அவரை நம்பவைத்துள்ளார். விரைவில் திருமணம் செய்வேன் என்றும் வாக்குறுதி வழங்கியுள்ளார். யாழிலிருந்து அந்தப்பெண்ணை வெளியிடத்திற்கு அழைத்து சென்று, அவரிடமிருந்த நகைகளை சூட்சுமமாக ஏமாற்றி வாங்கினார் என கூறப்படுகிறது. அதன்பின் அந்தபெண்ணுடனான தொடர்புகளை துண்டித்து விட்டு, தப்பிச் சென்று விட்டார்.

பின்னர் திடீரென ஒருநாள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இருவருக்கும் வெளிநாடு செல்வதற்கு விசா கிடைத்துள்ளது, அதற்கு சிறிது பணம் தேவையாக உள்ளது. அதை தயார் செய்தால் வெளிநாடு போகலாமென மீண்டும் ஆசைவலை விரித்ததாக கூறப்படுகிறது. ஆசாமியை சிக்கவைக்க இது தான் சரியான தருணமென அந்த யுவதி திட்டமிட்டார். ஆசாமி நம்பும் விதமாக பேசி, கொக்குவிலின் குளப்பிட்டி பகுதிக்கு அழைத்தார் என்றும், அதை நம்பிவந்த ஆசாமியை தயார் நிலையில் நின்ற இளைஞர் குழு வளைத்துப் பிடித்ததாக கூறப்படுகிறது.

பிறகென்ன, ஆத்திரம் தீரும்வரை துவைத்தெடுத்துள்ளனர். சம்பவத்தை அறிந்த பொலிசார், சம்பவ இடத்திற்கு சென்று அவரை கைது கொண்டுசென்றுள்ளனர். ஆசாமிக்கெதிராக அந்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.



# ஊடு பயிரில் அசத்தும் அன்னாசி!



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



அன்னாசி ஒரு சதைப்பற்றான சுவையுள்ள பெரியபழமாகும். விவசாயிகளுக்கிடையே வாழைக்கு அடுத்தபடியாக பிரபல்யமான, தென்னந்தோட்டங்களில் இலாபகரமாக வளரக்கூடிய ஒரு ஊடு பயிராகும். இதற்கு ஈர, மற்றும் ஈர இடைவெப்ப வலயங்களில் கிடைக்கக்கூடிய சாதகமான கால நிலை,நுகர்வோர் கேள்வி,கிடைக்கக் கூடிய வருமானம் மற்றும் பொருத்தமான மண் வகைகள் போன்ற காரணிகள் பங்களிப்பு செய்கின்றன. ஆரம்பத்தில் ஏற்படும் அதிக செலவு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை என்பன அண்மைக்காலங்களில் அன்னாசி வளர்ப்பில் பாதகமான விளைவைக் கொண்டுவந்தன. விவசய நிலங்களில் நடாத்தப்பட்ட இசைவாக்க பரிசோதனைகள் அன்னாசியின் விலை படிப்படியாக அதிகரிப்பதால் தென்னை வளர்ப்பாளர்கள் இதை உறபத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

## 1. பொருத்தமான இடத்தை தெரிவு செய்தல்

### 1.1 பொருத்தமான பிரதேசங்கள்

ஈரவலயத்தில் கம்பஹா, மீரிகம மற்றும் அத்தனகல்ல பிரதேசங்களும் ஈர இடைவெப்ப வலயத்திலுள்ள நாத்தாண்டியா, குளியாப்பிட்டிய போன்ற இடங்களில் உள்ள தென்னந்தோட்டங்கள் அன்னாசி நடுகைக்குபிரசித்தமானது.தற்போது இது குருநாகல், ஹெப்பிற்றிபொல, மெனரகல போன்ற உலர் இடைவெப்பவலயங்களிலும் காலி, மாத்தறை போன்ற மாவட்டங்களிலும் பரவி வருகின்றது. இடை வெப்ப உலர்வலயங்களில் தும்புச் சோற்றி மண்ணீர் காப்புக்காகவும் சிறிய பழங்கள் உருவாகுவதை தடுப்பதற்காகவும் முதிராத மரங்கள் விழுவதை தடுப்பதற்காகவும் பாவிக்கப் படுகின்றது.

### 1.2 மண்

கடினமான களி மண் அல்லது மிகவும் மணற்பாங்காண மண் அல்லது நீர் தேங்கி நிற்கும் இடங்கள் என்பன பொருத்தமற்றவை. நன்றாக வழிந்தோடக்கூடிய கிரவலான அல்லது இருவாட்டி மணல் வகைகள் மட்டுமே பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

### 1.3 தென்னையின் வயது

அன்னாசி பயிர்ச்செய்கையின் அடிப்படைத் தேவை அதிகளவு சூரிய ஒளியாகும். அன்னாசியின் விளைச்சலைக் கூட்ட சூரிய ஒளி முக்கியமானதாகும். தென்னையின் வயது ஐந்து வருடங்களை விட குறைவாக இருக்கும் போது அன்னாசியை பயிரிடலாம். தென்னந்தோட்டங்களில் கீழ் நடுகையாக நடுவதாயின் 25 வருடங்களின் பின் அன்னாசியை நட வேண்டும். சிபார்சு செய்யப் பட்ட பொருத்தமான இனங்கள்

1. முருசி
2. கியூ

**1. முருசி வர்க்கம்**

நன்றாகப் பழுக்கும் போது உடனடி நுகர்வுக்கு எடுக்கலாம். அதிகளவு சுவை மிக்கது. மீட்சியடைந்த சிறிய பழங்கள் தெளிவாக தெரியும் கண்கள் கொண்டது. இலைகளில் முற்கள் காணப்படும். இது தென்னையின் கீழ் நடுகைக்கு பொருத்தமானது.

**2. கியூ வர்க்கம்**

இலைகளில் முள் இல்லை. முருசியின் உறிஞ்சியை விட பெரிதாக வளந்து பெரிய பழங்களை உற்பத்தி செய்கின்றது. கண்கள் தட்டையாக இருக்கும். பழுக்கும் போது அமிலத்தன்மை அதிகரிக்கின்றது. ஒரு பழம் அண்ணளவாக 4 தொடக்கம் 5 கிலோ கிராம் நிறையுடையது. இது பழச்சாறு, ஜேம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப் படுகின்றது.

## 2. நடுகை உறிஞ்சிகளின் தெரிவு

- அன்னாசி தாய்த்தாவரத்திலிருந்து இனப்பெருக்கம் செய்யப்படும். உறிஞ்சிகளால் மட்டுமே இனப்பெருக்கம் செய்யும். அச்சு, வேர் உறிஞ்சிகள் மட்டும் மீள நடுவதற்கு பயன்படுத்தப்படும்.
- அன்னாசியினை தீவிரமாகப் பாதிக்கும் வெண்மூட்டுப் பூச்சிகள் அற்ற அன்னாசி உறிஞ்சிகளைப் பயன்படுத்த வேண்டும்.
- இனப்பெருக்கப் பயன்படும் உறிஞ்சிகள் முதலாவது அறுவடையின் பின்பு தாய்த்தாவரத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் .
- 3 வருடங்களின் பின்பே தோட்டத்தில் அதிகளவு அச்சு உறிஞ்சிகளை பெற முடியும்.

## 3. நிலத்தினைத் தயார் செய்தல்

தென்னை மரத்திலிருந்து 2மீற்றர் தூரம் தள்ளி நான்கு சக்கர உழவு இயந்திரம் மூலம் அன்னாசி நட வேண்டிய இடத்தினை முட் கலப்பை கொண்டு உழலாம். வடிகான்கள் மண் அரிப்பைத்தடுக்கும்.

## 4. உறிஞ்சிகளைப்பயன்படுத்தல்

அன்னாசி உறிஞ்சிகளை நாட்டுவதற்க்கு முன்பு கிருமி பங்கசு தொற்று நீக்கி கொன்டு பரிகரிக்கப்படல் வேண்டும். “டைமிதோயேட்” 30மில்லிலீற்றரில் 10லீற்றர் தண்ணீருடன் கலந்து 5 நிமிடங்களுக்காவது அன்னாசி உறிஞ்சிகளை அமிழ்த்தி எடுக்கவும் பின்பு நிழலில் தலைகீழாக வைக்கப்படல் வேண்டும்.

பூச்சி நாசினிகளையும் பங்கசு நாசினிகளையும் கலக்க வேணாம் பங்கசு நாசினிகளைத்தவிற்பதற்கு மங்கோசெப் அல்லது ரிடோமில் பாவிக்கலாம் இப்பரிகரிப்பிற்கு பின்பு 2 தொடக்கம் 3 நாட்களில் நடுகை செய்யலாம்.

## 5. நடுகை முறைகள்

### 5.1 தனி நடுகைமுறை

தென்னைகளுக்கு இடையில் (26′ X 26′) தனி வரிசையில்

வரிசைக்கிடையில் 6 அடிதூரம் இடைவெளியும் அன்னாசி உறிஞ்சிகளுக்கிடையில் 1 1/2 அடிதூரம் இடைவெளியிலும் நேர்வரிசையாக நாட்டலாம். இம் முறையில் நடுவதற்கு ஒரு ஹெக்டயரிற்கு 8400 உறிஞ்சிகள் தேவைப்படும். (ஏக்கருக்கு 3500 உறிஞ்சிகள்)

**கியூ வர்க்கப்பழங்கள் ஏறத்தாழ 4-5kg நிறையுடையதாகவும் முருசி வர்க்கம் 2kg நிறையுடைதாகவும் இருக்கும். அன்னாசித் தோட்டத்தினை 8 வருடங்களுக்கு தொடர்ச்சியாக இலாபகரமாகப் பேணமுடியும்.**



**முதலாவது பிரயோகம் :** நட்டு ஒரு மாதத்தின் பின்பு ஒவ்வொரு அன்னாசி பயிருக்கும் 28 கிராமினை இடவும் (30-35) பயிருக்கு ஒரு கிலோ என்ற பிரமான அடிப்படையில் இரண்டாவது வருடத்திலிருந்து ஒவ்வொரு 3 மாதங்களிலும் மேற் குறிப்பிட்ட அளவுகளில் இடவும் .

பசளை இடப்படும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவும.

- மண் போதியளவு ஈரப்பதனாக இருத்தல் வேண்டும்
- முதலாவது பிரயோகத்தில் நடுகை வரிசையில் இருந்து 10 - 15 சென்ரிமீற்றருக்கு அப்பால் பசளை இடவும். பின்பு இலைகளின் அடிப்பகுதிக்கு அருகில் பசளை இடவும். ஆனால்

அன்னாசியின் உச்சிக்கு இட வேண்டாம்.

- யூரியாவினை அதிகளவில் இட வேண்டாம். இது வெண் மூட்டப்பூச்சியின் தாக்கத்தை அதிகரிக்கும்.

### 6. தென்னைக்கான பசளைப் பிரயோகம்

அன்னாசி தென்னையுடன் ஊடுபயிராக நடும்போது செய்கையாளர்கள் தென்னைக்கு உரமிடுவதை மறந்துவிடுவார்கள். எனவே தென்னையின் அடியிலிருந்து 6 அடி சுற்றுவட்டப் பரப்பினுள் 1/2 அடி ஆழம் மண்ணை கொத்தி பிரட்டிய பின் 6 அடி முடிவில் வரம்பு ஒன்றினை அமைத்து அப்பகுதி முழுவதிற்கும் 3 கிலோகிராம் APM உரத்தினை போட்டு மண்ணுடன் கலந்து விடவும்.

### 7. மண் அல்லது சோத்தி தும்பு வரம்பு

பசளை பிரயோகத்திற்குப் பின்னர் 15 தொடக்கம் 20 சென்ரி மீற்றர் உயரத்தில் மண் அல்லது சோத்தி தும்பை பாவித்து வரம்பை அமைக்கவும். இப்படி செய்வதனால் அன்னாசி ஒரு பக்கம் நோக்கி சரிவதனையும் சிறிய பழங்கள் உண்டாவதனையும் தடுக்கலாம்.

### 8. களைக்கட்டுப்பாடு

அன்னாசி செய்கையில் மண் வெட்டியினால் களைகளைக் கட்டுப்படுத்தலாம். ஒரு வருடத்தில் பல தடவைகள் களை அகற்றுதல் செய்யப்படல் வேண்டும். தொழிலாளிகள் பற்றாக்குறையின் களை நாசினி கொண்டும் கட்டுப் படுத்தலாம். (பராகுவாட், அல்லது டிரெக்ஸ் களை நாசினிகள்)

### 9. உறிஞ்சிகளின் வளர்ச்சியும், பராமரிப்பும்

முதலாவது அறுவடையின் பின்னர் உறிஞ்சிகள் விரைவாக விருத்தியடைகின்றன. பெரிய பழங்களை விருத்தி செய்வதற்காகவும் வெண்மூட்டுப் பூச்சித் தாக்கத்தை குறைப்பதற்காகவும் ஒவ்வொரு அன்னாசியிலும் இரண்டு உறிஞ்சிகளை மட்டும் வளரவிடுகிளார்கள்.

### 10. நோய்கள்

1. இளம் அன்னாசி தாவரம் வாடுதல் (Wilt)
2. மொட்டு அல்லது உச்சி பகுதி அழுகல் (Bud Rot)
3. பழம் அழுகல் (Fruit Rot)

***5.2 இரட்டைவரி நடுகைமுறை***

இந்தமுறையில் அதிகளவு உறிஞ்சிகளை நடலாம் என்பதாலும் பழங்கள் சரிந்திருப்பதனை தடுக்கலாம் என்பதாலும் தென்னைச் செய்கையாளர்கள் இதனை விரும்புகின்றனர். தென்னை இடைவெளியில் (26"ù26") இரு வரியில் இரண்டு



வரிகளாக நடலாம். அதாவது ஒரு வரியில் அன்னாசிக்கு இடையில் இடைவெளி 11/2 அடி துலீரமும் வரிசைக்கு இடையில் 2 அடி தூரமுமாக நாட்டலாம். இதே மாதிரி இடுத்த வரியினை நடும் போது 8 அடி தூரம் தள்ளி ஆமற்கூளியவாறு நடலாம். ஒரு ஏக்கருக்கு 5000 உறிஞ்சிகளும் ஹெக்டயராக இருப்பின் 12000 உறிஞ்சிகளும் தேவைப்படும்.

***5.3 பல்வரிமுறை***

இம்முறையில் ஏக்கருக்கு 10000 உறிஞ்சிகளும் ஹெக்டயருக்கு 24000 உறிஞ்சிகளையும் நாட்டலாம். ஏனைய முறைகளை விட அதிகமான வருமானத்தினைத் தந்த போதிலும் இம்முறையில் இரு வருடத்திற்கு மட்டுமே நீடித்திருக்கும். இம்முறையில் களை பிடுங்கும் போதும் பசளைப் பிரயோகம் செய்யும் போதும் செய்கையாளர்கள் கையுறை பாவிக்க வேண்டும்.

***10cm ஆழமான குழிகளில் நடுகை செய்ய வேண்டும்.***

உறிஞ்சிகளை நிமிரத்தி நாட்டல் விரைவான வளர்ச்சி ஏற்படும். ஒரே சீரான தோட்டத்தினை செய்வதற்கு ஒரே அளவிலான உறிஞ்சிகளை நடவும்.

### பசளைப்பிரயோகம்

***6.1 அன்னாசிக்கான பசளைப் பிரயோகம்***

NPK என்பன 17-7-31 என்ற விகிதத்தில் கலந்து பசளையிடலாம். அதாவது 100 கிலோகிராம் கலவை தயாரிப்பதற்கு பின்வரும் அளவுகளில் கலக்கவும்.

யூரியா 24kg
பாறை பொசுபேற்று (Rock Phospate) 25kg
மியூரியற் ஒப்பொட்டாசு MOP 51kg

### 11. பீடைகள்

1. வெண் மூட்டுப்பூச்சி (Mealy Bug)
2. துளைப்பான்கள்

### 12. விளைச்சல்

நன்றாக விருத்தியடைந்த கியூ வர்க்கப்பழங்கள் ஏறத்தாழ 4-5kg நிறையுடையதாகவும் முருசி வர்க்கம் 2kg நிறையுடைதாகவும் இருக்கும். வாடல் நோய் இல்லாமல் இருந்தால் அன்னாசித் தோட்டத்தினை 8 வருடங்களுக்கு தொடர்ச்சியாக இலாபகரமாகப் பேணமுடியும். அன்னாசி ஒற்றை அல்லது இரட்டை வரியில் நடப்பட்டிருந்தால் 5 வருடங்களுக்கே நீடித்திருக்கும். இது பல வரிசை முறையாக இருப்பின் 2 வருடங்களுக்கே பேணமுடியும்.

- இரு தனிநிறைகள் - 10 மெற்றிக்தொன்/ஹெக்டேயர்
- 3 தனி நிறைகள் 15 மெற்றிக்தொன்/ஹெக்டேயர்
- இரண்டு தனி நிறைகளும் 20 ஓர் இருவரிசை நிறைகளும் - மெற்றிக்தொன்.

---

# ‘அப்புக்குட்டி அங்கிளும் அறுபது முட்டைகளும்’


சிவானந்தராஜா கோவற்சன்
kowatsan@gmail.com



என்னென்ன விடயங்களில் உலகசாதனை படைக்கலாம்? ஓடுவது, அடிப்பது, பிடிப்பதில் மட்டுமல்ல, குடிப்பதிலும் உலகசாதனை படைக்கலாமென சொல்கிறார் நம் ஊர்க்காரர் ஒருவர். வித்தியாசமான சாதனைகளை படைக்கும் நம்மவரை அறிமுகப் படுத்த வேண்டாமா? உடனே கிளம்பினோம்.

இளவாலையைச் சேர்ந்த ‘அப்புக் குட்டி’ எனச் செல்லமாய் அழைக்கப்படும் அப்புக்குட்டி ராசேந்திரன் தான் நம் நாயகன். சாதனைக்கு ஏது வயது? தனது 53 வயதில் எதைச் சாதித்து விட்டார் இவர்? மக்கள் மனதில் சாதனை நாயகனாக இடம்பிடிக்க என்ன செய்தார்?

பன்னாலை வீதியில் விளான் நோக்கிச் செல்கையில் ஓர் கடை. பலசரக்குச் சாமான்கள் விற்கும் சற்றுப் பெரிய கடைத்தொகுதி. கடையின் முன்னால் ஒரு கதிரையில் இருந்து ஏதோ சில பைகளை பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தார் ஒரு சாதாரண தோற்றம் கொண்ட அம்மனிதன். குறிப்புகளின்படி அவர்தான் அப்புக்குட்டியாக இருக்க வேண்டும். மோட்டார் வண்டியை



விட்டிறங்கி அவர் அருகே சென்று, ‘அப்புக்குட்டி என்றது’ என இழுக்க...

‘ஓம்... நான் தான் வாங்கோ...’

‘என்ன அங்கிள் ஒரு அறுபது முட்டை எடுக்கலாமா’ கலாய்ப்பதாக நினைத்து கேட்க, அவர் ‘மெகா கலாய்ப்பாளானாக’ இருந்தார். ‘எடுக்கலாம். ஆனா ஒரு மணி நேரம் தலைகீழாக நிக்கோனும் நீர்.. பறுவாயில்லயா’

அவரது கலாய்ப்பில் கலங்கிப் போய், பத்திரிகையில் இருந்து வருகிறேன் என ‘சரண்டர்’ ஆகிவிட்டேன். ‘எந்த மீடியா’ என சாதாரணமாக கேட்டார். சொன்னேன்.

முட்டை குடிப்பதில் உலக சாதனை படைத்த நம்மவரை சந்திக்கப்போன கதை இதுதான். இனி அவரது கதை.

‘இருபது வயதில அரபு நாடொன்றில் வேலை பார்த்த போது நாங்கள் வேலை செய்த கம்பனி ஊழியர்களிற்கிடையில் பொழுதுபோக்காக ஒரு போட்டி நடந்தது. அதிக முட்டைகளை குடிப்பது யார் என்பதுதான் போட்டி. ஒவ்வொருவராக முட்டைகள் குடித்து ஓய, நான் களத்தில் இறங்கி முப்பது முட்டைகளை அலாக்காக குடித்து விட்டேன்’ என சிரிக்கிறார்.

அந்த முப்பது முட்டைகளும் தான் அப்புக்குட்டியின் மனதில் சாதனை செய்ய வேண்டுமென்ற வெறியை மனதில் பொரித்துள்ளன. கூடவே நண்பர்களும் தீனி கொடுத்துள்ளனர். ‘முதல் தரமே முப்பது முட்டை குடித்தனீ.. முயன்றால் நிச்சயம் சாதிப்பாய்’ என அவர்கள் கொடுத்த ஊக்கமும் அவரது பயணத்தில் முக்கியமான காரணம்.

‘தலைகீழாக நிற்பதிலும் சிறு வயது முதலே ஆர்வம். ஸ்கூல்ல, வீட்டிலனு அப்பப்போ தலைகீழா நின்டு பிறக்டீஸ் பன்றனான். அம்மாட்ட அடியும் வாங்கி இருக்கன்’ என அடுத்த விடயத்துடன் முடிச்சுப்போட்டார்.

ஆம். தலைகீழாக நிற்பதில் தற்போதைய உலகசாதனை ஏழு மணி நேரம். ஆதனை விரைவில் முறியடிப்பேன் என நம்பிக்கையுடன் கூறுகிறார்.

‘திடீரென்டு தலைகீழா நிக்க முடியாது கனநேரம். தலைக்குள்ள இரத்தம் நேரடியா இறங்குறதால கண்ணெல்லாம் சிவந்து தலை கிர்ர் கிர்ர் என்டும். படிப்படியா பயிற்சி செய்து கொண்டு வரோனும்... சாதனை என்றது சும்மா இல்ல. ஒரு சாதனையாளனுக்கு பொறுமை என்பதும் கடின பயிற்சி என்பதும் மிக மிக முக்கியம்’ என்கிறார்.

அப்புக்குட்டி உண்மையிலேயே ஆச்சரியமான மனிதர்தான். முட்டை குடிப்பது, தலைகீழாக நிற்பதென இரண்டு வேறுவேறு விடயங்களில் சாதனை படைப்பதென்ற உறுதியுடன் இருக்கிறார். வேறுவேறு விடயங்களில் சாதனை படைக்க முயல்வது சிரமமாக இல்லையா என்றால், வெகு சாதாரணமாக மறுக்கிறார்.

‘அப்படி இல்லை. ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொரு திறமை கண்டிப்பா இருக்கும். நமக்குள்ள ஒளிஞ்சிருக்கிற திறமையை கண்டுபிடிச்சு சாதனையாய் மாத்துவதே மகத்துவம்’.

‘சைனாக்காரன் ஒருத்தன் நூற்றுப் பத்து முட்டைகளைக் குடிச்சிருக்கான். கடைசியா நான் குடிச்ச முட்டைகள் அறுபது. கண்டிப்பா கொஞ்ச நாள்ள அந்த சாதனையை முறியடிப்பேன்’ என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

‘வயது வெறும் ஐம்பத்து மூன்று தான். நான் இன்னமும் சாதிக்க நிறைய இருக்கிறது. இளைய தலைமுறைக்கு சாதனை முயற்சிகளில் நான் ஒரு பாடமா இருக்கனும். அடுத்த தடவை நான் 100 க்கும் அதிகமான முட்டைகளை குடித்து உலக சாதனை படைப்பேன். தலைகீழாக நிற்பது இப்போதெல்லம் முன்னை



விட சுலபமாகிவிட்டது. அதிகநேர பயிற்சிகள் மேற்கொள்கிறேன். அடுத்தமுறை தேசிய அளவை மிஞ்சும் என் சாதனை’ என்றுவிட்டு, ஒரு பீடிகைபோடும் பார்வை பார்த்தார்.

மிச்சத்தையும் ‘சொல்லுங் கண்ணை சொல்லுங்க’ என்றபோது, இன்னொரு திரியை பற்ற வைத்தார்.

‘பாக்குநீரிணை மூலமாக இலங்கையில் இருந்து இந்தியா வரை நீந்தி செல்லும் சாதனையை மிகவிரைவில் இவ் உலகம் பார்க்கும்’ என்றார்.

‘வீ ஆர் வெயிட்டிங் அப்புக்குட்டி அங்கிள்.... வீ நோவ் நீங்க சாதிப்பீங்க’...



# பட... பட பாரிஸ்

நாடியா
nadiyanice@yahoo.com

பாரிசை ஐ.எஸ் தீவிரவாதிகள் படபடக்க வைத்தார்களா? குளவிக்கூட்டில் தெரியாத்தனமாக கை வைத்துவிட்டார்களா? இதுதான் இன்றைய திகதியில் முழு உலகத்தின் கேள்வியாகவும் உள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் புகுந்த ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் நடத்திய கோரத்தாக்குதல், அதனைத் தொடர்ந்து சிரிய வலயத்தில் உள்ள ஐ.எஸ் நிலைகளை அதிசக்தி வாய்ந்த குண்டுகளால் பிரான்ஸ் பிளக்க ஆரம்பித்ததும்தான் இன்றைய உலகத்தின் 'ஹொட் ரொபிக்'.

கடந்த 13ம் திகதி. வழக்கம் போல பிரான்ஸ் பரபரப்பாக இருந்தது. அன்றையதினம் ஜேர்மன் அணியுடன் தமது நாட்டு அணி ஆடும் கால்பந்தாட்டத்தை கண்டுகளிக்க பெருமளவு ரசிகர்கள் கூடியிருந்தனர். பாரிசின் ஸ்டேட் டி பிரான்ஸ் மைதானத்தில் கிட்டத்தட்ட எண்பதாயிரம் பேர் குவிந்திருந்தார்கள்.



**பெ**ல்ஜியத்தை சேர்ந்த அப்துல் ஹமீது (வயது 28) என்பவன்தான் இந்த தாக்குதலின் மூளையாக செயற்பட்டுள்ளான். பெல்ஜியம் பிரஜையான இவன் சிறுவயதிலேயே சிரியாவிற்கு தப்பிச் சென்றுவிட்டான். அவனது விசுவாசத்தால் ஐ.எஸ் தலைவர்களே ஆடிப்போய்விட்டனராம். இப்போது அந்த இயக்கத்தின் முக்கிய தளபதி. சிரியாவில் உள்ள ஐ.எஸ் முகாம் ஒன்றில் இவனது தலைமையில்த்தான் தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இன்றைய திகதியில் பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்களின் முதல்குறியாக ஆசாமிதான் உள்ளான்!

அதில் ஒருவர் பிரான்ஸ் ஜனாதிபதி ஹொலன்டே என்பதுதான் கூடுதல் பரபரப்பு.

போட்டி தொடங்குவதற்கு 15 நிமிடங்கள் முன்னர் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டு இரண்டு தீவிரவாதிகள் நுழைய முயன்றுள்ளனர். உடல் முழுவதும் பயங்கர வெடிகுண்டுகளை அவர்கள் கட்டியிருந்தனர். எனினும், வாயிலில் சோதனை செய்த காவலர்களிற்கு அவர்களில் சந்தேகம் ஏற்பட, சிக்கிக்கொண்டனர்.

அப்பொழுது பிரான்ஸ் நேரம் முன்னிரவு 9.20.

போட்டி ஆரம்பிப்பதற்கு இன்னும் 15 நிமிடங்கள்தான் இருக்கிறது. ஜனாதிபதியும் மைதானத்திற்குள் வந்துவிட்டார். வாயிலில் பெரும் வெடியோசை. மைதானத்திற்குள் இருந்தவர்கள் அதனை பெரிதாக எடுக்கவில்லை. உடனடியாக சுதாகரித்த காவலர்கள், ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பினார்கள். இரண்டு தீவிரவாதிகள் மனித வெடிகுண்டாக வெடித்து சிதறிவிட்டனர் என்ற தகவலையடுத்து ஜனாதிபதி ஹொலன்டே பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டார். அதன் பின்னர் நடந்ததெல்லாம் இரத்தம்... சதைச்சிதறல்... அழுகுரல்தான்.

கால்பந்து மைதானம், இசையரங்கம், ஹோட்டல்கள் என மொத்தம் ஆறு இடங்களில் வரிசையாக நடந்த வெடிகுண்டுத்தாக்குதலால் மொத்த பிரான்சுமே நிலைகுலைந்து போனது. குண்டோசையும், அப்பாவிகளின் அலறலும் முழுஉலகத்திலும் எதிரொலித்தது. அதன்பின்னான சிலநாட்கள் உலக ஊடங்களின் முக்கிய செய்தியாக பிரான்சே இருந்தது.

ஏழு பயங்கரவாதிகள் மூன்று குழுக்களாக பிரிந்து இந்த கொடூரத்தை அரங்கேற்றியுள்ளனர். தாக்குதல் நடந்த சிலமணி நேரங்களிலேயே ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் தாக்குதலிற்கு உரிமைகோரினார்கள். அவர்களின் பெல்ஜியம் பிரிவு தாக்குதலை ஒருங்கிணைத்திருந்தது. ஐ.எஸ் எடுத்த நரவேட்டையில் 129 பேர் கொல்லப்பட்டனர். 350 பேர் படுகாயமடைந்தனர். அண்மைய வருடங்களில் தரையில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலால் அதிகளவான மக்கள் கொல்லப்பட்ட முக்கிய சம்பவங்களில் இதுவுமொன்று.

தாக்குதலிற்கு உரிமைகோரி ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் பாலியல் தொழிலுக்கும், ஆபாசத்துக்கும் தலைநகரான பாரிஸ் மீது, இஸ்லாமிய நாடுகள் மீது தாக்குதல் நடத்தும் நாடுகள் மீது தாக்குதல் நடத்தியது சரிதான் என்று குறிப்பிட்டிருந்தனர்.

முழு ஐரோப்பியநாடுகளுடனும் கைகோர்த்துக் கொண்டு பிரான்ஸ் புலனாய்வு அமைப்புக்கள் தீவிர புலனாய்வில் இறங்கின. விளைவு, தாக்குதல் பற்றிய அத்தனை விபரத்தையும் விரல்நுனியில் சேகரித்துக் கொண்டு வேட்டையில் இறங்கினர்.

தற்போதைய நிலையில் தாக்குதலாளிகள் பலரும் அடையாளம் காணப்பட்டு விட்டனர். பத்தக்லேன் இசையரங்கில் வெடித்துச் சிதறிய பயங்கரவாதியின் உடலின் அருகில் இருந்து சிரிய பாஸ்போர்ட் கைப்பற்றப்பட்டுள்ளது. அகமது அல்முகமது (26) என்பவனின் கதை அதிரவைப்பது.

கடந்த ஒக்ரோபர் 3ம் திகதி கிரீஸ் நாட்டின் லெரோஸ் தீவில் கரையொதுங்கிய சிரிய அகதிகள் படகிலிருந்து ஐரோப்பவிற்குள் காலடியெடுத்து வைத்த அகதிகளில் ஒருவன் அவன். அங்கிருந்து குரோசியா, ஒஸ்திரியாவை நடைபயணமாக கடந்து செர்பியாவிற்கு சென்றிருக்கிறான். அங்கு குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளான். இதுதான் அவன் பற்றிய இறுதி பதிவு. கடைசியில் மனித வெடிகுண்டு சிதறலாக மீட்கப்பட்டுள்ளான். எனினும், ஒரு மாதகால தொடர் நடைபயணம் செய்து பிரான்சை அடைந் திருக்கலாமென புலனாய்வு அமைப்புக்கள் கருதுகின்றன. இதே கதைதான் இன்னொரு எகிப்திய பாஸ்போர்ட்காரனினதும். எனினும், அந்த பயங்கரவாதியின் அடையாளத்தை பொலிசார் இன்னும் வெளிப்படுத்தவில்லை.

தாக்குதலிற்கு பயன்படுத்தப்பட்ட கார் பெல்ஜியத்திலிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளது. தாக்குதலின் பின்னர் தப்பிச் செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிசார் அதனை மீட்டனர். புலனாய்வு விசாரணைக்கு கார்தான் வழிகாட்டி. அதன்பின்னர்தான் வரிசையாக பயங்கரவாதிகள் பற்றிய விடயங்கள் வெளிப்பட்டன.

தாக்குதலின் பின்னர் மொத்த பிரான்சும் சல்லடையிடப்படுகிறது. பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் யாரையும் விசாரணைக்குட்படுத்தலாம். சந்தேகத்தின் பேரில் அங்கு கைதுகள் தொடர்கிறது. தாக்குதல் நடந்த சிலநாளின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100ஐ கடந்திருந்தது. இவர்களில் பலர் தாக்குதலுடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

தாக்குதலாளிகள், குற்றத்துடன் தொடர்புபட்டவர்களாக உறுதி செய்யப்பட்டவர்கள் பலரும் பிரான்ஸ் உளவுத்துறையின் கண்காணிப்பு பட்டியலில் இருந்தார்கள் என்பதுதான் பிரான்சை சங்கடப்படுத்தும் விடயம். பிரான்ஸ் உளவுத்துறையின் கண்ணில் மண்ணைத் தூவிய ஐ.எஸ்இன் சாமர்த்தியம் நிச்சயம் அச்சுறுத்தலானதுதான்.


பாரிஸ்வெடியோசைகள் அடங்க முன்னரே சிரியா அதிரத் தொடங்கி விட்டது. ஐ.எஸ் நிலைகள் மீது பிரான்ஸ் அதிபயங்கர வான் தாக்குதல்களை ஆரம்பித்துவிட்டது. ஐ.எஸ் பயங்கரவாதிகளை இரக்கமின்றி வேட்டையாடுவோம் என பிரான்ஸ் ஜனாதிபதி சூளுரைத்துள்ளார். இதன் எதிரொலிதான் சிரியா அதிர்வுகள். சிரியாவின் ஐ.எஸ் கோட்டையான ரக்கா கிட்டத்தட்ட துவம்சம் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. ஏற்கனவே அங்கு ரஷ்யா சன்னதமாடிக் கொண்டிருக்கிறது. எகிப்தில் ரஷ்ய விமான விபத்தும் ஐ.எஸ் இன் கைவரிசையென்பது வெளிப்பட்டுவிட்டது. சிரியாவிற்குள் நுழைய நல்ல வாய்ப்பை பார்த்துக் கொண்டிருந்த ரஷ்யாவிற்குகதவைத்திறந்துவிட்டுள்ளனர் பயங்கரவாதிகள். மொத்த விளைவும் அப்பாவிச்சனங்களின் தலையில்த்தான் விழப்போகிறது.

உலகளாவிய பயங்கரவாதத்திற்கெதிரான போர் பல இயக்கங்களையும், தலைவர்களையும் அழித்தது. என்றாலும் மத்திய கிழக்கு வலயத்திலிருந்து உற்பத்தியாகும் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுக்கப்பட்டதாக எந்த தரவுமில்லை. தனிமனித, சிறுகுழுக்களின் தாக்குதல் அச்சத்தை எந்த தொழில்நுட்ப, பாதுகாப்பு ஏற்பாடுகளாலும் தடுக்க முடியாதென்பதே வரலாறு நமக்கு சொல்லித்தந்துள்ள பாடம். அல் ஹைடா, தலிபான் வரிசையில் நாளை ஐ.எஸ் இன் பல்லையும் உலகம் பிடுங்கலாம். நாளையே இன்னொரு குழு கிளம்பி வராதென்பதற்கு என்ன உத்தரவாதம்?

பயங்கரவாதத்தின் தோற்றுவாய்களை அடையாளம் கண்டு அவற்றை சரி செய்யும் வரை, உலகம் பாதுகாப்பற்றதென்பதே பாரிஸ் தாக்குதல் உணர்த்தும் செய்தி.



**ச**லா அப்சலாம் என்ற இந்த தீவிரவாதி பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டு உயிர்தப்பியவன். இவனது இன்னொரு சகோதரன் பிராகிம் அப்சலாம் வெடித்து சிதறிய தற்கொலைதாரிகளில் ஒருவன். தாக்குதலின் பின்னர் சலா அப்சலாம் காரில் தப்பிச் சென்றபோது பொலிசார் வழிமறித்துள்ளனர். எனினும், அவனிடம் ஆயுதங்கள் எதுவும் இல்லாததால் சந்தேகம் எழாமல் விட்டுவிட்டனர். பெல்ஜியத்தின் பிரசல்ஸை பிறப்பிடமாக கொண்டவன். தற்போது பிரான்ஸ் குடிமகன். பின்னர் பெல்ஜியத்திற்கு தப்பிச் சென்று அங்கு பதுங்கியிருந்துள்ளான். அவன் பதுங்கியிருந்த வீட்டை சுற்றிவளைத்து, கண்ணீர்ப்புகை பிரயோகித்து கைது செய்துள்ளனர்.



## நம்மூர் குசும்பர்

**பா**ரிஸ் பதகளிப்பில் உலகமே இருக்க, நம்மூர் பொதுபலசேனா உள்ளூரில் ஒரு குண்டை வெடிக்க வைத்துள்ளது. இன்னும் ஒரு வருடத்தில் இலங்கையில் ஐ.எஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள் என பரபரப்பை கிளப்பியுள்ளனர். மைத்திரி, ரணில் கூட்டாட்சியில் தமிழ்கைதிகள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். நாடே பாதுகாப்பில்லாமல் இருக்கிறது. இப்படியான நிலை நீடித்தால், இன்னும் ஒரு வருடத்தில் இலங்கையிலும் 'டப்பு டப்பு'மாம்.



## ஆளுக்கொரு போத்தல்

இது தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் நடந்தது. ஊரெல்லாம் வெள்ளத்தில் உறைந்திருக்க, ஒருவீட்டு கிணற்றுத்தண்ணீர் திடீரென சுடுநீராக மாறிவிட்டது. காட்டுத்தீயாக விடயம் பரவ, ஒருமுறை தொட்டுப்பார்க்க ஊரே கூடிவிட்டது. பிறகென்ன, வந்த இடத்தில் ஆளுக்கொரு போத்தலும் அள்ளிச் சென்றார்கள்.



## பாம்பு பக்தி

வல்வைவெளியிலுள்ள சிறிய ஆலயத்தில் கடந்த வாரம் பலரும் மெய்மறந்து நின்றார்கள். என்னவென எட்டிப்பார்த்தால் ஒரு பாம்பு. அடைமழை குளிரில் மரத்துடன் ஒட்டிக்கொண்டு குளிர் காயந்து கொண்டிருந்தது. அவதாரம், கடவுள் என ஆளாளுக்கு எடுத்துவிட, அந்த பகுதியே பக்தியில் சிலிர்த்து நின்றது.



## என்ன கொடுமை சார்!

மெக்சிக்கோவை சேர்ந்த இந்த யுவதிக்கு நடந்த கொடுமையை பாருங்கள். பலவந்தமாக பாலியல் தொழிலில் தள்ளப்பட்ட கார்லா ஜெசின்டோ என்ற இந்த யுவதிக்கு தற்போதுதான் 23 வயதாகிறது. 4 வருடங்கள் பாலியல் தொழில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். தனது கொடுமையான கடந்த காலத்தை சி.என்.என் தொலைக்காட்சியில் விபரித்தபோது, நாளொன்றிற்கு 30 இற்கு குறையாதவர்களால் நாலு வருடத்தில் 43,200 தடவைகள் சீரழிக்கப்பட்டதாக அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளார்.

## தற்கொலைக்கு முயன்றுள்ள பெண்

தற்கொலை செய்யும் நோக்கத்துடன் நில்வள கங்கைக்குள் குதித்த பெண்ணொருவர் பின்னர் மனம்மாறி கரையேறயுள்ளார். இந்த பெண்ணின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து யாருக்கெல்லாம் அழைப்பை எடுத்திருந்தார் என சோதிக்கப்போவதாக கணவன் கூறியதையடுத்தே தற்கொலைக்கு முயன்றுள்ளார். யாரும் இவரை காப்பாற்ற முயலவில்லை. நீச்சல் தெரிந்த இவர் பின்னர் தானாக கரையேறினார்.



## காதல் விபரீதம்!

திரைப்படங்களில் நடப்பதைபோன்ற அதிர்ச்சி சம்பவமொன்று அண்மையில் நடந்தது. கடற்படை சிப்பாயொருவர் தனது காதலியை கண்டபடி சுட்டுக்கொன்றுவிட்டு, தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். பல்கலைகழகத்தில் பணிபுரியும் சமிலா பிரசானியென்ற மாத்தறை யுவதியே கொல்லப்பட்டுள்ளார். தனது காதலன், இயல்பான மனநிலையுடன் இருக்கவில்லையென தெரிந்து, அவரை விட்டு விலகியதுடன், அவரை மனநல வைத்தியரிடம் அழைத்து செல்ல முயன்றிருக்கிறார். எனினும் அந்த நடவடிக்கைகள் பொறுக்காமல் காதலன் இந்த விபரீத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.



## என் புருசன் எனக்கு மட்டும்

தமிழகத்தின் கோவையில் நடந்த சம்பவம். 19 வயதான இளம்பெண்ணொருவர் வேறு சாதியை சேர்ந்த வாலிபர் ஒருவரை காதல் கல்யாணம் செய்துள்ளார். பின்னர் வாடகை வீடொன்றில் தங்கியிருந்துள்ளனர். இதனை எப்படியோ மோப்பம் பிடித்த மாப்பிள்ளை வீட்டார் அங்கு வந்து அவரை அழைத்துச் சென்றுவிட்டனர். பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. அவரை மீட்டுத்தருமாறு கொட்டும் மழைக்குள்ளும் கலெக்டர் அலுவலகத்தின் முன் தர்ணாவில் ஈடுபட்டார்.



## பக்திமழை

முழுநாட்டையும் துவம்சம் செய்திருந்தது கடந்தவார மழை. மழையென்றால் பேய்மழை. அந்த மழையொரு பக்கம் பெய்து கொண்டிருக்க, இந்த பெண்மணி ஒரு பக்கம் அங்கப்பிரதட்டை அடித்துக் கொண்டிருந்தார். கடந்த வாரம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடந்த சம்பவம். நேர்த்திக்கடனை சொன்னபடி முடிக்க வேண்டுமென்பதற்காக இந்த மூதாட்டி அடைமழையிலும் அங்கப்பிரதட்டை செய்தார்.









இப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 22.11.2015 அன்று வெளியிடப்பட்டது